www.gnanam.info
www.gnanam.lk

மே 2024

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை 288

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

விலை :
ரூபா 100/=



யாழ் மாநகர சபை
13 MAY 2024

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் நாணயங்கள்...



ஞா.பா.

இலங்கைக்கும் முக்கியமாக யாழ்ப்பாணத்துக்கும் நந்திக் கொடிக்குமான தொடர்பு பல நூற்றாண்டுக்கு நீண்டு செல்லும். சுதந்திரத்துக்குப்பின் 1948ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி முதன்முதலாக டி. எஸ் சேனாநாயக்க சிங்கக் கொடியை கொழும்பிலே ஏற்றியபோது, இச்செயலை கண்டித்து யாழ்ப்பாணத்திலே நந்திக்கொடி ஏற்றப்பட்டமை வரலாறு ஆகும். அதுமட்டுமன்றி அக்காலத்திலே கொழும்பிலேயிருந்த சில தமிழ்ப் பிரமுகர்களும் தமது வாகனங்களில் நந்திக்கொடியைப் பறக்கவிட்டார்கள் என்ற பதிவுகள் உள்ளன. அதன்பின்னர் தனிப்பட்ட குழு ஒன்று அமைக்கப்பெற்று இரண்டு ஆண்டுகளுக்குப்பின்னர் 1950ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் சிறுபான்மைச் சமூகத்தைக் குறிக்கும் சில மாற்றங்களுடன் சிங்கக்கொடியை இலங்கையின் தேசியக் கொடியாக அக் குழுவானது பரிந்துரை செய்தது. அதன்பின்னரும் சிங்கக் கொடியிலே காலத்துக்குக்காலம் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பெற்றுள்ளன.



The nandi flag which was hoisted in protest in North, when Prime Minister D.S.Senanayake hoisted the lion flag in February 4th 1948.

- Ancient Flags of Sri Lanka by
T.M.G. S. Silva
Fist Edition 2005
Page No - 46

நந்தி இலச்சினையானது இலங்கையில் வாழும் சைவ – இந்து சமயத்தைப் பின்பற்றும் சிறுபான்மைத் தமிழ்ச் சமூகத்துடன் தொடர்புறுவதால் பல சமூகத்தினர் வாழும் இலங்கை நாட்டின் தேசியக்கொடியாகப் பரிந்துரைக்கப்பெறவில்லை. நந்தி இலச்சனையானது இந்துக்கடவுள் சிவபெருமானின் இலச்சினையாக அமையும் பதிவினை திருவிளையாடல் புராணத்திலே கண்டுகொள்ளலாம். முப்பத்து நாலாவது திருவிளையாடலாக 'விடை இலச்சினையிட்ட படலம்' அமைகின்றது. 'காடுவெட்டிய சோழன்' என்ற காரணப் பெயர்கொண்ட சோழமன்னன் ஒருவன், மதுரை மீனாட்சி கோயிலை தரிசிக்க ஆசைப்பட்டான். ஆனால், சோழ மன்னன் மதுரைக்கு வருவதை பாண்டிய மன்னன் விரும்பமாட்டான். இதனால், சிவபெருமான், சித்தர் ஒருவர்போல வடிவம் தாங்கி சோழ மன்னனை அழைத்துவந்து கோயிலின் வடக்குக் கதவைத் திறந்து தரிசனம் செய்யும்வழிசெய்தார். தரிசனம் முடிந்தபின்னர், அக்கதவிலே தமது விடை (நந்தி) இலச்சினையைச் சிவபெருமான் பொறித்தார். அடுத்தநாள் மற்றைய முப்புறத்துக் கதவுகளிலும் பாண்டியனின் மீன் இலச்சினைகள் இருக்க வடக்குக் கதவிலே மாத்திரம் நந்தி இலச்சினை இருந்தது. இக்குழப்பத்தை பாண்டியனின் கனவிலே தோன்றி சிவபெருமான் தெளிவித்தார், என்கிற புராணச் செய்திகளைத் திருவிளையாடல் புராணத்திலே கண்டுகொள்ளலாம்.

*வந்து நம்மை வழிபட வேண்டினான்*
*இந்த வாயில் திறந்து அமைத்து இன்னருள்*
*தந்து மீளவிடுத்துப்பின் தாள்கொளீஇ*
*நந்தம் **மால் விடை** பொறித்தோம்*

(திருவிளையாடல் புராணம் – விடை இலச்சினையிட்ட படலம் – பாடல் 26)

*மன்று கண்டருளும் கங்கை ஆரியன் **விடையின் வானி***
*ஒன்று கண்டு உடைந்த மன்னர் ஒளியுறா முகங்கள் தம்மை*
*இன்று கண்டதும் அவ் வேந்தர் எழில்கோடும் முகங்கள் எல்லாம்*
*அன்று கண்டதும் ஒக்கும் அல்லது என் அறைவதம்மா*

(அரசகேசரி இரகுவம்மிசம் – மாலையீட்டுப் படலம் – பாடல் – 107)

நந்திக்கொடியை யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்திகள் தமது கொடியாகக் கொண்டிருந்தனர். இதுபற்றிய இலக்கியப் பதிவினை அரசகேசரிப் புலவர் பாடிய, இரகுவம்சக் காவியத்திலே கண்டு கொள்ளலாம். மாலையீட்டுப் படலத்திலே இந்துமதி ஒவ்வொரு மன்னர்களையும் தெரிவு செய்யாமல் கடந்து செல்லும்போது அவர்களின் முகங்கள் எவ்வாறு வாட்டம் கண்டன என்பதற்கு அரசகேசரி உவமை கூறுகின்றார்.

(குறிப்பு : இக்கட்டுரையில் காட்டப்பட்ட நாணயங்கள் யாவும் ஆசிரியரின் தனிப்பட்ட சேகரிப்பிலிருந்து)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

ஞானம்
ஒளி:24
சுடர்:12
288

# பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

ஆசிரியர் குழு

ஆசிரியர், ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர் : ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்

ஓவியர்: கிறிஸ்டி நல்லரெத்தினம்

தொடர்புகளுக்கு

தொ.பேசி. ☞ 0094-11-2586013
0094-77-7306506

தொ.நகல் ☞ 0094-11-2362862

இணையம் ☞ www.gnanam.info
www.gnanam.lk
தளம்.ஞானம்.இலங்கை

மின்னஞ்சல் ☞ editor@gnanam.info
editor@gnanam.lk

அஞ்சல் ☞ 3B-46th Lane, Colombo-6,
Sri Lanka

வங்கி விபரம் ☞ T. Gnanasekara Iyer
Acc. No. - 009010344631
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX
(மணியோடர்மூலம் சந்தா அனுப்புபவர்கள் வெள்ளவத்தை தபாற் கந்தோரில் மாற்றக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்)

சந்தா விபரம் ☞ Sri Lanka
ஒரு வருடம் :ரூ 1,000/=
ஆறு வருடம் :ரூ 5,000/=
ஆயுள் சந்தா :ரூ 20,000/=

| | ஒரு வருடம் |
|---|---|
| Australia (AU$) | 50 |
| Europe (€) | 40 |
| India (Indian Rs.) | 1250 |
| Malaysia (RM) | 100 |
| Canada ($) | 50 |
| UK (£) | 40 |
| Singapore (Sin. $) | 50 |
| Other (US $) | 50 |

⊙ ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
⊙ புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி, ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
⊙ பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
⊙ படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.

# இதழினுள்ளே.....

⊙ **கவிதைகள்**
கனகசபாபதி செல்வநேசன் 10
உடப்பூர் வீரசொக்கன் 13
ஜின்னாஹ் 17
சமரபாகு சீனா உதயகுமார் 18
சிகரம் பாரதி 34
கவிவர்ணா 45

⊙ **சிறுகதைகள்**
ஷெல்லிதாசன் 03
ராதா 14
கென் லிய்வ் / சு.முரளிதரன் 22
(மொழிபெயர்ப்புச் சிறுகதை)
சூசை எட்வேட் 28
(குறுங்கதை)

⊙ **கட்டுரைகள்**
பேராசிரியர் சபா ஜெயராசா 11
வாகரைவாணன் 19
ஆவூரான் சித்ரா சின்னராஜன் 29
கு.சின்னப்பன் 35

⊙ **நூல் விமர்சனம்**
வெலிகம ரிம்ஸா முஹம்மத் 42

⊙ **சமகால இலக்கிய நிகழ்வுகள்**
கலாபூஷணம் கே. பொன்னுத்துரை 46

⊙ **வாசகர் பேசுகிறார்** 48

பொதுசன நூலகம்
14 MAY 2024
யாழ்ப்பாணம்

யாழ் மாநகர சபை
13 MAY 2024
நூலகப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பக்கம்

## பெருகி வரும்
## போதைப் பொருள் பாவனை

எமது நாட்டில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருவதை தினம்தினம் பத்திரிகைச் செய்திகளில் பார்க்கிறோம். பாடசாலை மாணவர்களிடையேகூட ஒரு சிலர் போதைப்பொருள் பாவனைக்குள்ளாகி இருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

போதைப்பொருள் பாவனையால் தனிமனித வாழ்விலும் சமூகத்திலும் பெரும் சீரழிவுகள் ஏற்படுகின்றன.

போதைப் பொருளுக்கு அடிமையானவன் தன்னிலை மறந்து உடல் உளப்பாதிப்புக்கு உள்ளாகின்றான். அவன் தனது அறிவை இழக்கிறான். அவனது உடல் பலவீனப்படுகிறது. உள்ளம் கெட்டுவிடுகிறது. போதை தலைக்கேறியவன் உறுதி தளர்ந்து நிற்கமுடியாமல் ஆடிஅசைந்து விழுந்து விடுகிறான். அதன்பின் அவன் எதையும் உணர்வதில்லை. இளைஞர்கள் திடகாத்திரமாக, ஆரோக்கியமாக, ஆளுமையுள்ளவர்களாகத் திகழ்வதற்கு போதைப்பொருள் பாவனையும் அதனால் ஏற்படக்கூடிய தீய நடத்தைகளும் தடையாக மாறிவிடுகின்றன. இளைஞர்களின் எதிர்காலக் கனவுகள் இலட்சியங்கள், நாசமாகின்றன. வாழ்வு சீரழிந்து விடுகின்றது. பலர் பல்வேறு நோய்களுக்கும் ஆளாகி விடுகின்றனர்.

இவர்களால் குடும்பத்திலும் சமூகத்திலும் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. குடும்பத்துக்குள் ஒற்றுமை குறைந்து முரண்பாடுகள் தோன்றுகின்றன. வீண்செலவுகளால் வறுமை ஏற்படுகிறது. குடும்பத்தின் மானம், மரியாதை, கௌரவம் இழக்கப்படுகிறது.

இதுவரை காலத்தில் நடைமுறையிலுள்ள போதைப் பொருள் தடுப்பு ஏற்பாடுகள், விழிப்புணர்வுக் கருத்தாடல்கள், எவ்வித தாக்கத்தையும் சமூகத்தில் ஏற்படுத்தவில்லை. மாறாக போதைப்பொருள் பாவனை அதிகரித்துச்செல்வதைக் காணமுடிகிறது. இந்நிலையில் போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கு ஒரேவழி போதைப்பொருள் நாட்டுக்குள் வராமல் தடுப்பதேயாகும். இந்த முறையையே பல்வேறு நாடுகளும் தற்போது பின்பற்றுகின்றன.

நமது நாட்டில் போதைப்பொருள் கடத்தல்காரருக்கு சட்டத்தின்படி சிறைத்தண்டனை அல்லது மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். ஆனால் மரணதண்டனை விதிக்கப்பட்டோருக்கு அது நிறைவேற்றப் படுவதில்லை. அவர்கள் சிறையின் உள்ளே இருந்தபடியே மீண்டும் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபடுவதாக அறிய முடிகிறது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட சிறைக்கைதிகள் வெளியில் உள்ளவர்களுடன் கைத்தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தி போதைப்பொருள் வியாபாரம்செய்வது தெரிய வந்துள்ளது. சட்டத்தை நிலைநாட்டும் அதிகாரிகள் மத்தியில் காணப்படும் பலவீனத்தையே இது எடுத்துக்காட்டுகிறது. போதைப்பொருள் சிறைச்சாலைகளில் தாராளமாகக் கிடைப்பதாகவும் அறிய முடிகிறது.


போதைப்பொருள் வியாபாரத்தை உடனடியாகத் தடுப்பதற்கு சகலரும் கூட்டுப்பொறுப்புடன் இயங்குவதே இன்றைய தேவையாகும். அதுதான் சகலருக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது.

ooo



15 MAY 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கூவ மறந்த குயில்!

ஷெல்லிதாசன்

தனது மனைவி யோகம்மா படுகிற பாட்டைப் பார்த்த வேலாயுதம் "ஏனப்பா உன்னைத்தான்...நீ ரண்டு கிழமையா படுகிற பாட்டைப் பாத்தா எனக்குப் பயமா இருக்குது. ஒரே அடுப்பும் நெருப்புமாய்... உனக்கு ஏதும் வருத்தம் வாதை வந்திடுமோ எண்டு யோசனையாயுமிருக்குது" என தனது மனைவியைப் பார்த்து கவலைப்பட்டார்.

"போங்கோப்பா நீங்களொண்டு. எங்கடை அம்மாவை ஆரெண்டு நினைக்கிறியள். நூறு வருஷம் வாழ்ந்து மறைஞ்ச செங்கமலம் ஆச்சியின்ரை அன்பு மகளல்லே, அவ ஐம்பது வயசைக் கடந்தும் பாத்தியளே அம்மாவின்ரை உடம்பை, கோயில் சிலை மாதிரி உங்களுக்கு தெரியேல்லையே. நான் எங்கடை அம்மாவோடை எங்கையெண்டாலும் போனா அம்மாவைத் தெரியாதவை "பிள்ளை ஆரிது உன்ரை அக்காவோ" எண்டு கேக்கிறாங்கள் நீங்களொண்டு. அவ எங்கடை கிராமத்து வராளி அம்மன் தெரியுமே" என நக்கலடித்தாள் அவர்களின் நடுவிலாள் மிதிலா.

யோகம்மாவின் மூத்த மகள் விமலா திருமணம் முடித்து யாழ்ப்பாணம் சங்கிலியன் வீதியில் வசிக்கிறாள். கிளிநொச்சியில் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவள், படித்துப் பட்டதாரியாகி, விஞ்ஞான ஆசிரியையாக நியமனம் பெற்று கிளிநொச்சியிலேயே படிப்பித்து கொண்டிருந்தாள். அவளோடு அதே பாடசாலையில் ஆங்கில ஆசிரியனாக படிப்பித்துக் கொண்டிருந்த தயாபரன், விமலா வின் அழகு, கிராமத்து எளிமை, அன்பான நடத்தை, பேச்சு, சுறுசுறுப்பு, உபசரிக்கும் தன்மை என்பவற்றை அவதானித்து, அவளின் மேல் விருப்புற்றதை அறிந்த அவளின் பெற்றோர் அவனுக்கே தமது மூத்த மகளை திருமணம்செய்து வைத்தனர். காலப் போக்கில் தயாபரன் தங்கள் இருவருக்கும் யாழ்ப்பாணத்துக்கு இடமாற்றம் பெற்று, சங்கிலியன் வீதியிலுள்ள தனது சொந்த வீட்டுக்கு விமலாவை அழைத்துச் சென்றுவிட்டான்.

வேலாயுதத்துக்கும், யோகம்மாவுக்கும் தமது மகள் தங்களை விட்டுப் பிரிந்து சென்றது மிகுந்த கவலையைத் தந்தது. ஆனாலும் "பெண் என்றவள் பிடுங்கி நடப்படும் பயிர்"

என்ற நிலையில் அவர்களால் ஒன்றுமே செய்யமுடியாது போனதால், தமது இரண்டாவது மகள் மிதிலா, கடைசிப்பையன் அருணன் ஆகியோரை நல்ல முறையில் படிப்பிப்பதில் கவனம் செலுத்தி வந்தனர்.

வேலாயுதம் கிளிநொச்சியில் இரணைமடுக் குளத்தது வாய்க்கால் கரையில் ஐந்தேக்கர் நிலத்தைக் குத்தகை எடுத்து நெற்பயிர்ச் செய்கை செய்துவருவதுடன், தனது வீட்டோடு இருந்த மூன்று ஏக்கர் நிலத்தில் சிறுதானியம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிளகாய், மரவள்ளி, மரக்கறிகள் என்பவற்றை மிகுந்த பிரயாசையுடன் செய்துவரும் ஒரு சிறந்த விவசாயி.

யோகம்மாவும் தனது கணவனுக்கு நிகராக வயல் வேலைகளில், தோட்ட வேலைகளில் உதவுவதுடன், ஆடு, மாடு,கோழி என வளர்த்து ஓயாத உழைக்கும் குடும்பத் தலைவியாகவும் திகழ்ந்தாள்.

மூத்தவள் விமலா திருமணம் முடித்துச் சென்று நான்கு வருடங்கள் கழிந்துவிட்டன.

யோகம்மாவும், கணவனும் பிள்ளைகளும் அடிக்கடி அவளைச் சென்று பார்த்துவிட்டு வருவதுண்டு. ஆனாலும் திடீரென கொரணா என்ற வியாதி நாட்டை உலுப்பியதால், பிரயாணத் தடை, லொக் டவுண் என்ற கெடுபிடிகளால் இரண்டு வருடங்களாக அவர்களது பயணம் தடைபட்டுப்போயிருந்தது.

திடீரென லொக்டவுண், போக்குவரத்துத் தடை நீக்கம், கொறணா தணிந்தது என்ற பேச்சைக்கேட்ட யோகம்மா சும்மா இருப்பாளா? மகளிடம் எப்படியும் போயே ஆகவேண்டுமென அவள் முடிவெடுத்துக்கொண்டாள்.

மகளிடம் போவதென்றால் சும்மா கையை ஆட்டிக்கொண்டு போக யார்தான் விரும்புவர். அதுவும் கிராமத்துத் தாயல்லவா யோகம். அள்ளிக் கொடுப்பதில் கிராமத்தை மிஞ்சமுடியுமா..என்ன?

அதுதான் யோகம்மா இரண்டு கிழமையாக மகள் வீட்டுக்கு கொண்டுபோக ஆயத்தம் செய்யும் விதங்களைப் பார்த்தே வேலாயுதம் அங்கலாய்த்தார்.

முதலில், தங்கள் வயலில் விளைந்த ஆட்டக்காரி நெல்லையெடுத்து அவித்துக் காயவைத்து அயல் பெண்களின் உதவியுடன் கைக்குத்தாக குத்தி அரிசியாக்கி பத்துக்கிலோ எடுத்து வைத்தாள் அவள்.

தோட்டத்தில் பிடுங்கியெடுத்து காயவைத்த செத்தல் மிளகாய் ஒருகிலோ எடுத்து மல்லி, சின்னச்சீரகம், பெருஞ் சீரகம், மிளகு, மஞ்சல், கருவேப்பிலை, கறுவா போட்டு வறுத்தெடுத்து உரலிலை போட்டு இடித் தெடுத்த காரம், மணம்குணம் நிறைந்த மிளகாயத்தூள் இரண்டு கிலோ. வேர்க்கொம்பு, மல்லி, சின்னச்சீரகம் கலந்து இடித்தெடுத்த கம கம கோப்பித்தூள் ஒரு பெரிய போத்தல் நிறைய. இது மட்டுமா? சிவப்பரிசி மா ஐந்து கிலோ, குரக்கன் மா, ஓடியல் மா, உழுந்துமா... அப்பப்பா..! அதற்குமேலாக பேரப் பிள்ளை களுக்கு உளுந்து முறுக்கு, தட்டை வடை, பயத்தம் பணியாரம், மருமகனுக்கு விருப்ப மான எள்ளுப்பாகு, மகளுக்கு விருப்பமான பொரித்து உப்பு, காரம் கலந்த கச்சான் கடலை.

விரால்கருவாடு மூன்று கிலோ மருமகனுக்கு வலுத்த ஆசையாம். தேன் ஒரு போத்தல், பசுநெய் ஒரு போத்தல், விளக்கின நல்லெண்ணை, ஊர்முட்டை இருபத்தைந்து இப்படி பட்டியலையே சொல்ல முடியாதபடி யோகம்மாவின் ஆயத்தங்கள்.

இப்படியான அம்மாவைப் பெற ஒரு மகள் கொடுத்து வைக்கவேண்டும் எனச் சொல்லுங்கள். இதையெல்லாம் பார்த்த இரண்டாவது மகளான மிதிலா தானும் உள்நாட்டிலை எங்கையாகிலும் தூரத்திலை போய் கலியாணம் முடிக்க வேணுமெனவும் ஆசைப்பட்டாள் என்றால் எப்படியிருக்கும் யோகம்மாவின் ஆயத்தங்கள்!

ஒரு சனிக்கிழமை அவளது யாழ்ப்பாணப் புறப்பாடு. அன்று காலை கணவனை அழைத்த யோகம்மா “இஞ்சேருங்கோப்பா கிளிநொச்சி மீன் சந்தைக்குப்போய் ரண்டு கிலோ ஊசிக்கணவாயும், ரண்டு கிலோ நீலக்கால் நண்டும் வாங்கியாங்கோ. பெட்டை இஞ்சை இருக்கேக்கை எப்பிடியெல்லாம் சாப்பிட்டவள். துப்பரவாக்கி அவிச்சுக் கொண்டுபோய் அவளுக்கும் பேரப்பிள்ளையளுக்கும் ஆக்கிக் குடுக்க வேணும்” என்றாள். “என்னப்பா கொண்டு போறதுகள் காணாதெண்டு இது வேறையே...சும்மா வேலையைப்பாரும்” என்றார் அவர்.

“இப்ப என்ன சொல்லுறியள்? நான் சையிக்கிளிலை போட்டு வரட்டே” என கோபமாய் பாய்ந்தாள் அவள். மேலும் கதைச்சால் பிச்சனையென யோசித்த வேலாயுதம் சந்தையை நோக்கிப் புறப்பட்டார். கணவனை அனுப்பிய யோகம்மா, அதிகாலையிலேயே ஊறப் போட்ட உளுந்தை தோசை மாவாக அரைத்தெடுத்து ஒரு தூக்குச்சட்டி நிறைய ஊற்றிவைத்தாள். தான் போனதும் மகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் சுட்டுக் கொடுக்க வேணுமாம். என்ன ஒரு ஆசை. அன்பு அவளுக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியெல்லாம் பெருமெடுப்புடனும், பெரும் சுமையுடனும் ஆயத்தமான யோகம்மாவை கணவனும் பிள்ளைகளும் யாழ்ப்பாணம் பஸ்சில் ஒருவாறு ஏற்றியனுப்பித் திரும்பினர்.

0000

"ஆய் அம்மம்மா...." என விமலாவின் மூத்தவன் ரவி, தனது அம்மம்மா, வீட்டு வாசலில் ஓட்டோவிலிருந்து இறங்குவதைக் கண்டதும் ஓடோடிப் போய் அம்மம்மாவை கட்டித் தழுவிக்கொண்டான். இதை அவதானித்த மூத்தவள் விமலா, மருமகன் தயாபரன், அவர்களின் இளைய மகள் விசாலி ஆகியோரும் அவ்விடத்துக்கு வந்துசேர்ந்து, யோகம்மாவை வரவேற்று, அவள் கொண்டுவந்த பொருட்களின தொகையைப் பாரத்து மலைத்தபடி அவற்றை ஓட்டோ விலிருந்து இறக்கி எடுத்துவந்து வீட்டு விறாந்தையில் குவித்து வைத்துவிட்டு வலு குதூகலத்துடன் அவளை வீட்டுக்குள் அழைத்துச்சென்றனர்.

"அம்மா நல்லாய் களைச்சுப் போனீங்கள். போய் முகங்கைகாலை கழுவி உடுப்புகளை மாத்திட்டு வாங்கோ தேத்தண்ணி போட்டிட்டு வாறன்" என மகள் விமலா சொல்ல, யோகம்மாவும் மேலைக் கழுவி உடையை மாற்றிவிட்டு விறாந்தையில் போடப்பட்டிருந்த கதிரையொன்றில் அமர்ந்துகொண்டாள்.

மகள் விமலா, தேநீரை எடுத்துவந்து அமாவிவிடம் கொடுக்க, அதைப் பருகியபடி, மகளுக்கும் அம்மாவுக்குமிடையே ஊர் புதினங்கள் பேச்சுகளில் வந்து கலகலப் பூட்டியது.

பேரப்பிள்ளைகள் அம்மம்மா கொண்டுவந்த பொருட்களை ஆராய, யோகம்மா தான் கொண்டுவந்த பலகாரங்களை எடுத்து அவர்களுக்குக் கொடுக்க, பேரப் பிள்ளைகள் மாத்திரமல்ல மகள், மருமகன் ஆகியோரும் ஆசையுடன் அற்றை உண்டுகளித்து உவகை கொண்டனர்.

இப்படியாக நேரம் இரவு ஏழு மணியைத் தாண்டிக்கொண்டிருந்தது. "பிள்ளை, இரவைக்கு நீ ஒரு பலகாரமும் செய்யத் தேவையில்லை. அம்மா தோசைமா கொண்டு வந்திருக்கிறன். சுட்டுத்தாறன் சாப்பிடுங்கோ" என்றாள் யோகம்மா. இதைக்கேட்ட விமலா "அப்பாடி ஒரு வேலை குறைஞ்சுது" என மனசுக்குள் நினைத்தபடி, அம்மாவுக்கு தோசை சுடுவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொடுத்து விட்டு குசினியை விட்டகன்று சென்றுவிட்டாள்.

காஸ் குக்கரை மூட்டிய யோகம்மா, எண்ணெய்த் தாச்சியை அடுப்பில்வைத்து அதற்குள் நல்லெண்ணெயை சிறிது விட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொதிக்க வைத்து செத்தல், வெங்காயம், கடுகு, சின்னச்சீரகம், கறிவேப்பிலை எல்லாம் போட்டு தாளிதம் செய்து, தான் கொண்டு வந்த தோசை மாவை ஒரு சட்டியில் ஊற்றி, அதனுள் தான் தயார் செய்த தாளிதத்தை போட்டுக் கலக்கி எடுத்துவிட்டு, தோசைக் கல்லை அடுப்பில் வைத்து அது சூடானதும், நல்லெண்ணெய்ச் சீலையிலான சிறுபொதியால் அதைத் துடைத்தபடி, கறண்டியால் தோசை மாவை அதில் ஊத்த உஸ்...உஸ் என்ற சத்தத்துடன் தோசை சுடும் வேலை களைகட்டியது.

யோகம்மா சுடும் தோசையின் மணம் வீட்டின் மூலை முடுக்கெல்லாம் ஏகத்துக்குப் பரவ, கருவாட்டு மணத்தில் கவரப்பட்ட எலிகள் புற்றிலிருந்து புறப்பட்டதுபோல அறைக்குள் அடைபட்டு கைபேசியில் மூழ்கிக் கிடந்த பேரப்பிள்ளைகள் அம்மம்மாவை நோக்கி ஓடி வந்தனர்.

"அம்மம்மா... எனக்கு நல்லெண்ணெய்த் தோசைதான் வேணும்" என்றான் மூத்த பேரன் ரவி.

"எனக்கு முட்டைத் தோசைதான் வேணும்" என அடம்பிடித்தாள் இளைய பேத்தி விசாலி.

அவரவர்கள் விருப்பப்படியே மாறிமாறி தோசையைச்சுட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தாள் யோகம்மா. அதற்கிடையில் மூத்த மகளும் அவ்விடத்துக்கு வந்து "அம்மாசுடற தோசையின்ரை மணத்தை நாலைஞ்சு வருசத்துக்குப்பிறகுதான் உறிஞ்ச முடிஞ்சுது" எனச் சொன்னபடி சமையலறைக்குள் நுழைந்த அவள், தனக்கும் கணவனுக்கும் பொரித்த மிளகாயில் ஒரு உறைப்புச்சம்பல் இடித்தெடுத்துக்கொண்டு, அம்மா சுட்டுச் சுட்டுப்போட தோசையை கோப்பையில் போட்டு சப்புக்கொட்டி சாப்பிட்டுக்கொண்டு கணவனையும் சாப்பிட அழைத்தாள்.

"மாமி சுடுகிற தோசை மணம் ஊரையே கலக்குது...ஆனா மாமி உங்கடை மகள் தோசை சுட்டா தோசை மணத்தை கற்பனை பண்ணிச் சாப்பிட்டாலும் மணம் கிட்டையும் எட்டிப் பாக்காது" என மாமியை புகழ்ந்து தள்ளி மனைவியைக் கிண்டலடித்தபடி சாப்பாட்டு மேசைக்கு வந்து அமர்ந்தது கொண்டான் அவன். "உவர் உப்பிடித்தானம்மா என்னதான் நான் பாடுபட்டுச் செய்தாலும் ஏதாவது குறைசொல்லாமல் இருக்கமாட்டார்" என மகள் சிணுங்க அதை ஒருவாறு சமாளித்து, மருமகனுக்கு தான் கொண்டு வந்த நல்லெண்ணெயை ஊற்றி முறுகல் தோசை செய்து கொடுக்க மருமகனும் உறைப்புச் சம்பலுடன் ருசித்து சாப்பிட்டுக் கொண்டிருந்தான். "பாரன் மருமகனுக்கு எண்ணெய் முறுகல். மகளுக்கு வெறுந் தோசை" எனக் மகள் குறைபட, "இல்லையடி பிள்ளை உனக்கும் முறுகல் சுட்டுத்தாறன்.. சும்மா சிணுங்காதை"

எனச்சொன்ன யோகம்மா, மகளுக்கும் எண்ணெய் முறுகல் செய்து கொடுத்தாள். மகளும், மருமகனும் கேட்டுக்கேட்டுக் போதிய அளவு சாப்பிட்டுவிட்டு எழுந்ததும் "அம்மா நீங்களும் சுடச் சுடச் சுட்டு சாப்பிடுங்கோ" எனச் சொன்னபடி மகள் விமலா தனது கையிலிருந்த தொலைபேசியில் யாருடனோ கதைத்தபடி அவ்விடத்தை விட்டு நகர, பேரப்பிள்ளைகளுடன், மருமகனும் அவ் விடத்தை விட்டடு வெளியேறினர்.

அனைவரும் அவ்விடத்தை விட்டுச் சென்றதும் யோகம்மா தான் சாப்பிட நினைத்து, எத்தனை தோசை மிகுதியாக இருக்கின்றது என நோட்டமிட்டாள். எதையுமே காணவில்லை. ஒரே ஒரு கரண்டி மாவுதான் பாத்திரத்தில் எஞ்சியிருந்தது. அதை வழித்துத் துடைத்து தோசைக் கல்லில் ஊற்றி கரண்டியால் மெல்லிதாகவும், பெரிதாகவும் சுட்டெடுத்து, மிஞ்சிக் கிடந்த கொஞ்சம் சம்பலை அதில் போட்டு ஒரு சுருட்டுச் சுருட்டி எடுத்து இரண்டு கடியில் சாப்பிட்டுவிட்டு செம்பிலிருந்த தண்ணியை எடுத்து மடமடவெனக் குடித்து மீதிப் பசி வயிற்றை நிறைத்துக்கொண்டாள்.

வேலைக்களைப்புடன்,பசிக்களைப்பும் ஒன்றிணைய அவளது உடல் உறக்கத்தை நாடியது.

மகள் அம்மாவுக்காக வெளிவிறாந்தை மூலையில போட்டிருந்த பாயை விரித்து அருகேயிருந்த தலையணையை அதில் போட்டுவிட்டு "அம்மாளாச்சி" எனச் சொன்னபடி சரிந்தாள் படுக்கையில். சற்றுநேரத்தில் ஆழ்ந்த உறக்கம் அவளை தழுவிக்கொண்டது.

விடிகாலை ஐந்துமணிக்கு யோகம்மாவுக்கு விழிப்பு வந்துவிட்டது. கிராமத்து வழமை அது.

விறுவிறுவெனப் படுக்கை விட்டெழுந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள், பாயைச் சுருட்டி மூலையில் போட்டு விட்டு வெளியே முற்றத்துக்கு வந்தாள். முற்றமெல்லாம் மாவிலைச் சருகுகளால் நிரம்பியிருந்தது. அதையெல்லாம் கூட்டிப் பெருக்கினாள். அவளக்கு பெரிய ஆச்சரியமாக இருந்தது. கிராமத்தில் விடிகாலைப் பொழுதில் மாறி மாறிச் சேவல்கள் கூவும். குயில்கள் பாடும். குருவிகளின் கீச்சொலிகள் சங்கீதமாக ஒலிக்கும். ஆனால் இங்கேயோ எதையுமோ கேட்க முடியவில்லை. சில வேளைகளில் கட்டிடக் காடுகளுக்குள் எல்லாம் குரலை இழந்துவிட்டனவோ..யார் அறிவார்!

முற்றத்தைப் பெருக்கிவிட்டு வீட்டுக்குள் நுழைந்த அவள், சமையலறைக்குள்ளே சென்று, சமையற் பாத்திரங்களை தேய்த்து கழுவி அடுக்கி வைத்துவிட்டு, குசினியுடன், வீடுமுழுவதையும் கூட்டித் துப்புரவாக்கி ஒழுங்குபடுத்திவிட்டு கைகால் முகம் கழுவச் சென்றாள்.

கைகால் முகங் கழுவியவள், வெளியே சென்று பூக்கனைக் கொய்துவந்து சாமியறைக்குள் நுழைந்து சாமிப் படங்களுக்கு பூக்களை வைத்தாள். பின்பு தீபத்தை ஏற்றி, சாம்பிராணிக் குச்சிகளைக் கொளுத்தி சாமிப் படங்களில் சொருகி வைத்தவிட்டு, ஒரு சில நிமிடங்கள் கண்களை மூடிபடி சாமி தரிசனம் செய்தாள். பின்பு நெற்றி நிறைய விபூதி தரித்து, குங்குமத் திலகமும் இட்டு வெளியே வந்தாள் அவள்.

சாம்பிராணிக் குச்சிகளின் சுகந்த வாசனை அந்தக் காலைப் பொழுதை கமகமவென வரவேற்றது. மணி எட்டைத்தாண்டியும் யாருடைய ஊசலாட்டத்தையும் அங்கு காண முடியவில்லை.

காலையிலேயே ஆறுமணிக்கு முன்பதாகவே ஆட்டில் பால் கறந்து அதை மண்சட்டியில் சுண்டச் சுண்டக் காய்ச்சி, அதற்குள்ளே சுடச்சுட தேயிலைச் சாயத்தை ஊற்றி, சீனியும் போட்டுக் கலக்கியெடுத்து சூடு ஆறமுதல் பித்தளை மூக்குப்பேணியில் ஊற்றி கணவனுக்குக் கொடுத்து, பிள்ளைகளுக்கும் கொடுத்து தானும் பருகுவது அவளது நாளாந்தச் செயற்பாடாகும்.

ஆனால்...இங்கு எட்டுமணியாகியும் தேத்தண்ணி குடிக்காதது யோகம்மாவுக்கு ஏதோ செய்தது. மகளை எதிர்பார்த்து எதுவும் ஆகாது என எண்ணிய யோகம்மா குசினிக்குள் நுழைந்து காஸ்குக்கரைப்பற்றவைத்து, கேத்திலில் நீரை ஊற்றி கொதிக்கவைத்து, தான் கொண்டுவந்த கோப்பித் தூளை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு கொதி நீரை அதற்குள் ஊற்றினாள். கொதி நீரில் அவிந்த வேர்க் கொம்பு கலந்த கோப்பியின் மணம் வீடு முழுவதும் பரவியது. அந்தக் கம கமப்பின் உந்துதலில் திடுக்குற்றெழுந்த விமலா, குசினிப்பக்கம் விரைந்தோடி வந்தாள். அம்மா கோப்பி போட்டுக் கொண்டிருப்பதை அவதானித்த அவள்,“அம்மா...நான் ஞாயிற்றுக் கிழமையெண்டா நேரஞ்செல்லத்தான் எழும்பிறனான்.அந்தப்பழக்கத்திலை நித்திரை கொண்டிட்டன்.பாவம்நீங்கள்.உங்களைக் கோப்பிபோட வைச்சிட்டன்.சொறி..அம்மா.. சொறி” என அம்மாவை சமாளித்த விமலா, “அம்மா இஞ்சை பால் மாவுக்கு கொஞ்சநாளா தட்டுப்பாடம்மா. நேற்று உங்கடை மருமகன் கடைகடையா திரிஞ்சு ஒரு பால்மா பக்கற் வாங்கி வந்தவர். ஐஞ்சு யோக்கட் வாங்கினால்தான் ஒரு பால்மா பக்கற் கொடுக்கிறாங்கள் பாவியள். இதை ஆரிட்டை போய் சொல்லுறது தலைவிதி” எனச் சொல்லியபடி கணவன் வாங்கிவந்த பால்மாப் பெட்டியை அம்மாவிடம் நீட்ட, அம்மா அதிலிருந்த பால்மாவை எடுத்து கலக்கி மகளுக்குக் கொடுத்தாள். “என்னம்மா வாசனை. அருமையான கோப்பியம்மா” என கோப்பியை சுவைத்துக் குடித்துவிட்டு, தனது கணவனுக்கும்,பிள்ளைகளுக்கும் கோப்பியை ஊற்றியெடுத்துக்கொண்டு படுக்கை அறைக்குள் மறைந்தாள் அவள்.

யோகம்மா தானும் கோப்பியை ஊற்றி யெடுத்துப் பருகிவிட்டு விறாந்யையில் போட்டிருந்த கதிரையில் குந்தினாள்.

வீடே வெறிச்சோடிக் கிடந்தது .பேரப் பிள்ளைகளுடன் குதூகலமாக கதைத்து பாசத்தைப் பரிமாறி ஆனந்தப்பட ஓடோடி வந்த யோகம்மாவுக்கு இங்கு நடப்பவை எல்லாமே ஒருவித ஏமாற்றத்தையே தந்தன. கதிரையில் இருந்தபடி ஒரு பெருமூச்செறிந்த யோகம்மா தனது வீட்டு நினைவில் மூழ்கிப்போனாள்.

“அம்மா” என மகளின் குரல் கேட்டு தன்னிலைக்குத் திரும்பிய யோகம்மா, “மகள் இப்ப நேரம் ஒன்பதுக்கு மேலை இருக்குமெண்டு நினைக்கிறன். காலைச் சாப்பாடு என்ன செய்வம்?”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அம்மா நீங்கள் கொண்டுவந்த அரிசி மாவிலை புட்டவிப்போமே"

"நானும் நினைக்க நியும் சொல்லுறாய்..சரி வா பிள்ளை புட்டவிப்பம்."

"ஓம் அம்மா குழல் புட்டு அவிப்பமே.. உங்கடை மருமகனுக்கு வலுத்த ஆசை"

"அப்பிடியே..அப்ப வா பிள்ளை குசினிக் குள்ளை போவம். நீ தேங்கா திரிவித் தா பிள்ளை, நான் ஐஞ்சு நிமிசத்திலை புட்டவிச்சுத் தாறன். மூங்கில் புட்டுக் குழலோ இல்லை அலுமினியமோ இருக்கு?"

"இஞ்சை இப்ப எல்லாரும் அலுமினியம் புட்டுக் குழல்தான் பாவிக்கினம். மூங்கில் புட்டுக் குழல் காணக்கிடைக்காதம்மா" "சரி புள்ளை பறவாயில்லை" எனச் சொன்ன யோகம்மா புட்டவிக்கும் வேலையில் மும்முரமாக ஈடுபட்டாள். தேங்காய் திருவிக்கொடுத்த விமலா, அம்மாவின் மேலே மிகுதி வேலை களைப் போட்டுவிட்டு, அவ்விடத்தைவிட்டு அகன்றுசென்றுவிட்டாள்.

யோகம்மா விரைந்து குழல்புட்டவித்துவிட்டு, தான் கொண்டுவந்த நல்லெண்ணெயை எடுத்து சின்னத் தாச்சிக்குள் விட்டு கொதிக்கவைத்து, சின்னச்சீரகம்.கடுகு,சின்னவெங்காயம். செத்தல்மிளகாய் என்பற்றை அதற்குள் போட்டு வதக்கி, ஐந்தாறு ஊர் முட்டைகளை நல்லாய் அடித்து உப்பும், மிளகாய்த்தூளும் கலந்துதெடுத்து தாச்சியில் ஊற்றி பொரித் தெடுத்தாள்.அதுமாத்திரமல்ல தான் மருமோனுக்காக வாங்கிவந்த விரால் கருவாடுகளை துண்டுகளாக்கி கழுவியெடுத்து தேங்காய் எண்ணெயில் பொரித்ததுடன் மேலதிகமாக சில மோர் மிளகாய்களையும் பொரித்து சாப்பாட்டு மேசையில் கொண்டுபோய் வைத்தவிட்டு அனைவரையும் சாப்பிட அழைத்தாள்.

அம்மா செய்த முட்டைப்பொரியல், கமகம கருவாட்டுப் பொரியல்களுடன் அனைவரும் ஆசையாசையாசையாக தாராளமாச் சாப்பிட்டதைப் பார்த்த யோகம்மா மிகவும் பூரித்துப் போனாள்.

எல்லோரும் சாப்பிட்டு முடிந்ததும் வழக்கம்போல "அம்மா, நீங்களும் போட்டுச் சாப்பிடுங்கோ" எனச் சொன்ன விமலா அவ்விடத்தை விட்டகல, மருமகனும், பேரப்பிள்ளைகளும் யோகம்மாவிடம் எதுவித கதையும் பேசாமல் சென்றது அவளுக்கு மனத் தாக்கத்தைத் தந்தாலும் அதைச் சமாளித்தபடி யோகம்மா தான் சாப்பிடுவதற்காக சாப்பாட்டு மேசையருகே வந்து கோப்பையொன்றை எடுத்து அதிலே புட்டைப் போட நினைத்து புட்டுப்போடப்பட்டிருந்த பாத்திரத்தைப் பார்த்தாள். அதற்குள் தேங்காய்ப் பூவுடன் சில உதிரிப் புட்டுக்களே எஞ்சியிருந்தன. ஆனாலும் தான் செய்த சாப்பாட்டை அனைவரும் ஆசையாக உண்டு முடித்துவிட்டதை ஒரு தாய்மையின் திருப்தியில் உள்வாங்கிய அவள், எஞ்சியிருந்த புட்டை தனது கோப்பையிற் போட்டு பொரியல்கள் ஏதாவது இருக்கிறதா எனத் தேடினாள். அங்கே ஒருசில மோர் மிளகாயே கண்சிமிட்ட அதையெடுத்துக் கடித்தபடி இருந்த சொற்பப் புட்டை வாயிற்போட்டு விழுங்கி தனது காலைச் சாப்பாட்டை நிறைவு செய்தாள் அவள்.

கிராமத்துப் பெண்களோ, ஆண்களோ நல்ல உடல் உழைப்பாளிகள். அதே போல நிறையச் சாப்பிடக்கூடியவர்கள். அப்படியே யோகம்மா இருந்தும் மகள் வீட்டுக்கு வந்து அதையெல்லாம் சமாளித்து நடக்கவேண்டியவளாகிவிட்டாள்.

தனது சாப்பாட்டைப் பற்றி மகளோ, மருமகனோ எவ்வித அக்கறையுமின்றி போகடிபோக்காக நடந்து கொண்ட விதம், யோகம்மாவுக்கு ஒரு மன நெருடலை உண்டுபண்ணினாலும், தான் நிற்கும் வரை அதையெல்லாம் காட்டிக் கொள்ளாமல் மிகப் பொறுமையுடன் நடந்துகொண்டாள் அவள். இப்படியான சில பிரச்சனைகள்தான் குடும்பங்களில பெரு விரிசலை ஏற்படுத்திவிடுமென அறிந்துகொண்ட பெண்ணவள்.

இன்னும் ஒரு பொழுது மாத்திரமே மகள் வீட்டில் நிற்பதென்பதால், மத்தியானச் சமையலையும் தானே மேற்கொள்ளத் தீர்மானித்தவளாய் தான் அவித்துப் பக்குவமாய் கொண்டுவந்த கணவாய், நண்டுகளை மிகச் சுவையாகச் சமைத்ததுடன் தான் எடுத்துவந்த கைக்குத்தரிசியை சோறாக்கி, இன்னும் சில மரக்கறிகளையும் காய்ச்சியெடுத்து சாப்பாட்டு மேசையில் கொண்டுபோய் வைத்துவிட்டு குளியலறைக்குள் நுழைந்தாள் அவள். அம்மா குளியலறையில் நுழைந்த பின்பே மகள் விமலா சமையலறைக்கு வந்தாள். சமையலெல்லாம் முடிந்து சமையலறை கூட்டித் துப்பரவு செய்யப்பட்டதுடன், சாப்பாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேசையில் சமைத்த சாப்பாடுகள் பக்குவமாக மூடப்பட்டிருந்ததையும் கண்ட விமலா, தான் இத்தனை மணி நேரமும் கைபேசி உரையாடலில் மூழ்கி இருந்ததை தவறாக எண்ணி தன்னைத்தான் சமாளித்துக்கொண்டாள். அந்த நேரம் பார்த்து யோகம்மா குளித்து உடையணிந்து குளியலறையிலிருந்த வெளிப்பட்டாள். தாயைக் கண்ட விமலா, "ஏனம்மா என்னைக் கூப்பிட்டிருக்கலாமே.. நான் வந்து உதவி செய்திருப்பேனே" என அம்மாவைப் பார்த்து சாட்டுக்கு கவலைப்பட, "பறவாயில்லைப் பிள்ளை உதைப்போல அப்பனான சமையலையெல்லாம் செய்யிற எனக்கு இதெல்லாம் பெரிய வேலையே. சரி பிள்ளை எல்லாரும் சாப்பிடுங்கோ, நானும் சாப்பிட்டிட்டு மூண்டு மணி பஸ்சுக்கு போகவேணும்" என்றாள் மகளைப் பார்த்து. "என்ன போகப்போறியளோ நேத்தைக்கு வந்தனிங்கள் இன்னும் நாலைஞ்சு நாளைக்கு நிண்டு றெஸ்ற் எடுத்து நேரத்துக்குசாப்பிட்டு ஆறுதலாய் போகலாமே..என்ன அவசரம் அம்மா? அங்கை போய் சாப்பிடவும் நேரமில்லாமல் ஒரே வேலைதானே." மகள் சொன்னதைக் கேட்ட யோகம்மாவுக்கு பட்டணச் சீவியம் மகளுக்கு நல்லா கதைக்கக் கற்றுக் கொடுத்துவிட்டதை எண்ணி தனக்குள் சிரித்துக்கொண்டாள்.

*0000*

வழமை போல, யோகம்மா சமைத்த நண்டு, கணவாய்க் கறிகளுடன் சோற்றைத் தாராளமாப் போட்டுச் சாப்பிட்டுவிட்டு அனைவரும் அகல, மகளும் "அம்மா நீங்களும் பசியோடை இருக்காமல் போட்டுச் சாப்பிடுங்கோ" என மெத்தப் பரிவுடன் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டகன்றாள்.

தனியே இருந்து சமைத்துக் களைத்துப்போன யோகம்மாவுக்கு பசியெடுக்க, சாப்பாட்டு மேசையருகே வந்து கதிரையில் அமர்ந்து சாப்பிட ஆயத்தமாகி ஒரு கோப்பையை எடுத்துச் சோற்றைப் போட்டாள். ஆனால் வழமை போல எந்தக் கறியும் சட்டிகளில் இருக்கவில்லை. வெறும் குழம்புகளே அடிச் சட்டிகளில் காணப்பட்டன. கோப்பையிலிருந்த சோற்றை சட்டிகளில் மாறி மாறிப் போட்டுப்பிரட்டியெடுத்து தனது வாய்க்கருகே கொண்டு போனாள். சாப்பாட்டை ஏற்க அவளது உதடுகள் மறுத்தன. மாறாக அவளது கண்களிலிருந்த தாரை தாரையாக கண்ணீர்தான் சொரிந்தது. வாயருகே கொண்டு சென்ற சோற்றை மீண்டும் சட்டியில் போட்ட யோகம்மா, அதனையெடுத்துக் கொண்டுபோய் வெளியே காவலிருந்த நாய்க்கு கொட்டி வைத்துவிட்டு வந்து தனது பசி நெருப்பையும், தாங்க முடியாத மனக் குமுறலையும் தணிக்க ஒரு செம்பு நிறைய தண்ணீரெடுத்து மளமளவெனக் குடித்துவிட்டு பெருமூச்செறிந்தாள்.

இனிமேலும் மகள் வீட்டில் நிற்பதில்லையென்ற உறுதியான தீர்மானம் எடுத்தவளாய் குளியலறைக்குள் சென்று பிரயாணத்துக்கான உடையை அணிந்து பிரயாணப் பையில் தனது ஏனைய உடைகளைத் திணித்து, கிளிநொச்சிக்குப் போவதற்கான ஆயத்தத்தோடு மகளைத் தேடினாள். மகள், மருமகன். பேரப்பிள்ளைகள் அனைவரும் உண்ட களைப்பில் மதியத் தூக்கத்தில் மூழ்கிப்போய் கிடந்தனர். அதை அறிந்த அவள் படுக்கை அறைக்கு முன்னால் போய் நின்று அறைக் கதவைத் தட்டினாள். கதவு தட்டும் சத்தம் கேட்டு கண்ணைக் கசக்கியபடி வெளியே வந்தாள் விமலா.

அம்மா ஊருக்குப் போகும் ஆயத்தத்துடன் நின்றதை அவதானித்த அவள், "ஏனம்மா அவசரம், நான் சொன்னனானெல்லே ஆறுதலா நிண்டு போங்கோ எண்டு." "ஓம் பிள்ளை நீ சென்னனிதான். உன்ரை தங்கச்சி, தம்பிக்கு கனக்க நாளைக்குப் பிறகு நாளைக்குப் பள்ளிக்குடம். அதோடை அப்பாவுக்கும் வயலிலை வேலை துடங்குது. நானில்லாட்டி அப்பாவாலை தனியச் சமாளிக்க ஏலாது" என மகளைச் சமாளித்த யோகம்மா தனது மகளிடம் சொல்லி யாழ் பேருந்து நிலையத்துக்குப் போவதற்காக ஒரு ஆட்டோவை வரவழைத்து அதில் ஏறியபடி தனது மருமகன், பேரப் பிள்ளைகளைத் தேடினாள். அவர்களை வெளியே காணமுடியாததால் தனது மகளுக்கு மட்டும் விடை சொல்லிவிட்டு யாழ். பஸ் நிலையம் நோக்கி விரைந்தாள் அவள்.

நாலு மணிக்கே பஸ் நிலையத்துக்கு வந்துவிட்ட அவள், கிளிநொச்சி பஸ் மாலை ஐந்து மணிக்குத்தான் எனத் தெரிந்து கொண்டு, கிளிநொச்சிக்கு போக எப்படியும் ஆறுமணிக்குமேலொகும் என நினைத்த அவள், அதுவரை பசி பொறுக்க முடியாது களைத்துச் சோர்ந்து போனாள். பஸ் தரிப்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையத்துக்கு முன்பாகவுள்ள ஒரு சைவச் சாப்பாட்டுக் கடையினுள் நுழைந்து கையைக் கழுவிவிட்டு சாப்பாட்டு மேசையின் முன் அமர்ந்து சோற்றுக்காக அழைப்பு விடுத்தாள். சற்று நேரத்தில் ஓர் இளைஞன் வந்து "அம்மாவுக்கு சிவப்புச் சோறா வெள்ளையா வேணு" மென வினவ, சிவப்புச் சோற்றுக்கான தனது விருப்பத்தை அவள் தெரிவித்தாள். சிறிது நேரத்தில் அவள் முன்னால் வாழையிலை போடப்பட்டு சோறுடன் பல விதம் விதமான கறிகள் பரிமாறப் பட்டதுடன், அதற்கு மேலதிகமாக மோர் மிளகாய், பப்படம், மோர், ரசம் என வந்து அவளது பசியை இருமடங்காக அதிகரிக்க, வத வதவென வாய்க்குள் சோற்றை அள்ளித் திணித்த அவள், மீண்டும் ஒரு தடவை சோறு கறிகளை வரவழைத்து உண்டு தனது மூன்றுவேளைப் பசிக்களைப்பையும் போக்கி, நீரையும் குடித்துவிட்டு ஒரு குட்டி ஏப்பம் விட்டபடி வாடியபயிர் மழையைக் கண்டு நிமிர்ந்ததுபோல நிமிர்ந்து எழுந்த அவள், சாப்பாட்டுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்து, தனது பிள்ளைகளுக்காக அருகே இருந்த கடையில் சில அப்பிள், தோடம் பழங்களை வாங்கி தனது பிரயாணப் பையில் திணித்தபடி பஸ் நிலையத்துக்கு விரைந்தாள். கிளிநொச்சி பஸ்சும் புறப்பட ஆயத்தமாக நிற்க, கிளிநொச்சிக்கான பிரயாணச் சீட்டைப் பெற்ற அவள், ஒரு மூலை இருக்கையாகப் பார்த்து அமர்ந்தாள். தான் மகளிடம் வரும்போது சுமக்கமுடியாத பெரும் சுமைகளை கொண்டு வந்தும் அவை அவளுக்கு பெரிய சுமையாகத் தெரியவில்லை. ஆனால் இன்றோ வீட்டுக்கு திரும்பிப் போகும்போது வெறுங் கையோடு வந்தாலும் அது அவளுக்கு பெரும் மனச்சுமையாக இருந்ததை உணர்ந்தவளாய் ஒரு பெருமூச்செறிந்தாள். இருக்கையில் இருந்தவளை உண்ட களைப்பு உறக்கத்தில மூழ்கடிக்க, பஸ் அவளை தாலாட்டியபடி பிரயாணத்தைத் தொடர்ந்தது.

**(உண்மை கலந்த கற்பனை)**

○○○

# யாருமில்லை.

துளைகருவி கொண்டு துளையிடப்படுகிறது
என் கபாலம்
விட்டம் பார்த்த விழிகளை நோக்கி
மெல்ல இறங்குகிறது சிலந்தி
தூக்கம் களவாடப்படுகிறது
யாருமில்லை பக்கத்தில்.

ஆட்காட்டியின் ஆரவாரம்
சிதைக்கப்பட்ட நிலத்திலிருந்து
எழும் அழுகுரல்கள் - என்
நாளைய விடியலை நீடிக்கிறது
படுக்கையிலிருந்து எழுகிறேன்.

சாளரம் திறந்து காற்று தலை கோதுகிறது
என் நிர்வாணம் மறைக்க பாலாடை
நிலவு நெய்கிறது
கோபங் கொண்ட வௌவால்
என் முத்திலடித்துச் செல்கிறது.

வெறிச்சோடிய வீதியின் அமைதியில்
தலையிழந்த தென்னை மரங்கள்.

தேநீரில் கரைந்த தூக்கத்தை எடுத்து
கண்களில் திணிக்கிறேன்
என் தாயின் தாலாட்டில் கண்ணீர்
உடையும் சத்தம்.

இப்போது -
ஆயுதம் களவாடிய விடியலில்
மரப் படுக்கை - நான்
சூரியப் போர்வைக்குள் உறங்கிக்
கொண்டிருக்கிறேன்.


சுவடுகள் அழிந்த ஒற்றையடிப் பாதையில்
யாருமில்லை
அங்கே
நானதேது நீயதேது
நடுவில் நின்றதேதடா.....

**– கனகசபாபதி செல்வநேசன்**
**அல்வாய்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரிதல் மயக்கம் என்ற கலைச் செயற்பாடு



பேராசிரியர்
சபா ஜெயராசா

புரிதல் மயக்கத்தோடு(BLUR) போராடுதல் என்பது கலை இலக்கிய நுட்பியல்களுள் ஒன்றாகின்றது. சிக்கலான மனநிலையைப் பாத்திரங்கள் வெளிப்படுத்துவதற்கும் தெளிவற்ற மனக் கோலங்களோடும் உறவாடுவதற்கும் இந்த நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.

புரிகை மயக்கமான நிலையில் வாசகரே தமது மனச் சட்டகத்துக்கு ஏற்றவாறு பொருள் கோடலை உருவாக்கிக் கொள்ளல் நிகழ்த்தப்படுகிறது. இந்த நிலையை பின்னைய புதுமையாளர் விதந்து வரவேற்கின்றனர்.

அகவய உரையாடலையும் புறவய உரையாடலையும் ஒன்றுக்குள் ஒன்று கலக்கிவிடும் பொழுது புரிதல் இடர்கள் மேற்கிளம்புகின்றன.

உண்மை ஒன்றல்ல பலவாறாக இருக்கும் என்ற கருத்தை வலியுறுத்த முயலும் எழுத்தாளர்கள் புரிதல் விளக்கக் குழப்பத்தை ஏற்படுத்தி பலவிதமான முடிவுகளை வாசகர் எடுப்பதற்குத் தூண்டுகின்றனர்.

கதைக்களத்திலே குழப்பத்தை ஏற்படுத்தல், குறித்த பாத்திரம் நேர்ப்பண்பு கொண்டதா அல்லது எதிர்ப்பண்பு கொண்டதா என்ற தெளிவற்ற சிக்கலை ஏற்படுத்துதல் முதலாம் பல்வேறு கலை நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

புரிதலைக் குலைக்கச் செய்தல் என்பது உளவியலிலே ஒரு தற்காப்புச் செயற்பாடாகவும் தனி நிறுவல் (PRIVACY) நடவடிக்கையாகவும் கருதப்படுகிறது. புரிதல் குலைவை உருவாக்கித் தம்மை வெளிப்படுத்துதலும் சிறுவர் ஒளிப்படத்துக்கு முகம் கொடுக்கும் பொழுது கோணல் மாணலாக முகத்தைக் காட்டுதலும் 'தனி நிறுவல்' பாதுகாப்புடன் இணைந்த செயற்பாடாகின்றது. தொடர்பு கொள்வோர் புரிதலோடு போராட வைக்கப்படுகின்றனர். பார்ப்பவரின் புரிதல் அளவை குலைத்தல் பாதுகாப்பைக் கொடுக்கிறது.

பெற்றோரின் அனுமதியின்றி குழந்தைகளைப் படமெடுத்தல் சில நாடுகளிலே தடை செய்யப்பட்டுள்ளது. 'கண்ணுறுஞ்சலை' தடுப்பதற்கு சிறுவர்களின் முகத்தில் கருமைப் புள்ளிகளையும் சாயத்தையும் பூசிவிடும் பெற்றோரும் உளர். புரிதலைக் குலைத்தலே அங்கு மேற்கொள்ளப்படுகிறது. பெண்கள் தொடர்பான புரிதலைக் குறைப்பதற்கு முகத்திரைகள் இடும் வழக்கம் உண்டு.

புனைவுக்கும் நடப்பு நிலைவரங்களுக்குமிடையேயுள்ள இடைக்கோடு - புரிதல் குறைவு நுட்பத்தால் தகர்த்து விடப்படுகின்றது. நடப்பும் புனைவும் கலந்த வடிவம் 'நடப்புனைவு' (FACTION) என்று குறிப்பிடப்படுகின்றது. வரலாற்று நாவல்களில் நடப்புக்கும் புனைவுக்குக்கும் இடையே பிரிநிலை தெளிவற்றதாகக் கலக்கிவிடப்படுகின்றது.

யாதாயினும் ஒரு பொருள் பற்றிய தெளிவு இருந்தால் தெளிவின்மையைச் சிறப்பாக மேற்கொள்ள முடியும். கதைமாந்தரின் இயல்பு பற்றி தெளிவு இருந்தால் மட்டுமே அவர் பற்றிய தெளிவு இன்மையை அல்லது தெளிவுப் புரட்டலைக் கலை அழகுடன் மேற்கொள்ள முடியும். 'விதிகளை உடைப்'பதற்கு விதிகளைத் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

நடப்பு நிலைவரங்களுக்கு குறியீட்டு வடிவம் கொடுத்து கவிதைகளைப் புனையும் பொழுது அடிப்படைப் பொருள் அல்லது மூல நிலைவரும் தெளிவற்ற குழப்பத்திற்கு உள்ளாக்கப்பட்டு பலவிதமான விளக்கங்கள் கொடுக்கப்படுகின்றன. தொன்மங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறியீட்டுப்படுத்தி கலையாக்கம் மேற் கொள்ளும் பொழுது, அதே தோற்றப்பாடு நிகழ்கின்றது.

பின்னைய புதுமையியற் சிந்தனையாளர் இரட்டைப் படுத்தலை நிராகரிக்கின்றனர். வெள்ளை - கருமை அகவயம் - புறவயம் நல்லவர் - கெட்டவர் முதலாம் இரட்டை நிலைகள் பொருண்மை அற்றவை என்பது அவர்களின் கருத்து. இரட்டைப் படுத்தலின் பிரிகோடுகள் அற்ற கலந்த நிலை அவர்களால் வலியுறுத்தப்படுகிறது.

மங்கலாதல், கருகலாதல், புகை மூட்டல் தெளிவுக்குழப்பத்தை ஏற்படுத்தல் முதலாம் பல விபரிப்புகள் புரிதலற்ற நிலைக்குக் கொடுக்கப்படுகின்றன.

மாய நடப்பியல் (MAGICAl REALISM) என்பது தெளிவுக்குழப்பத்தின் அடிப்படையான கலைநுட்பியலாகின்றது. மாயவியலும் நடப்பியலும் தமக்குரிய வரையறுக்குப்பட்ட எல்லைகளை மீறிய குழப்பத்தின் வழியாகக் கலைச்சுவையை உருவாக்குகின்றன. இந்த நுட்பியல் எழுத்தாளர்களால் பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது.

பாத்திரப்படைப்பில் தெளிவற்ற குழப்பமான சிந்தனை உடைய ஒருவரின் இயல்பை கதாசிரியரின் நேர் உரையாலும் விளக்கலாம். பிற பாத்திரங்களுடன் நிகழும் உரை யாடலாலும் வெளிக்கொண்டு வரலாம். அல்லது சூழலில் உள்ள பொருட்களை இயல்பாலும் காட்சிக் கோவைகளினாலும் வெளிப்படுத்தலாம். மேற்கூறிய முறைகள் ஒவ்வொன்றும் தனித்துவமானவை.

நீள் எடுப்பில் கதையை நகர்த்திச் செல்வதற்கு உசாவல் விருப்பைத் தூண்டு வதற்கும் மறை பொருள் தேடும் சுவையை வளர்ப்பதற்கும் தெளிவற்ற நுட்பங்கள் பயன் படுத்தப்படுகின்றன. மொழி வடிவிலும் காட்சி வடிவிலும் அந்த நுட்பு மேற்கொள்ளப் படுகின்றது.

ஊர்திகளின் இலக்கத்தை வாசிக்க முடியாது ஏற்படுத்தல், பாத்திரங்களின் அடையாளத்தை காண முடியாது குழப்பத்தை ஏற்படுத்தல் கடிதத்தை வாசிக்க முடியாத தவிப்பை ஏற்படுத்தல் என்றவாறு பல பல முறைகள் கதை நீட்சிக்கு பயன்படுத்தப்படுகின்றன

புரிதலற்ற வினைவூட்டலை (BLUREFFECT) மேற்கொண்டு அழகை மேற்கொண்டு அழகை உருவாக்குதல் இசையிலும் ஆடலிலும் நிகழ்த்தப்படுதல் நீண்டகாலமாக இடம்பெற்று வருதலைக் காணலாம்.

சுலோகங்களை அதிக வேகத்தில் உச்சரித்தல் குவிமன இன்பத்தின் ஏற்பாடாகின்றது. சந்தைவப்பு முறையாலும் அந்த விளைவு ஏற்படுத்தப்படுகின்றது. திருப்புகழை அதி வேகமாகப் பாடும் பொழுது சொற்களை முழு நிறைவாகக் காணமுடியாத மறைப்புநிலையாய் அழகேற்றம் நிகழ்த்தப்படுகின்றது.

ஜதிகள் என்ற இசை துண்டங்களை வேகமாக இசைத்து கலையாக்கி இசை அளிக்கையிலும் ஆடல்களிலும் இசைக்கருவிகளிலும் அழகேற்றம் மேற்கொள்ளப்படுகின்றது.

புரிதல் நிகழ்த்தா சொற்களும் சொற்றொடர்களும் பல பொருள் தரும் விரிநிலை கொண்டவை. நேர்ப்பொருள் மட்டுமின்றி மாற்றுப் பொருள் தரக்கூடிய தெரிவை, ஆற்றல் மிக்க பேச்சாளர் வேண்டுமென்றே பயன்படுத்துவர். பேச்சு மொழியில் ‘அது பிடிபடா பேச்சு’ என்று குறிப்பிடப்படும் எதிர் விளக்கத்திலிருந்து தப்பி எழுவதற்கும் அது பயன்படுத்தப்படும். பேச்சுக் கலையில் மட்டுமின்றி எழுத்துக் கலையிலும் அந்த நுட்பியில் எடுத்தாளப்படுகின்றது.

பழைய ஏடுகளில் சில சொற்கள் தொடர்கள் வசனங்கள் மங்கிய தெளிவற்ற நிலையிலேயே காணப்படும். அவற்றை வாசிப்போர் தத்தமக்கு இயைந்தவாறு ஏற்றவாறு சொற்களை நிறைவித்து வாசிப்பர். அது அறிவுச் செயற்பாடாக மட்டுமின்றி கலைச்செற்பாடாகவும் அமைகின்றது. அங்கு ஆக்கக் கற்பனை இணைந்து கொள்கின்றது.

நுட்பியலாக பயன்படுத்தப்படுகிறது. ஓவியத்திலும் உருவ விளிம்பிலும் நிகழ்த்தப்படும் குழப்பல் அல்லது புகையிடுதல் உருவ அசைவை உருவாக்க வல்லது.

திட்டவட்டமான வரைபுகள் கோடுகள் வண்ணப் பிரிப்பு அத்தகைய ஓவியங்களில் இடம்பெறமாட்டாது. ஓவியத்தின் மீதான குவிநோக்கு சிதறவிடப்படுகிறது. மீள மீள நோக்கலும் தேடலும் தூண்டி விடப்படுகிறது.

“தெளிவி ஓவியம்” (BLUR PAINTING) என்ற தனித்துவமான வகைமை ஓவியப்புனைவில் ஒரு திருப்பத்தை அது ஏற்படுத்தித் தந்தது. பொருளும் ஒளியின் சில புள்ளிகளும் ஓவியத்தில் வலியுறுத்தலுக்கு உள்ளாக்கப் படுகின்றன.

இவ்வகை ஓவியத்தின் சிறப்பு, ஜப்பானியர்களால் மேற்கொள்ளபட்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜப்பானிய மொழியில் அது பொகே(BOKE) என அழைக்கப்படுகிறது. ஆங்கில மொழியில் BLUR என்ற கருத்து வடிவம் உருவாக்கம் பெறுவதற்கு ஜப்பானிய மொழிச் சொல் துணையாயிற்று.

ஜப்பானியர் பெற்றுக் கொண்ட அணுக்குண்டு வீச்சின அனுபவங்கள் புலப் பாடு கொள்ள முடியா ஓவிய ஆக்கத்திற்கு பின்புலமாக அமைந்தன. குவிவனம் FOCUS நீங்கிய வெளித்தள்ளலுடன் இணைந்த அழகு நிகழ்த்தல் அங்கு மேற் கொள்ளப்படுகின்றது.

ஒளிப்படத் துறையிலும் இது ஒரு சிறப்பு நுட்பியலாக இடம் பெற்றுள்ளது. மரபு வழியான படிவங்களையும் கடந்த கவிதை சார்ந்த வடிவங்கள் அந்த நுட் பத்தால் உருவாக்கப்படுகின்றன. அசைவு ஆழம் தேடல் ஆகியவற்றை நோக்கிய அழகியல் முனைப்புக்கு அது வழிவகுக்கின்றது. சாதாரண காட்சிகளை கதைக்காட்சிகளாக அது மாற்றி அமைத்துவிடுகிறது. மரபுவழியான கூர்மைப்பாட்டு வடிவங்களைக் கடந்து செல்லும் நீட்சிக்கு வழிவகுக்கின்றது.

அத்தகைய கலைப்படைப்பு சிம்பனி இசைக்கு ஒப்பானதாகக் குறிப்பிடப்படுகிறது. பல்வேறுவிதமான அகன்ற வெட்டுக்கள் பிடிமானங்கள் பன்முகவடிவங்கள் தோற்றங்கள் வண்ணங்களின் அசைவுகள் நுண்ணிசை (ETHEREAL) ஆகியவற்றையும் கொண்டது.

பறவை சிறகடித்தல், குதிரையின் வேக ஓட்டம், சில்லின் சுழற்சி முதலியவை அழகூட்டும் நிலைத்த ஒளிப்படமாகவும் ஓவியமாகவும் பதிவுற்றன. கலங்கலான உருவங்கள் கலையேற்றம் பெறுகின்றன.

அருவ ஓவியத்திற்கும் புரிகை மயக்க ஓவியத்திற்கும் வேறுபாடு உண்டு. அருவ ஓவியத்தில் மாமுலான வடிவங்கள் அற்றநிலை காணப்படும். புரிகைமயக்க ஓவியத்தில் உருவங்கள் கலங்கலுக்கு உட் படுத்தப்பட்டிருக்கும்.

புரிகை மயக்கத்துடன் இணைந்த விடுகதைகள் மற்றும் புதிர்கள் வாய் மொழிமரபில் நீண்ட காலமாகவே இருந்து வருதல் குறிப்பிடத்தக்கது.

○○○

# குறும்பா

## சுவைப்பு

முக்கால் வைத்து சமைத்தால் அடுப்பு
இன்சுவை உணவுடன் உண்டால் சுவைப்பு
வேண்டா உணவை விருப்பமின்றி
நுகர்ந்தால் அது கசப்பு
கந்தையானாலும் கசக்கி அணிந்தால் உடுப்பு

## தம்பி

அண்ணனின் பாதையறிந்தவன் தம்பி
அரவணைப்பு கிடைக்கும் என்றான் நம்பி
பாடுபட்டுழைத்த பணத்துடன் நாடு
விட்டு நாட்டை அடைந்தான் திரும்பி
பரிதவித்து நின்றான் தேம்பி

## நடப்பாய்

பெற்றோரின் சொற்கேட்டு நடப்பாய்
சொந்தக்காலில் நின்று உழைப்பாய்
சொற்கேட்டு நல்ல பிள்ளைபோல்
வாழ வழி கண்டு செல்வாய்
நாளை நமதென்று வாழ்வாய்

## தோடு

பெண்களணியும் ஒன்றைத் தோடு
அது தவறவிட்டால் அதைத்தேடு
போனதை எண்ணி தொலைந்து
மனம் வருந்திருப்பது நாடு
தங்கத்திற்கு பங்கமில்லையென பாடு

## மொக்கு

வேட்பாளர்கள் கேட்டுவருவது வாக்கு
வாய்க்கு சுருதியை ஊட்டுவது வாக்கு
தேர்தலில் வாக்கை பெறவேண்டி
பொய்சொல்வதே அவர்களின் போக்கு
படிக்கும் பாடங்களில் பின்நிற்பவன் மொக்கு

**– உடப்பூர் வீரசொக்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# புது வருட நாட்காட்டி



– ராதா

சொல்லுக்கியான் ஆலமரத்தடியில் பின்னாலிருந்து யாரோ முதுகில் லேசாகத் தட்டத் திரும்பிப் பார்த்தான். அருகில் சொர்க்கநாதன் நின்று கொண்டிருந்தான். . இந்த ஆலமரம் தான் சொக்கநாதனை சொல்லுக்கியானுக்கு நண்பனாக்கியது மட்டுமல்ல இது அந்த ஊர் மக்களின் சொர்க்காபுரியாகவும் இருக்கிறது. வகுப்பில் ஆசிரியர் கற்பிக்காத இதிகாச புராணங்களையெல்லாம் இந்த ஆலமரத்தடி அவனுக்குக் கற்பித்தது.

அன்று ஆலமரத்தடியில் ஆண்டுக்கொரு முறை நடைபெறும் பொங்கற் திருவிழா. அந்தக் கிராம மக்கள் எல்லோரும் அதிகாலையிற் கண் விழித்து, குளித்து, விபூதி, பொட்டிட்டுப் பொங்கலிடுவார்கள். அடுப்புகள் வரிசை வரிசையாக எரியும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

ஆலமிலையில் பொங்கலைச் சாப்பிட்டுக் கொண்டே சொல்லுக்கினியான் “சொக்கநாதா நீ என்கூட இப்படிப் பேசி எத்தனை நாளாச்சு தெரியுமா?”

“உண்மைதான் நீதானே என்னை மறந்து வேலையலுவலா அலைந்து கொண்டிருக்கிறாயே.. இங்குள்ள எல்லோரும் நேர்முகத் தேர்வென்றால் என்னிடம் தான் நேர்த்தி வைத்துப் பொங்கலிடுவார்கள். நீயோ என்னை நினைக்கக் கூட நேரமில்லாமல் உன்னைத் தயார் படுத்திக்கொண்டிருக்கிறாய்.”

“உன்னால் எனக்கு வேலை கிடைத்தால் அது தகுதி இல்லாதவனுக்கு கிடைக்கும் சிபாரிசு ஆகிவிடும். உனக்குப் பொங்கல் வைக்கிறனென்று வேண்டுதல் செய்தால் அதற்குப் பெயர் கையூட்டு. அதனால் எனது திறமையையும் நம்பிக்கையையும் வைத்து நான் நேர்முகத் தேர்வுக்குப் போய்க்கொண்டிருக்கிறேன்.”

“என்ன பிரயோசனம் ஒன்றிலும் நீ தெரிவாகயில்லையே”

“அதுக்காக உன்னைக் கும்பிட்டால், உனக்குக் கையூட்டுக் கொடுத்தால்தான் நான் தெரிவாகி விடுவேனா”

“அப்படியில்லை. இந்தக் கிராமத்தில எல்லோரும் என்னைக் கும்பிட்டுத்தான் எல்லாக் காரியமும் செய்கிறார்கள்.

“கோபப்படாதே, வெற்றி உனக்கு நிச்சயம்.”

“சொல்லிக்கினியா நேரமாகுதடா. இண்டைக்கு நேர்முகத் தேர்வெல்லா,. எழும்படா”

அம்மா அடுக்களையிலிருந்து குரல் கொடுக்க ஆலமரத்தடி சொக்கநாதன் கண்களிலிருந்து மறையக் கண்விழித்தான் சொல்லுக்கினியன்.

அம்மா சமைக்கும் சாம்பாரின் வாசனை நாவில் நீர் சுரக்கச் செய்ய சுவரில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தான். நேரம் காலை ஆறுமணி காட்டிக் கொண்டிருந்தது. அதன் எதிரிலிருந்த ஆணியில் நாற்புறமும் விழுதுகளைப் பரப்பிப் பழங்களுடன் பறவைகளும் நடனமிடக் கம்பீரமாகக் காட்சியளித்த ஆலமரத்தினடியில் சொக்கநாதன் வீற்றிருந்த நாட்காட்டி காற்றில் அசைந்து கொண்டிருந்தது

இதற்கு முன் அதே ஆணியிற் கணபதி, கந்தசாமி, பார்வதி, பரமசிவன், லக்ஷ்மி, சரஸ்வதி, அனுமன், பாபா ஆகிய தெய்வங்களுக்கும் இடம் கொடுத்திருந்தான்.

ஆலமரத்தடிச் சொக்கநாதரை இந்த ஆண்டு ஆலமரத்தடிப் பூசாரிதான் கொடுத்திருந்தார். இவர் வந்தபின்பு பல்கலைக் கழகத்தில் சாமானியனாக இருந்தவன் சாதனையாளனாகினான். குளித்துச், சொக்கநாதருக்குப் பொட்டிட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவிட்டுப் புதுப்பொலிவுடன் விளங்கிய அவரை எனக்கு எப்பவும் துணையாக இரு சொக்கநாதா என்று வேண்டியவாறே நேர்முகத் தேர்வுக்குப் புறப்பட்டான் .

சொக்கநாதர் கைவிடமாட்டார் என்றெண்ணி யவனுக்கு நேர்முகத்தேர்வு தோல்வியில் முடிந்தது. கனவில் வந்த சொக்கநாதர் கைகொடுக்கவில்லையே எனப் புலம்பியவாறே வீட்டுக்கு வந்தான். வந்தவுடனேயே ஆணியில் அசைந்து ஆடிக் கொண்டிருந்த சொக்கநாதரைக் கழற்றிக் கட்டிலின் கீழே போட்டுவிட்டுக் கட்டிலின் மேலே விழுந்தான். கனவில் மெய்யாக வந்த சொக்கநாதன் நிஜத்தில் பொய்யாகிப் போனதை நினைத்து நினைத்து உள்ளம் நெக்குருகினான்.

தாலியை இழந்த தாய்க்கும், பேதை பெதும்பைப் பருவங்களிலுள்ள இரண்டு தங்கைகளுக்கும் இவன்தானே இப்போதைய நிதி நிறுவனம். இவர்களின் கவலையெல்லாம் வருங்கால வாழ்க்கைதானே. பாலுக்குச் சர்க்கரை இல்லையென ஏங்காமல் கூழுக்கு உப்புத் தேடும் வறுமைக்கு கோட்டின் கீழ் ரகமெல்லா இவனின் குடும்பம்.

இந்த வேலை மட்டும் கிடைத்திருந்தால் எல்லோர் வாழ்விலும் சுபீட்ஷம் நிலவுமே . பொங்கி வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டான் அவனுக்கு இதயத் துடிப்பு அதிகமானது.

"இப்பதான் வந்தான் அதுக்கிடையில நித்திரை போல"

அம்மா யாரிடமோ பேசிக்கொண்டிருந்தது கேட்டது.

யாரோ வந்திருக்கிறார்கள். யாரையும் பார்த்துப் பேசும் மனநிலையில் நான் இல்லை என்று நினைத்தவன் போர்வையை எடுத்துப் போர்த்திக்கொண்டான். மனதிற் பலமான போராட்டம். இப்படி எத்தனை நேர்முகங்கள் தோல்வியாகிப் போயின. நான் வேலையற்றவன், கையாலாகதவன் என்று அவனது தலையணையின் வலப்பக்கம் குறைகூற, இடப் பக்கமோ நீ தற்கொலை செய்துகொண்டால் இந்தப் பூமிப் பந்திலிருந்து பறந்துவிடுவாய் என்று உபதேசிக்க நித்திரை யின்றித் தவித்தான். குடும்பத்தின் நிலவரமும் பூதாகரமாகக் காட்சியளிக்க மனதிற் கலவரம் மூண்டு மூளையிற் கேள்விக்குறிகள் வளைந்து வளைந்து எழுந்தன.

"ஒரு வேலை இல்லாட்டி இன்னொரு வேலை. நேர்முகத் தேர்வுக்குப் போனா இப்படித்தான் கதவைச் சாத்திக் கொண்டு படுக்கிறான். நீயாவது சொல்லப்பா"

என்ற அம்மாவின் குரலுக்குப் பிறகு யாரோ கதவைத் தட்டினார்கள். "சொல்லுக்கினியா, சொல்லுக்கினியா "என்ற டேவிட்டின் குரல் கேட்டுப் போர்வையை மெல்ல விலக்கி எழுந்து கதிரையில் அமர்ந்தான். கண்கள் சிவந்து எரியக் கால்கள் வலித்தன.

"கவலைப்படாதேடா, என்ர நிறுவனத்தில் வேலை இருக்கு நீ அதற்கு விண்ணப்பி" சொல்லியவாறு தலையைத் தடவி ஆறுதல் மொழி கூறினான் டேவிட்.

"கஷ்டமேயடா, அனுபவம் பார்ப்பார்களே."

"பயப்படாத கடவுள் உன்னைக் கைவிட மாடடார்"

நம்பிக்கையூட்டினான் டேவிட்.

அவன் சொன்னபடியே வேலை கிடைத்தது. கடவுள் சொல்லுக்கினியானைக் கைவிட வில்லை. நல்ல சம்பளம். நாட்கள் இப்படியே நகர்ந்து கொண்டிருந்தன. ஒரு நாள். திடீரெனக் கனவில் இறைவன் வந்தார். சனத்திரள் களுக்கிடையில் இயேசு பெருமான் உயரமான மலையில் நின்றவாறே ஆசிர்வாதம் அளித்துக் கொண்டிருந்தார்.

"நீங்கள் என்னுள்ளும் என் வார்த்தைகள் உங்களுக்குள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் கிடைக்கும். (யோவான்)

இந்தக் கனவைச் சொல்லுக்கினியான் டேவிட்டிடம் சொன்னபோது டேவிட் "கடவுளின் ஆசீர்வாதம் உனக்கு இருக்கடா"என்று விளக்கினான்.

இப்பொழுது சொக்கநாதன் இருந்த இடத்தில் இயேசு திறந்த பரிசுத்த இதயத்துடன் இருக்கும் டேவிட் கொடுத்த நாட்காட்டியை மாட்டினான். மெலிதான புன்சிரிப்புடன் கூடிய சாந்தமான இயேசு முகத்திலும் விடியும் பொழுது விழிப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டான்.

நல்ல சம்பளம், மரியாதை, நாள்கள் நன்றாக ஓடிக்கொண்டிருந்தன. யார் கண் பட்டதோ? தெரியவில்லை. ஒரு நாள் நிலைமை தலைகீழாக மாறியது. போர்வைக்குள் இருந்து வெளியே வராமல் புரண்டு புரண்டு படுத்தான். இரத்தம் உறைந்து போயிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிய கொள்ளை நோயான கொரோனா வால் பீடிக்கப்பட்டவன் இவன்மட்டுமல்ல, இவனுடன் வேலை செய்த சகாக்களும்தான். நோயின் தீவிரம் அநேக தொழிலாளர்களை அந்த நிறுவனத்தில் வாட்டி வதைத்தது மட்டுமல்லாமல் வீட்டிலேயே முடக்கியது. நிறுவனத்தின் முகாமையாளரும் கொரோனா வினால் மரணத்தைத் தழுவ நிறுவனமும் முடங்கியது.

சம்பளம் கொடுக்க முடியாமற் போனதால் புதிதாகச் சேர்ந்தவர்கள் வேலை இழக்க வேண்டிய தாகிவிட்டது. வாழ்க்கை வெறுத்தது. மனம் விரக்தியுற்றது.

கொரானாவிலிருந்து தப்பித்து மீண்டும் வேலை தேடும் படலாமா? கடவுள்களில் முழிக்கவே பிடிக்கவில்லை. கடவுளை நொந்து என்ன செய்வது? எனக்கு நேரம்தான் சரியில்லை. மனதுக்குள் முனங்கினான்.

“அம்மா அண்ணா எழும்பிற நேரம் எழும்பட்டு. என்னசெய்வது? விதி விளை யாடிச்சுது. அவன் என்ன பண்ணுவான் பாவம்”.

அம்மாக்குச் சொல்லும் தங்கையின் குரல் கேட்டது.

இப்படித் தன்னைப் புரிந்து கொள்ளும் தங்கயை நினைக்கக் கண்களில் நீர் கோர்த்தது. நெஞ்சு கனத்தது. மறுபடியும் வேலை தேட ஆரம்பித்தான். ஏதோ ஒரு வைராக்கியத்துடன் சுயமுன்னேற்ற நூல்களைப் படித்தான் தன்னம் பிக்கை தரும் நூல்களையும் விடவில்லை. வாழ்வில் முன்னேறியவர்கள் வாழ்க்கை வரலாறுகளையும் தெரிந்து கொண்டான். அவனுள் தன்னம்பிக்கை வேர் பிடித்தது. ஒருநாள் வலை நூல் அறுந்து போனாலும் சிலந்தி ஒன்று கொஞ்சமும் கவலைப்படாமலும், ஓய்ந்து விடாமலும் பாய்ந்து பாய்ந்து வலை பின்னியத்தைப் பார்த்தான். தோல்வி அந்தச் சிலந்தியைப் பாதிக்கவே இல்லை. முடியாது என்று முதுகெலும்பற்ற சிலந்திகூட ஒதுங்குவதில்லை ..முதுகெலும்புள்ள நான் ஒதுங்கலாமா? இப்பொழுது

என்னால் எதையையும் சாதிக்கமுடியும். நானே எனக்கு ஒளி !

என்ற வாசகங்கள் பொறிக்கப்பட புதிய நாட்காட்டியை வாங்கினான். அதை கடவுள்க ளுக்குப் பக்கத்தில் தொங்கவிட்டான்.

“இப்பவெல்லாம் அண்ணா ரெம்ப மாறி விட்டார். புத்தகங்களுடன் தான் புரள்கிறார்.”

தங்கை அம்மாவிடம் சொல்லிக் கொண்டி ருந்தாள்.

“நானும் கவனிச்சன். அவன் பார்வையே இப்பொழுது தெளிவாக இருக்கிறது.”

இது அம்மா.

அவனது கடின உழைப்பு நிதி நிறுவனத்தில் முகாமையாளர் நேர்முகத் தேர்வில் வெற்றியயைத் தேடித் தந்தது. மனதில் உறுதி இருந்தால் எதையும் சாதிக்கலாம் என்பதை அனுபவம் அவனுக்கு உணர்த்தியது.

அன்றிரவு தூங்கும் போது கடவுள்கள் கனவில் வந்தனர். அதே ஆலமரம் .... அதே மலை .......இப்பவெல்லாம் எங்களை மறந்திட்டாய்? என்ன உன்னோட இந்த வெற்றிக்கு நாங்கதான் காரணம் தெரியுமா? என்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை! பொய்.! நான் படிச்ச புத்தகங்கள் எனக்குத் தெளிவைக் கொடுத்தன. மாயையான உங்களை மறுபடியும் நம்பமாட்டன்." என்றான் சொல்லுக்கினியன்.

"வேலை தேடி நொந்து போன போது நல்ல வேலை வாக்கித் தந்தோமே! மறந்திட்டியா?

"நான் யாரையும் நம்ப மாட்டன். என்னை மட்டும் தான் நம்புறேன். என் திறமையை நம்புறேன். என்னால் முடியும் என்கிற மனோ சக்தி இருக்கு. இனியும் என்னிடம் கதையளக்கவேண்டாம்''

"அந்த சக்தியாய் இருக்கிறது நாங்கதானே!

குரல் கணீரென்று வந்தது. ஆனால் எந்த உருவத்தையும் தெளிவாகக் காண வில்லை''........"

நீ வேறு கடவுள் வேறு இல்லை. ஒவ்வொரு மனிதரிடமும் கடவுள் இருக்கிறார். தன்னம்பிக்கை என்கிற பெயரிலே மனதில் ஒரு பகுதியாகக் கடவுள் இருக்கிறார்.

இப்போது இந்தக் குரல் அவனுக்குள்ளேயே இருந்து கேட்டது. சொல்லுக்கினியான் சட்டென்று விழித்துக்கொண்டான்.

"கனவா?... இல்லை! இருக்க வும் முடியாது. உண்மையில் நடந்தது போல அல்லவா இருக்கு.!

சுவரில் இருந்த நாட்காட்டி யைப் பார்த்தான். அது அவனுக்கு எதனையோ மவுனமாக உணர்த்திக் கொண்டிருந்தது. இனி அந்த நாட் காட்டியில் ஆண்டுகள், மாதங்கள், நாட்கள் மாறுமே தவிர அங்கு பொறிக்கப்பட்ட வாசகங்கள் மாறப்போவதேயில்லை.

என்னால் எதையையும் சாதிக்கமுடியும்.

நானே எனக்கு ஒளி.

○○○

# மூப்பினோன் புலம்பல்


வயதொத்த நண்பனிடம் விபரங் கேட்டேன்
வேலையற்றுத் தனித்திருந்த போழ்தில் ஒருநாள்
காயத்தின் நிலைபற்றிக் கூற லானான்
குறிப்பாக ஐம்பொறியின் நிலைமை சொன்னான்
மெய்யென்ற பொய்யுடலம் முள்ளுந் தோலும்
மிஞ்சிடவே தசையுருகி எடையுங் குன்றி
தொய்வுற்றுப் பலமிழந்து போன தென்றான்
சரியென்றே என்மனதுஞ் சாட்சி கூறும்

வாய்பற்றி விழித்தேன்நான் வாய்வ ராதே
விம்முவபோல் உணர்ந்தேன்நான் இருந்தும் சொன்னான்
பாய்ந்துபாய்ந்து உண்டவன்தான் பசியில் என்றான்
பசித்தாலும் உண்ணமனம் இல்லை யென்றான்
ஓய்ந்துவிட்ட நாநரம்பு உணர்ச்சி யற்றே
ஒடுங்கியதாம் உண்பவற்றின் சுவையைக் கூற
வாய்ப்பற்றுப் போனதுவாம் கேடு ரைத்தான்
விதியையெண்ணி வருந்தினனே விரும்பி யுண்டோன்

கண்பார்வைக் கோளாறு கொள்ளை யென்றான்
காணுமொன்றும் இரண்டாகத் தெரியு தென்றான்
செண்பகத்தின் நிறஞ்சிவப்பு தெரியும் ஆனால்
தோன்றுவதோ கருமையின்று தெளிவு மில்லை
நண்பனுக்கு வயதொன்றும் அதிக மில்லை
நாற்பதொடு நாற்பதுதான் கூட்டல் தேறும்
தொண்ணூற்றைக் கடந்தும்அப்பர் பார்வை தன்னில்
தெளிவாக இருந்ததுவைச் சொல்லி னானே

முற்றத்து மல்லிகையை முகந்த போழ்தில்
மணமுணர மாட்டாதே நாசி முற்றும்
வற்றியதாம் உணருகின்ற சக்தி யென்றே
நெடுமூச்சு வாங்கியதாம் வருந்தி னானே
சற்றிலுமே தெரியவில்லை மாற்ற மெல்லாம்
சரிசமமாய் மணக்கிறதாம் ஒன்றே போன்றாம்
மற்றென்ன ஜலதோஷம் வந்தால் சிந்த
மூக்கிருந்தால் போதுமென்று திருப்தி யுற்றான்

கூறுவது செவிகொள்ளும் சிலவே ஏனை
காலரையும் காற்றுந்தான் கேட்கு தென்றான்
வீறுகொண்டே யெழுகின்றற வெடியின் ஓசை
விரல்சொடுக்கும் ஒலியைத்தான் வாங்க லாகும்
ஊறொன்றிக் குரலெழுப்பி னாலும் காது
உள்வாங்கும் ஒலிசிறிதே ஒலியை வாங்கித்
தேருவதோ ஒன்றிரண்டே தொடர்பு மற்றாம்
தேர்ந்ததுபோல் நடிப்புதுவாய் சொல்லி னானே



– ஜின்னாஹ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோவொரு தருணத்தில் என்
மொழிபற்றிய சரியான புரிதலை
சொல்லிவிடுகிறேன், நான்..!
ஆனால்,
Post modernism Group கூடி
நின்று, நான் சொன்னவற்றை எல்லாம்
உதாசீனம்செய்து உருக்குலைத்து
வேடிக்கை காண்பித்தது..!

பொய் ஒன்றை உண்மை என கூட்டமாய்
சொல்லும் போது உலகும் அதையே
ஏற்கிறது..!

உண்மைக்கு உடனே
மதிப்பிருப்பதில்லை என்பதும்
உண்மைதான் மேலும்
அரிச்சந்திரன் நல்ல உதாரணம்..!

இவை கொஞ்சம் நிற்க...

புதுமைப்பித்தனின் புன்சிரிப்பில்
ஒரு வேதனை இழையோடி மறைகிறது
வேப்பங்குச்சியால் பல்லிடுக்குகளில்
உதை கொடுத்து, "இங்கை வா, இதில
இரு" என்று

மஹாகவி கட்டளைதர
மகாகவியும் என்னோடு வந்தமர்கிறார்
அதுவொரு நீண்ட பழைய பனங்கொட்டு
இருக்கை, அதிலமர
ஓர் உற்சாகம் பிறப்பதை நானும்
உணர்கிறேன்

கண்ணதாசனும் வாலியும்
ஓடி வருகிறார்கள், கூடவே
வைரமுத்துவும்...
அந்த பனங்கொட்டில் இருக்க நிறைய
இடம் இருக்கிறது, உடுமலையும்

# ஆளிடம் சேர்...?

பட்டுக்கோட்டையாரும் எப்பவோ
வந்தமர்ந்துவிட்டார்கள்..!
நீலாவணனும், முருகையனும்
சோபாவுடன் ரகசியம் உரைக்கின்றனர்

அத்தனை பேருக்கும்
அவர்கள் நடந்த தடங்களில் வலி
சீழ் பிடித்து கொதித்திருந்ததை
நானும் உணர்கிறேன்..!

பார்த்தீர்களா..?
இத்தனை பேருக்கு கிடைக்காத
வலிகளையா,
என் இதயம் சுமந்திருக்கிறது
என் இதயம் கொதித்திருக்கிறது, இப்ப
மனது சுகம் பிடித்து ஆறுதல் காண்கிறது...

இனி அவை கொஞ்சம் தொடர...

ஆனாலும்,
கால நீட்சியின் ஒரு தருணத்தில்
நான் சொன்னதை எல்லாம்
தாமே கண்டுபிடித்தது என
மேடைக்கு மேடைக்கு ஆமோதித்து
அலைகிறது அந்த Post modernism Group..!

அப்போதும்கூட
அவர்கள் சொல்லிவிட்டார்கள் என்பதற்காக
கைதட்டுகிறது உலகு..!

ஆளிடம் சேர்,
ஊரோடின் ஒத்தோடு என்று
மூத்தோர் சொல்லவிட்ட அத்தனையும்
பொய் என பொய்க்கிறதே..!

**சமரபாகு சீனா உதயகுமார்** வல்வெட்டித்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆங்கிலச் சொற்களின் தோற்றத்திற்கு ஆதாரமான சில லத்தின், தமிழ்ச்சொற்கள்

இந்தோ ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஆங்கில மொழியின் வரலாறு இங்கிலாந்தில் கி.பி. 5ஆம் நூற்றாண்டிலேயே ஆரம்பமானது. அப்போது பழைய ஆங்கிலம் அல்லது ஆங்கிலோ சக்ஷன் (ANGLO SAXON) என்று அழைக்கப்பட்ட இம்மொழி நான்கு முக்கிய படிநிலைகளைத் (STAGES) தாண்டி வளர்ச்சி அடையத் தொடங்கியது.

ஆங்கிலேயர் கி.பி. 17ஆம் நூற்றாண்டிலிருந்து மேற்கொண்ட வணிகம் ஏனைய நாடுகளைக் குடியேற்ற நாடாக்குதல், புதிய நாடுகளைக் கண்டு பிடித்தல் என்பவற்றினூடாக இம் மொழி சர்வதேச மொழிகளில் முக்கியமானதொன்றாகி வணிகம், தொழில் நுட்பம் ஆகியவற்றின் மொழி என்னும் சிறப்பையும் பெற்றுத் திகழ்கின்றது.

இத்தகு வரலாற்றுப் பின்னணிக்குரிய ஆங்கில மொழி லத்தின், பிரெஞ், கிரேக்கம், தமிழ் என்னும் மொழிகளில் இருந்து சொற்களைப் பெற்றுத் தன்னை வளர்த்துக் கொண்டதோடு காலத்திற்கேற்ப பல சொற்களையும் உருவாக்கிக் கொள்வதைக் காண்கின்றோம். இவ்விதம் உருவான சொற்களில் லத்தின் மொழி, தமிழ் மொழி தொடர்பான சில சொற்களை மட்டுமே இக் கட்டுரை எடுத்துக்காட்ட முனைகின்றது.

தனித் தமிழ்ச் சொல்லான விருந்தோம்புதல் ஆங்கிலத்தில் (HOSPITALITY) என வழங்கும் இச் சொல் (HOSPITALIS) என்னும் லத்தின் சொல்லை மூலமாகக் கொண்டது. இச் சொல்லில் இருந்தே HOSPITAL, HOSTEL, HOSTESS ஆகிய சொற்கள் உருவாக்கப்பட்டன.

மேலே குறிப்பிடப்பட்ட இடங்களுக்குச் செல்பவர்கள் அல்லது அவற்றில் தங்கியிருப்பவர்கள் விருந்தினர்கள் போன்று நடத்தப்பட வேண்டும் என்பதை முதலிரு சொற்களும் மற்றையது விருந்தினரை வரவேற்பதையும் சுட்டி நிற்கும்.

கடற்படை என்னும் தமிழ்ச் சொல்லுக்கு ஒத்த சொல்லாக NAVY என்னும் ஆங்கிலச் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இச் சொல் கப்பல் என்னும் பொருள் தரும் NAVIS என்னும் லத்தின் சொல்லில் இருந்து பிறந்ததாகும். இதிலிருந்தே NAVIGABILITY, NAVIGATION, NAVIGATOR ஆகிய சொற்கள் தோற்றம் பெற்றன. எனினும் NAVIS என்னும் லத்தின் சொல்லுக்கும் கப்பல் என்னும் பொருள் தரும் பழந்தமிழ்ச் சொல்லான நாவாய் என்னும் சொல்லுக்குமிடையே பொருள், ஓசை என்பவற்றில் காணப்படும். ஒத்த தன்மை மொழியியலாளரின் ஆய்வுக்குரியதாக இருப்பதோடு, கி.மு. 10ஆம் நூற்றாண்டிற்கு முன்பு உரோம், கிரேக்கம், பபிலோன் ஆகிய நாடுகளோடு தமிழர் கொண்டிருந்த வணிகத் தொடர்பின் அடையாளமாகவும் நாவாய் எனும் தமிழ்ச்சொல் விளங்கக் காணலாம்.

நமது காலை உணவு வகைகளில் பாண் என்பது ஒன்று. இவ்வுணவு 16ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் (1505இல்) போர்த்துக்கீசரால் இங்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனால் இச் சொல்லையும் போர்த்துக்கீசச் சொல் என்றே படித்தவரும் கருதுவர். ஆனால், இச் சொல் PANIS என்னும் லத்தின் சொல்லின் திரிபு என்பது தெளிவு. இதுவும் பண் என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபு எனலாம்.

இதனைப் போன்றே கதிரை, மேசை என்னும் சொற்களையும் போர்த்துக்கீசச் சொற்கள் எனக் கருதுதல் தவறாகும். ஏனெனில், கதிரை



வாகரைவாணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னும் சொல் CATHEDRA என்னும் லத்தின் சொல்லின் திரிபாக இருப்பது போலவே மேசை என்னும் சொல்லும் MENSA என்னும் லத்தின் சொல்லின் திரிந்த வடிவமாகும்.

கத்தோலிக்க கோயில்களைப் பொறுத்த வரையில் குறிப்பிட்டதொரு கோயில் மறை மாவட்ட ஆயரின் இருக்கையினை (கதிரையை)க் கொண்டிருப்பதாலேயே அது CATHEDRAL என்று அழைக்கப்படுகின்றது. இதன் வழியிலேயே தமிழில் இக்கோயில் மேற்றாசனக் கோயில் என அழைக்கப்பட்டு தற்காலத்தில் பேராலயம் எனச் சொல்லப்படுகின்றது. இது தவறான சொல்லாட்சியாகும்.

நீண்ட நெடுங்கதைகள் தமிழில் நாவல் என்று வழங்கப்படுகின்றது. இது NOVEL என்னும் ஆங்கிலச் சொல்லின் திரிபு எனினும், இச் சொல் NOVUS என்னும் லத்தின் சொல்லையே மூலமாகக் கொண்டது. இதற்கு புதிது என்று பொருள். இதன் காரணமாகவே இக்கதைகள் புதினம் என்றும் அழைக்கப்பட்டன. இக் கருத்தினையே நவீனம் என்னும் சமஸ்கிருதச் சொல்லும் உணர்த்தும். லத்தின், சமஸ்கிருதம் ஆகிய மொழிகள் இந்தோ - ஐரோப்பிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதனால் NOVELLக் கும் நவீனம் என்னும் சொற்களுக்கிடையே உள்ள தொடர்பு ஆராயப்பட வேண்டிய தொன்றாகும்.

இக் காலத்தில் பலரைப் பீடிக்கும் நோய்களில் அஸ்மா (ASTHMA) என்பதும் ஒன்று. சுவாசப்பையோடு தொடர்புடைய இந்த நோய்க்கான மருந்துகளில் VENTOLIN என்பது குறிப்பிடத்தக்கது. இச் சொல் காற்று என்னும் பொருள் தரும். VENT க்கு என்னும் லத்தின் சொல்லையே வேராகக் கொண்டது. இது போன்றே VENTILATION, VENTILATOR என்னும் சொற்களுக்கும் அச் சொல்லே ஆணிவேராகும்.

இந்த VENT என்னும் லத்தின் சொல்லுக்கும் காற்று என்னும் பொருள் தரும் வாதம் என்னும் சமஸ்கிருதச் சொல்லுக்கும் இடையே உள்ள தொடர்பும் ஆராயப்பட வேண்டியதாகும்.

நூலகம் என்னும் சொல் ஆங்கிலத்தில் LIBRARY என வழங்கும். இரண்டு சொற்களாலான LIBRARY என்னும் சொல்லின் முதற் சொல்லாக இருப்பது LIBER என்னும் லத்தின் சொல்லாகும். இதற்குப் புத்தகம் என்று பொருள். இச் சொல்லுடன் வரிசை, ஒழுங்கு என்னும் பொருளையுடைய ARRAY என்னும் சொல்லும் இணைக்கப்பட்டமையால் LIBRARY என்னும் சொல் உருவானது. இச் சொல்லுக்குரிய கருத்திற்கமைவாகவே நூலகத்தில் நூல்கள் ஒழுங்காக அடுக்கி வைக்கப்பட்டிருத்தல் இங்கு கவனிக்கத் தக்கது. இச் சொல்லில் உள்ள ARAY என்பது ARRAY என்னும் சொல்லின் குறுக்கமாகும்.

இது போன்றே DICTIONARY என்னும் சொல்லும் தோற்றம் பெற்றது. இதில் உள்ள DICTION என்னும் சொல் DICTUM என்னும் லத்தின் சொல்லின் திரிபாகும். இதற்குச் சொல் என்று பொருள். இதோடு ARRAY எனும் சொல் இணையவே DICTIONARY எனும் சொல் பிறந்தது. இக் கருத்திற்கமைவாகவே இதிலும் சொற்கள் ஒழுங்காகத் தொகுக்கப்பட்டுள்ளதைக் காணலாம்.

செய்தி என்னும் சொல் ஆங்கிலத்தில் NEWS என வழங்கும். இச் சொல்லின் தோற்றத்திற்குப் படித்தோர் தாமும் NORTH, EAST, WEST, SOUTH என்னும் சொற்களின் முதல் எழுத்துக்களின் கூட்டைக் காரணமாக்குவர். ஆனால், ஒக்ஸ்போட் ஆங்கில அகராதி இதன் அடிச் சொல்லாக NEW என்னும் சொல்லையே தரும். இச் சொல்லின் பன்மைத் தன்மையைக் காட்டும் நோக்குடனேயே அதனோடு S எனும் எழுத்தும் இணைக்கப்பட்டது. எனினும், புதியது என்னும் பொருள் தரும் NOVUS என்னும் லத்தின் சொல்லே இதன்மூலமாகும்.

காற்றோட்டத்திற்காக வீட்டின் சுவர்களில் பொருத்தமான இடங்களில் வைத்துக் கட்டப்படும் யன்னல்களை பழந்தமிழ் காலதர் (கால் - காற்று, அதர் - வழி) என்று கூறும். இச் சொல் போன்றே ஆங்கிலத்திலும் WINDOW என்னும் சொல்லும் அமைந்திருப்பது சற்று வியப்பைத் தருகின்றது. ஏனெனில், இச் சொல் WIND (காற்று) DOOR (வழி) என்னும் இரு சொற்களைக் கொண்டு உருவாக்கப்பட்டு பின் DOOR என்னும் சொல் திரிபடைந்திருக்கலாம். எனினும் இச்சொல்லும் ஆய்வுக்குட்பட்டதாகும்.

அழகான பூக்களில் றோஸ் மிகவும் பிரபல்யமானது. இத்தகு பூவைக் கொண்டிருக்கும் செடி நீண்ட நெடுங் காலத்திற்குரியது என்பதை ROSA என்னும் லத்தின் சொல் காட்டும்.

உடலுக்கான ஊட்டச்சத்தினை VITAMIN என்பார்கள். இது VITA என்னும் லத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லில் இருந்து பிறந்ததாகும். இதற்கு வாழ்க்கை என்று பொருள்.

தமிழில் தந்தை, தாய், சகோதரன் என்னும் சொற்கள் ஆங்கிலத்தில் FATHER, MOTHER, BROTHER என வழங்கும். (இச் சொற்கள் மூன்றும் PATER, MATER, FRATER என்னும் லத்தின் சொற்களின் திரிபு எனலாம். இதன் மூலச் சொல் "மா" எனும் தமிழ்ச் சொல்லாகும். இதற்கு அம்மா என்று பொருள்.

தமிழில் இலக்கியம் என்பது ஆங்கிலத்தில் LITERATURE என்று சொல்லப்படும். இது LETTER, CULTURE என்னும் இரண்டு சொற்களின் சங்கமமாகும். இச் சொற்களின் கருத்தின்படி LITERATURE என்பது பண்பட்ட எழுத்து ஆகும். ஆங்கிலச் சொற்களான LETTER, CULTURE என்பவை LITTERA, CULTURA எனும் லத்தின் சொற்களை மூலமாகக் கொண்டவை.

இது தொலைக்காட்சியின் காலம். இதனை ஆங்கிலத்தில் TELEVISION என்பர். இதில் தொலைவு எனும் கருத்தைக் கொண்ட TELE என்பது ஒரு கிரேக்கச் சொல் ஆனால், VISION என்னும் சொல் VIDERE என்னும் லத்தின் சொல்லை மூலமாகக் கொண்டது.

இது போன்று கேட்போர் கூடம் என்னும் தமிழ்ச் சொல் ஆங்கிலத்தில் AUDITORIUM எனக் குறிக்கப்படும். இச் சொல் AUDIO என்னும் சொல்லை அடியாகக் கொண்டது.

மொழி என்பது ஆங்கிலத்தில் LANGUAGE என்று சொல்லப்படும். இச்சொல் LINGUA என்னும் லத்தின் சொல்லை மூலமாகக் கொண்டது. இதற்கு நாக்கு என்று பொருள். ஒரு மொழியைப் பேசுவதற்கு நாக்கு இன்றியமையாதது என்பதை LANGUAGE என்னும் சொல் எடுத்துக் காட்டும். தமிழில் நாவலர், நாவுக்கரசர் என்னும் சொற்களும் நாக்கின் முக்கியத் துவத்தையே உணர்த்தும்.

விவசாயம் அல்லது கமம் என்னும் சொற்கள் ஆங்கிலத்தில் AGRICULTURE என வழங்கும். இச் சொல் AGRICULTURA என்னும் லத்தின் சொல்லை அடி ஒற்றியதாகும். எனினும் இச் சொல் AGRI (வயல்), CULTURA (பயன்படுத்துதல்) என்னும் இரண்டு லத்தின் சொற்களின் இணைப்பு என்பது வெளிப்படை.


இங்கே எடுத்துக் காட்டப்பட்ட பல ஆங்கிலச் சொற்கள் அனைத்தும் லத்தின் சொற்களில் இருந்து உருவானவை. இவை போல, ஆங்கி லத்தில் உள்ள இன்னும் பெருந்தொகையான சொற்கள் லத்தின் சொற்களையே மூலமாகக் கொண்டவை என்பதனை அச் சொற்கள் பற்றிய ஆய்வுகள் ஊடாக எடுத்துக் காட்டலாம்.

இவ்வாறு இன்னும் பலமொழிகளிலிருந்து ஆங்கிலச் சொற்களைக் கடன் பெற்று உலக மொழி என்னும் அந்தஸ்தைப் பெற்றிருந்தாலும் அச் சொற்களினால் அது தனது தனித்துவத்தை (UNIQUE) இழந்து விட்டது என்பது உண்மை. அத்தோடு வேற்று மொழிச் சொற்கள் இல்லையேல் ஆங்கில மொழி என ஒன்று இருக்காது என்பதற்கும் அச் சொற்களே சான்று பகரும். இப்படியொரு பரிதாப நிலை பழைமை மிக்க தமிழ் மொழிக்கு இல்லை என்பதையிட்டு தமிழர்கள் நிச்சயம் பெருமைப்படலாம்.

OOO

## கண்ணீர் அஞ்சலி

### கவிஞர் அம்பி அவர்களின் மறைவு



ஈழத்தின் மூத்த படைப்பாளி அம்பி - இராமலிங்கம் அம்பிகைபாகர் அவர்கள் சிட்னியில் தனது 95ஆவது வயதில் 27.04.2024 அன்று அவுஸ்திரேலியாவில் காலமானார்.

ஈழத்தில் பாப்பா பாடல்கள் வழியே அறிமுகமாகிய இவர், எழுத்துப் பணியில் நீண்டதொரு பரந்து விரிந்த செயற்பாட்டைச் செய்து, அதே துடிப்போடு இயங்கியவர். அவர் அவுஸ்திரேலியத் தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் காப்பாளரும், மூத்த கவிஞரும் ஆவார்.


அமரர் கவிஞர் அம்பி அவர்களுக்கு ஞானம் தனது கண்ணீர் அஞ்சலிகளைச் சமர்ப்பிக்கின்றது.

– ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## மொழிபெயர்ப்புச் சிறுகதை




# ஓடும் பாதணிகள்

**சிறுவர் தொழிலாளர், அதிக உழைப்பு நேரம், வேலைத்தள பாதுகாப்பின்மை, கல்வியில் பாலின சமத்துவமின்மை, அமெரிக்க நுகர்வு கலாசாரம் மற்றும் சூழலை மாசடையச் செய்தல் போன்றவற்றை நுணுக நோக்குவதாலும் கதை சொல்லலில் மாய யாதார்த்தத்தை பயன்படுத்துவதாலும் சிறந்த மதிப்பிடப்பட்ட Running Shoes சிறுகதையானது *The Year's Best Dark Fantasy and Horror: 2015* எனும் பதிப்பில் வெளிவந்தது.**

**Ken Liu சீனாவில் பிறந்து அமெரிக்காவில் வாழும் விருதுகள் பல பெற்ற சிறுகதையாசிரியராவார்.**



**கென் லிய்வ்**
**(Ken Liu)**



தமிழில்
**சு.முரளிதரன்**

அந்த மாடுழைப்பு கூடமான சப்பாத்து தொழிற்சாலை மேற்பார்வையாளன் வூங் "நீ இப்போ இவ்வளவு வேலையையும் செய்து முடிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றாய்." என ஜியாங்கினை நோக்கி உரத்த குரல் எழுப்பிவிட்டு "நீ ஏன் மெது மெதுவாய் வேலை செய்கின்றாய்?" என குற்றம் சாற்றினான்.

அதைக் கேட்ட பதினான்கு வயது ஜியாங்கின் முகம் வெட்கத்தால் சிவந்தது. பழுத்த தக்காளியில் கொழுத்த ஓடில்லா நத்தையை போல துடிதுடித்த வியர்வை வடிந்த மேற்பார்வையாளன் கழுத்தில் இருந்த கோப நரம்புகளை அவள் வெறித்துப் பார்த்தாள். தொழிற்சாலையின் உரிமையாளன் மற்றும் முகாமையாளனை வெறுத்ததை விட அவள் வூங்கை வெறுத்தாள். வெளிநாட்டு வேலை வழங்குநர்கள்தான் வியட்நாமியர்களை மோசமாக நடத்துவார்கள் என்று நினைத்தால் இந்த வூங் வியட்நாமின் யென் சாவ் மாவட்டத்தில் இருந்து வந்தவனாக இருந்தும் மோசமாக நடத்துபவனாக இருந்தான்.

"நாளொன்றுக்கு பதினாறு மணிநேரம் தொடர்ந்து நீண்ட வேலை செய்ய வேண்டியிருக்கின்றது," ஜியாங் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டாள். கண்களைத் தாழ்த்திக் கொண்டாள். "நான் சோர்வடைந்து போய்விட்டேன்."

"நீ ஒரு சோம்பேறி!" என்று வூங் தொடர்ந்து சபித்து ஏசிக் கொட்டியிருந்த வார்த்தைகள் அவன் வாயிலிருந்து தாரை தாரையாக வரும் வாந்தியை போலிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

வூங்கின் உதடுகள் குரூரமான புன்னகையில் சுருண்டிருந்தன. "தண்டனையின் மூலம் தான் உன்னை ஒரு வழிப்படுத்த வேண்டும். இப்போதே தொழிற்சாலையைச் சுற்றி ஐந்து சுற்றுகள் ஓடு. அது மட்டுமல்ல உனக்கு ஒதுக்கப்பட்ட வேலையை முடிக்க இன்றிரவு முடியும்வரை நீ தங்கியிருக்க வேண்டும்."

ஜியாங் நன்றி சொல்லிக் கொண்டாள். இன்று ஒரு சூடான மற்றும் ஈரப்பதமான நாள். அவனிடம் அடி வாங்கி வதைப்படுவதோடு ஒப்பிடும்போது ஓடவிடுவது லேசான தண்டனையாக இருந்தது. தவிர, ஆலைக்குள்ளே அடைபட்டிருக்காமல் வெளியே சிறிது நேரம் கழிக்க அதிலே வாய்ப்பும் இருக்கின்றது. ஆலைக்குள் இயந்திரங்கள் அடி மேல் அடி அடிக்கும் சத்தம் ஒய்ந்ததாக இருக்காது. அது மட்டுமா கவனக்குறைவாக இயக்கப்படும் இராட்சத இயந்திரங்கள் மிருகத்தனமாக அவளை பயமுறுத்திக் கொண்டிருக்கும்.

ஆலை வளாகத்தைச் சுற்றி முதலில் ஓடிய சுற்று எளிதாக இருந்தது. அவளது வெறுங்கால்கள் அங்கு நிரம்பிய அழுக்குகளை தாளகதியாக மிதித்து ஒசை எழுப்பியது. சுற்றியோடுகையில் வூங்கை அவள் கடந்து செல்லும் போது "ஏய் வேகமாக ஒடு!" எனக் கர்ஜித்தான்.

ஜியாங் ஒரு சப்பாத்து தொழிற்சாலையில் பணிபுரிந்தாலும், அவளது குடும்பத்தினர் கிராமத்தில் வாழ்ந்ததைப் போலவே, முடிந்தவரை வெறுங்காலுடன் நடந்து செல்லவே விரும்பினாள். கிராமத்தில் அவள் வயலுக்கு அடுத்துள்ள மென்மையான சேற்றுப் பாதைகளில் ஓடுவதிலும் கால்விரல்களை தரையில் ஊன்றி அசைத்துக்கொண்டிருப்பதிலும் அலாதியான விருப்பம் கொண்டிருந்ததோடு மாதக் கடைசியில் அவளது தந்தை வாங்கித் தரும் இனிப்பான வறுத்த 'பான் ரான்' எனும் அரிசி உருண்டையிலும் ஆசை கொண்டிருந்தாள்.

அவளின் தந்தை தீர்க்கமாக நகரத்துக்கு வர முடிவு செய்திருந்தார். நகரத்தில் அவர் ஒரு தொழிலாளியாக அதிக பணம் சம்பாதித்து தனது குடும்பத்திற்கு நல்ல வாழ்க்கையை வழங்க முடியும் என்று நினைத்திருந்தார். நகரில் காற்று கனமாக இருந்ததோடு அறைகளில் கூட்டம் நிரம்பி வழிந்தது. தெருக்களில் உடைந்த கண்ணாடி மற்றும் ஆணிகள் நிறைந்திருந்தன, அதனால் அவள் மலிவான பிளாஸ்டிக் செருப்புகளை அணிய வேண்டியிருந்தது.

இரண்டாவது சுற்று ஓடும் போது பாதி வழியில் அவளுக்கு லேசான மயக்கம் வருவது போலிருந்தது. சுவாசிக்கும் போது ஏதோ தண்ணீருக்கு அடியில் மூச்சு வெளிவருவது போல் இருந்தது. வியர்வையால் அவளது சட்டை அவள் தோலில் ஒட்டிக்கொண்டது. கருப்பு நிற புள்ளிகள் அவள் கண்களுக்கு முன்பாக வட்டமிட தொடங்கின. அவளுடைய நுரையீரல் எரிவது போலிருந்தது.

"வேகமாக! இன்னும் வேகத்தைக் கூட்டு இல்லாவிட்டால் நீண்ட கவடு வைத்து ஓடு." வூங் கத்திக்கொண்டிருந்தான்.

ஜியாங், வூங்கையும் இந்த தொழிற்சாலையையும் விட்டு விட்டு தப்பி ஓடிவிடலாம் என்று விரும்பினாள். ஓடும் போது அவளால் உருவாக்கிய சப்பாத்துக்களை அணிந்திருப்பதாக அவள் கற்பனை செய்து கொண்டாள். அவை பயிற்சிக்காக அணியும் சப்பாத்தை போல இலகுவான உணர்வைத் தருவதாகவும், ஆனால் எ∴கு பூட்ஸ் போல வலிமையானவை எனவும் இருப்பதாக மெச்சிக் கொண்டாள். கரட முரடான தரையில் இருந்து அவளின் கால்களைப் பாதுகாக்கும் என்றும் நினைத்தாள், ஆனால் நிச்சயமாக அவளால் அத்தகைய பாதணிகளை வாங்க முடியாது. அத்தகைய பாதணி அணிந்து ஓடுவது பறப்பது போல் இருக்கும் என்று அவள் நினைத்தாள். வானத்தை நோக்கி ஓடுவதும் பறவைகளோடு நட்பு கொள்வதும் நன்றாக இருக்கும் அல்லவா?

ஆனால் வூங்கின் மோசமான சபிக்கும் வார்த்தைகள் அவளை மீண்டும் பூமிக்கு, நிகழ்காலத்திற்கு கொண்டு வந்தன.

அவள் கால்களை எடுத்து வைப்பது கடினமாகிக்கொண்டே இருந்தது. அவள் கால்கள் தரையில் மோதியதால் வலித்தது. அவளால் மூச்சு விட முடியவில்லை. சூரியன் உச்சம் கொண்டவனாக மிகவும் சூடாகவும் பிரகாசமாகவும் இருந்தான்.

"நீ வேகமாக ஓடவில்லை என்றால், இப்போதே வெளியேறலாம், திரும்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரக்கூடாது. இந்த ஊரில் உள்ள வேறு எந்த தொழிற்சாலையிலும் வேலை கிடைக்கும் என்று எதிர்பார்க்க வேண்டாம். எனக்கு எல்லா தொழிற்சாலை அதிகாரிகளையும் தெரியும்."

கியாங் ஓடுவதை கைவிட தயாரானாள். ஓடுவதை நிறுத்தி விட்டு நடக்க விரும்பினாள். அவள் வீட்டிற்கு சென்றுவிடலாமென யோசித்தாள். அங்கு அவள் அம்மாவின் அன்பான அரவணைப்பில் அழுதபடியே தோளில் சாய்ந்து தூங்க முடியும்.

ஆனால் அப்போது அவள் தூங்கிய பிறகு இருக்கும் படுக்கையறையைச் சுற்றியுள்ள, காட்சியை கற்பனை செய்து பார்த்தாள். ஒரு கட்டுமான தளத்தில் விபத்தின் காரணமாக கால்கள் செயலிழந்த பிறகு அவளது தந்தை படுக்கையிலே முடங்கியிருப்பதும் நம்பிக்கையின்றி கூரையை வெறித்துப் பார்த்து, உதடுகளைக் கடித்துக் கொண்டு, வலியால் புலம்பாமல் இருக்க முயற்சிப்பதும் தெரிந்தது. அவருக்குப் பக்கத்தில் அவள் அம்மாவும் இருப்பாள், அம்மா நகரத்தின் மறுபுறத்தில் உள்ள சட்டை தைக்கும் தொழிற்சாலைக்கு நடக்க வேண்டி சூரியன் வெளிப்படும் முன் எழுந்திருக்க வேண்டும். அங்கு அம்மா சம்பாதிக்கும் பணம் அவளது தந்தையின் மருந்துக்கு செலுத்தப்படுவதாக இருந்தது. ஜியாங்கின் ஊதியம் அவர்களின் உணவுக்கும் அவளது சகோதரனை மாகாண தலைநகரில் உயர்நிலைப் பள்ளியில் கற்க வைக்கவும் இடங்கொடுத்தது. ஆனால் ஜியாங் நீக்கப்பட்டால் அந்த நிலையில், அவர்கள் என்ன செய்வார்கள்?

அவளுடைய அம்மா அவளை இறுக்கமாக அணைத்துக் கொள்ளக்கூடும், ஆனால் தான் இனி ஒரு சிறுமி அல்ல என்பதை ஜியாங் நினைவு கூர்ந்தாள.

அவள் தன்னைத் தன்னை வேகமாக ஓட வேண்டி வற்புறுத்தினாள்.

ஒரு சில பெண் பிள்ளைகள், ஓடி களைத்துப் போன ஜியாங் தொழிற்சாலைக்குள் மீண்டும் நுழையும் போது தடுமாறியதைக் கண்டார்கள். ஆனாலும் பெரும்பாலானவர்கள் மிகவும் பரப்பரப்பாக வேலையில் ஈடுபட்டு இருந்ததால் அவளைக் குறித்து கண்டுகொள்ளவில்லை. வூங் இயந்திரங்களை மிக வேகமாக இயக்கியதன் மூலம் ஆலை உரிமையாளர்களைக் கவர்ந்த ஒருவன். இதனால் வேலை செய்யும் பெண் பிள்ளைகள் மிகவும் சிரமப்பட்டனர்.

எதிரொலி கேட்கும் குகை மாதிரியான அந்த மண்டபம் இரைச்சலால் நிரம்பியது. அது தையல் நிலையங்களில் இருந்து பரவும் தொடர்ச்சி யாக டிக்-டிக்-டிக் எனும் விட்டு விட்டு வரும் ஓசை, ஸ்டாம்பிங் மற்றும் சப்பாத்துக்கான அச்சு வெட்டும் டை கட்டிங் மெசின்களின் ஹூஸ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுஸ் சப்தம். ரப்பர் அச்சுகள் மற்றும் சூடான பசையுடன் வேலைத்தள மேசைகளிலிருந்து இருந்து ஹிஸிங் ஹிஸிங் ஒலி என்பவற்றின் கலவையாக இருந்தது.

ஜியாங் டை கட்டர் இயந்திரத்திடம் சென்று இயந்திரத்தின் பசியுள்ள பிளேடுகளுக்கு பிளாஸ்டிக் தகடுகளை ஊட்டும் வெறித்தனமான வேலையை தொடர முயன்றாள். தண்ணீர் விடாய் மிகுந்த அவளுக்கு உடல் தகிப்பதாக இருந்தது. தூசி மற்றும்-ரசாயன புகை, பசை யினதும் பிளாஸ்டிக்கினதும் மணம் அவளுக்கு இருமலையும் மூச்சுத்திணறலையும் உண்டாக் கியது. திரண்ட கண்ணீர் துளிகள் அவள் கண்களை மங்கலாக்கியது. அவள் அவற்றை கடுங்கோபத்துடன் துடைத்தெறிந்தாள்.

தனது விதியை நினைத்து தன்னைத்தானே ஆறுதல்படுத்த முயன்றாள். அவள் வீட்டிற்குச் சென்ற பின் அங்கு அவள் அம்மா ஜியாங்கை விட சோர்வாக இருந்தாலும் சூடான தேநீர் குடுவையுடன் தயாராக இருப்பதை நினைத்துப் பார்த்தாள்.

"வேகமாக!" அவளது சகபாடி தொழிலாளி பெண் பிள்ளை நுங் அவளது பகல் கனவில் குறுக்கிட்டாள். "உன்னால் என் வேலை பின் தங்குகின்றது. அதற்காக நான் தண்டிக்கப்பட விரும்பவில்லை!"

ஜியாங்கின் கால்கள் மிகவும் புண்பட்டு அவளால் நேராக நிற்க முடியவில்லை. அந்த கூடமானது அவளை மையமாகக் கொண்டு சுற்றிச் சுழலுவது போல் இருந்தது. களைத்துப் போயிருந்தாலும் அவள் முயற்சி செய்தாள், உண்மையில் வேகப்படுத்த முயன்றாள். அவள் தன் உடல் எடையை முன்னோக்கி சரித்தாள், தலைமேல் இருந்த பிளாஸ்டிக் தகடுகளின் மேலடுக்கு விழுந்து அவள் கால்களை தட்டியது. அவள் தன் சுமையை இறக்கிவிட்டு, தன் கைகளால் அதைப் பிடித்துக்கொண்டு தன் முன்னால் இருந்த இயந்திரத்தில் தன் தலை முட்டுப்படுவதை தவிர்த்தாள். உடைந்த இயந்திர பாகங்களை தொழிற்சாலைத் தளத்தில் அப்படியே வைத்திருப்பதால் அவற்றில் இடிபடுவது எவ்வளவு ஆபத்தானது என்று பெண் பிள்ளைகள் அடிக்கடி முறையிட்டாலும் கவனக்குறைவாக பெண் பிள்ளைகள் நடப்பதாலே அவ்வாறு நடக்கிறது என வூங் எல்லோருக்கும் பதில் கூறியிருந்தான்.

தான் ஒரு சிறிய இடைவெளி எடுத்துக் கொள்ள வேண்டுமென ஜியாங் நினைத்தாள்.

நேரம் மெதுவாக நகர்வதாக தோன்றியது, ஒவ்வொரு கணமும் குழந்தைப் பருவத்தின் நினைவாக அவளது நனவில் நீடித்தது.

அவள் விரல்களில் அழுத்தத்தை உணர்ந்தாள், அவை கட்டர் பிளேடுகளால் வெட்டப்பட்டபோது நம்பமுடியாத வலியை சிறிது நேரம் உணர்ந்தாள்.

சகபாடி நுங்கின் கூச்சலும் அலறலும் வெகு தொலைவில் இருந்து வருவது போல் இருந்தது. மன்னிக்கவும், அவளை தன் செயற்பாட்டினால் மேலும் சிக்கலில் மாட்டக் கூடாது என ஜியாங் நினத்தான்.

அவள் கீழே விழும் போது இயந்திரத்தின் அடிவாரத்தில் உடைந்த, துருப்பிடித்த கூர்முனைக் கருவி அவள் முகத்தில் குத்த விரைந்து வருவதைக் கண்டாள். அவள் கண்களை மூடினாள்.

அவளைச் சுற்றி நிழல்கள் குவிந்தன. மேலும் கூச்சல். "எல்லாம் போய் உங்கள் வேலை களை பாருங்கள் " உரத்த குரலில் வூங் கத்திக் கொண்டிருந்தான்.

ஆம், ஜியாங் தானும் வேலைக்கு திரும்ப வேண்டும நினைத்தாள். "நான் ஒரு நொடியில் எழுந்துவிடுவேன், அம்மா" என முனகினாள்.

ஆனால் அவளால் அவளது கைகள், கால்கள், உடல் இருப்பதை உணர முடியவில்லை. அவளால் மேல் அடுக்கில் தான் ஊற வைக்கப் படுவதை உணரக்கூடியதாக இருந்தது. இழை களைப் பற்றிக்கொள்ளவும், மென்மையான பொருளில் தன்னை இணைத்துக் கொள்ளவும் அவள் விரும்பினாள்.

"இவற்றை ஏன் தூக்கி எறிந்து விட வேண்டும்?" வூங் யாரிடமோ பொறுமையிழந்து பேசுவதை அவள் கேட்டாள். "அவை முற்றிலும் பயன்படுத்தக்கூடியவை! கொஞ்சம் ரத்தம் தான் பட்டிருக்கு. அதை உங்கள் கூலியில் இருந்து எடுக்க வேண்டுமா?"

பின்னர் அவள் கன்வேயர் பெல்ட்டின் மீது தூக்கி வைக்கப்பட்டதை உணர்ந்தாள், டை கட்டர் இயந்திரத்தின் அச்சு வெட்டும் கூர்மையான பிளேடுகள் தன்னைச் சுற்றி வெட்டுவதை உணர்ந்தாள், நியூமேடிக் பிரஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் இயந்திரத்தின் உலோகத்தனமானதும் கனமானதுமான குத்துக்களைத் வாங்கிக் கொண்டு ஊசி மற்றும் நூலின் துளைப்புகளை தாங்கிக் கொண்டு, சூடான நீல நிற பூச்சு சாயத்தின் கசப்பான சுவையை சுவைக்க வேண்டியதாக இருந்தது. அவள் கத்த விரும்பினாள், ஆனால் முடியவில்லை.

"மன்னிக்கவும், அம்மா" என சொல்லிக் கொண்டாள்.

♦ ♦ ♦ ♦

ஒரு கறுப்புப் பெட்டியில் அடைக்கப்பட்ட நீலநிறமான ஜியாங், பசிபிக் கடல் கடந்து இந்த புதிய கண்டத்தின் நெடுஞ்சாலைகள் வழியாக, காலணி கடையின் களஞ்சியசாலைக்கு வந்த தனது பயணத்தை சிறிது நினைவு கூர்ந்தாள். அவள் இறுதியாக எழுந்த நேரத்தில், அவள் அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலத்தின் உள்ள புறநகர் வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்டாள், அங்கு அவள் பளபளப்பான காகிதத்தில் சுற்றப்பட்டு, பல சுற்றப்பட்ட பொதி களுடன் ஒரு மரத்தின் கீழ் வைக்கப்பட்டாள்.

அந்த வீட்டில் பேசும் மொழி அவளுக்குப் புரியவில்லை. ஆனால் பையனின் முகத்தில் இருந்த மகிழ்ச்சியை அவள் பெட்டியிலிருந்து தன்னை அவிழ்த்து எடுக்கும்போது புரிந்து கொண்டாள். அவளை வளைத்து தன் காலடியில் அணிந்து, வீட்டைச் சுற்றிக் கட்டினான்.

ஜியாங்கின் தந்தை அவளிடம் இனிப்பு பான் ரானைக் கொடுத்தபோது தந்தையின் முகத்தில் தோன்றிய புன்னகையை அவனின் பெற்றோர்களின் முகத்தில் கண்டாள்.

காலப்போக்கில், பையனின் பெயர் பாபி என்பதையும், அவன் வேகமாகவும் நீண்ட நேரம் ஓட விரும்புகிறான் என்பதையும் அவள் அறிந்தாள்.

தினமும் காலையில், பாபி அவளை ஓட அழைத்துச் சென்றான். அவள் மிருதுவான, குளிர்ந்த காற்றில் ஓடுவதை விரும்பினாள். வியட்நாமில் இருந்த அவளது வீட்டிலிருந்து வித்தியாசமானதாக இங்கே சூழல் மிகவும் அமைதியாக இருந்தது. பாபி சீரான, சிரமமில்லாத வேகத்தில் ஓடியதோடு நடைபாதையில் அவள் எழுப்பிய சந்தமயமான ஒலி அவளுக்குப் பிடித்திருந்தது. சில நேரங்களில் அவள் ஒரு ஜோடி சிட்டுக்குருவிகளைப் போல பறப்பதாகவும், சறுக்கி, தரையில் மூழ்குவதாகவும் கற்பனை செய்தாள்.

"த்வாக், த்வாக், த்வாக" என அவள் பனி படிந்த புல் மற்றும் சூரிய வெப்பமான நடைபாதை யில் பாடினாள். "க்ரஞ்ச், க்ரஞ்ச், க்ரஞ்ச்" என ஒலிக்க வைக்கும் பாதையில் பரவியிருக்கும். ஜல்லிக்கற்களையும், கூழாங்கற்களையும் வரவேற்றாள். தன்னைச் சுற்றியுள்ள வசதியான, பெரிய வீடுகள், சுத்தமான தெருக்கள் மற்றும் பரந்த திறந்தவெளிகளை அவள் கவனித்தாள். பாபியின் சுவாசத்தை அனுபவித்துக் கொண்டு அவனும் அவளும் சதா என்றென்றும் ஒன்றாக ஓடலாம் என திடமாக நினைத்துக்கொண்டாள்.

ஜியாங் தன்னை நினைத்து வருத்தப்படாமல் இருக்க கற்றுக் கொண்டாள். நிச்சயமாக, அவள் இனி ஒரு ஆள் அல்லவே. தொழிற்சாலையில் இருந்த தனது பழைய வாழ்க்கையில், உலோகம் மற்றும் ரப்பருக்குப் பதிலாக இப்போது சதை மற்றும் எலும்பினால் செய்யப்பட்ட ஒரு நெம்புகோல் தன்னோடு இருப்பதை உணர்ந்தாள். ஓடும்போது பாபியின் கால்களுக்கு தொட்டிலாக இருப்பதை ஒப்பிட்டுப் பார்த்தால், அவளை ஏறக்குறைய மிகவும் உண்மையானதாகவும், உயிருடன் இருப்பதாகவும் உணர வைத்தது.

அவள் தன் தாயை காணமுடியாமை குறித்து வருந்தச் செய்தாள், மேலும் தாயிடம் ஒரு செய்தியை சொல்ல வேண்டும் என்று அடிக்கடி விரும்பினாள். அது "அம்மா, நான் நன்றாக இருக்கிறேன். பணம், உணவு, வேலை ஒதுக்கீடு, வலி பற்றி நான் கவலைப்பட வில்லை" என்பது தான். தன் தந்தை நலமாக இருப்பதாகவும், தன் சகோதரனைப் பாடசாலையில் படிக்க வைக்க அவர்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்திருப்பார்கள் என்றும் அவள் நம்பினாள்.

வசந்த காலம் கோடைகாலமாக மாறியது, பின்னர் இலையுதிர் காலம் மற்றும் குளிர்காலம். ஜியாங் பனிக்கட்டியில் தனது காலடி தடத்தை கண்டுபிடிக்கும் சவாலை விரும்பினாள். ஆனால் பனியில் ஓடுவது அவளுக்கு கடினமாக இருந்தது. அவளுக்குள் விரிசல்கள் தோன்றி, தண்ணீர் உள்ளே புகுந்தது. அவள் இழுவை, தரையில் இருந்த பிடியை இழப்பதை அவளால் உணர முடிந்தது.

♦ ♦ ♦ ♦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் வசந்த காலம் வந்தது. பாபி ஒரு பெட்டியைத் திறந்து ஒரு புதிய ஜோடி பாதணிகளை எடுத்தான்.

ஜியாங் புதியதை பயத்துடன் பார்த்தாள். பாபி அவளை தரை தோய்த்து எட்டி உதைத்த போது, சத்தமிட்டு, "புதிய பாதணிகள் என் போல் உயிர்க் கொண்டதல்ல" என சொல்ல நினைத்தாள். பாபி தனது காலில் புதிய பாதணிகளை அணிந்துகொண்டு, அதனோடு பரிச்சயம் கொள்ள முயற்சிசெய்து சுற்றித் திரிந்தான்.

பின்னர் அவன் குனிந்து ஜியாங்கை எடுத்தான். அவளுடைய இரண்டு பகுதிகளையும் ஒன்றாக சப்பாத்து பட்டியினால் இணைத்தான். அவள் இதயம் துள்ளியது. பாபி அவளை மறக்கவில்லை. அவள் மாற்றப்படவில்லை. அவர்கள் ஒன்றாக ஓடிக்கொண்டே இருக்கலாம்.

ஓடும்போது பாபியின் கழுத்தில் அவளை மாலை மாதிரி மாட்டிக்கொண்டது அவளுக்கு வித்தியாசமான உணர்வைத் தந்தது. அவள் தரையிலிருந்து உயரமாக இருப்பதை விரும்பினாள், எல்லாவற்றையும் நன்றாக பார்க்க முடியும். அவள் சிறுமியாக இருந்தபோது, திருவிழாக்களில் ஊர்வலங்களை பார்க்க அவள் தந்தையின் தோளில் மீது அமர்ந்து சவாரி செய்வது போல் இருந்தது.

ஜியாங் தனது அம்மா பாடும் பழைய பாடலொன்றை பாட விரும்பினாரள். அவள் அம்மாவின் குரல் இன்னும் அப்படியே இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டாள். தூசி நிறைந்த, இரைச்சல் மிக்க தொழிற்சாலை, அரட்டை அடிக்கும் பெண் பிள்ளைகள், வீட்டின் இனிமையான வாசனைத் தேநீர், அவளது தாயின் கணிவான குரல் ஆகியவற்றைப் பற்றி அவள் பாபியிடம் தனது கதையைச் சொல்ல அவாக் கொண்டாள். பாபிக்கு அதைக் கேட்க ஆர்வமாக இருக்கும் இல்லையா? ஒரு விதத்தில், நல்ல மற்றும் மலிவான ஓடும் காலணிகளுக்கான அவனது ஆசை அவளை பசிபிக் கடல் கடந்து இந்தப் புதிய வாழ்க்கைக்கு அழைத்திருக்கவில்லையா?

பாபி சாலையோரம் நின்றான். கறுத்த கவசமிடப்பட்ட மின் கம்பிகள் தலைக்கு மேல் நீண்டு சென்றிருந்தன.

சடாரென அவள் தூக்கி உயர எறிப்பட்டு காற்றில் மேலே பறந்து கொண்டிருந்தாள். அவள் செல்லக்கூடிய உச்சியை அடைந்து விழத் தொடங்கினாள். விழும் போது அவளது பட்டி கம்பிகளில் சிக்கியது. அவள் சாலைக்கு மேலாக கம்பியொன்றில் உயரமாக தொங்கினாள், அவள் இரு திசைகளிலும் பார்க்கக்கூடியவளாக இருந்தாள்.

பாபி ஏற்கனவே சாலையின் வழியே சென்றபடி மறைந்து கொண்டிருந்தான். அவன் அவளை திரும்பிப் பார்க்கவில்லை.

ஜியாங் பெருமூச்சு விட்டுக் கொண்டு அங்கேயே குடியேறினாள். வரவிருக்கும் வருடங்களில் மழை, பனிப்பொழிவு மற்றும் வெயிலெரிப்பை அவள் கற்பனை செய்தாள். அவள் வயதாகி கிழிந்து துண்டு துண்டாகி போவதை கற்பனை செய்தாள்.

ஆனால் ஒரு சக்திவாய்ந்த காற்று அவளைத் தூக்கி ஆட்டியது. அவளது பக்க வாட்டில் உள்ள துளைகள் மற்றும் அவளது உள்ளங்கால்களில் விரிசல் வழியாக நுழைந்த காற்று விசில் அடித்தது. மேலும் காற்று பலமாக வீசியது.

"ஹலோ," என்று ஜியாங் தனது புதிய குரலை பயன்படுத்தி கம்பியில் தூங்கிக் கொண்டிருந்த சிட்டுக்குருவிகளைத் திடுக்கிடச் செய்தாள். அவள் இப்போது முன்பைவிட சத்தமாக, மிக சத்தமாக ஒலி எழுப்பவளாக இருந்தாள்.

நான் இறுதியாக வானத்தில் ஓடிக் கொண்டிருக்கின்றேன். நான் பறவைகளுடன் சினேகமாகிக் கொள்வேன் என்று அவள் நினைத்துக் கொண்டாள்.

சிதையும் தன் உடம்பில் காற்று ஊடுருவி ஊளையிட்டு முனகுவதைத் தொடர்ந்து அவள் தன் கதையைப் பாட ஆரம்பித்தாள்.

○○○




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுங்கதை

# உற்சாக பானம்



அந்த தபால்கந்தோருக்கு முன்னால் நீண்ட கியுவரிசை. எல்லாமுமே வயோதிபர்கள்தான். எழுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வயோதிபர்களுக்கான கொடுப்பனவு இன்று கொடுக்கிறார்களாம். அதைப்பெறுவதற்காகத்தான் இன்று சனம் நீண்டு நிற்கிறது. எல்லோருமே முகக்கவசம் அணிந்திருக்கிறார்கள் இடைவெளியைப் பேணுகிறார்கள். காக்கிச்சட்டைக்காரரும் ஆங்காங்கே தெரிகிறார்கள். முகக்கவசத்தை மூக்கையும் மூடி இழுத்து விட்டு மூச்செடுக்கக் கஷ்டப்படுகிறார்கள்! ஆகவும் இயலாதவரை ஒருபக்கமாக இருத்திவிட்டு இளம்பிள்ளைகள் அவர்களுக்காக நிற்கிறார்கள்.... கிழமானாலும் நல்ல வசதியானவர்களும் இந்த வரிசையில் நிற்கிறார்கள். சும்மா வருவதை ஏன் விடுவான்? சும்மாவா இரண்டாயிரம் ரூபாய்! இந்த பாட்டன் பாட்டி வரிசையில் செல்லப்பா கிழவனும் நின்றிருந்தார். பரிதாபத்துக்குரியவர்களில் அவரும் ஒருவராகக் காட்சியளித்தார். கனநேரம் நிற்கவியலாமல் இடைக்கிடை குந்தியிருந்து எழும்பினார்! இந்தப் பிச்சைக்காசு எப்ப கொடுப்பாங்கள் என்று அடிக்கடி கந்தோருக்கு வந்து விசாரிப்பார். கொடுப்பனவை வேளைக்கே வந்து முன்னணியில் வந்து எடுத்துக்கொண்டு போய்விடும் அவருக்கு இன்று ஏனோ பின்னணியில் காக்க வேண்டியதாயிற்று! அவர் பரிதாபத்தை பார்த்து முன்னரங்கில் கொண்டுவிட யாருக்கும் மனதாயில்லை. எல்லோருமே இயலாதவர்கள் தானே. நாரியைப் பிடித்துக்கொண்டு எப்படியோ குந்தி எழும்பி அரக்கி அரக்கி போய் வயோதிபர் அட்டையைக் காட்டி காசைப் பெற்றுவிட்டார்! பட்டபாடு கேடெல்லாம் எங்கே போனதோ, அவர் புன்னகையோடு போயிற்று!............... இப்போது உற்சாகமாக நடைபயின்றார். எங்கு? சாராயத் தவறணையை நோக்கி! வீதியைக்கடந்தால் முன்னே நிமிர்ந்து நிற்கிறது அது. வெகு உற்சாகமாக போவதும் வருவதுமாக இருக்கிறார்கள்! செல்லப்பா கிழவனும் உற்சாகமாக அங்கே செல்லலானார். சிறிது நேரத்தில் சாராய முழுப்போத்தலொன்றை கட்டியணைத்தபடி வெகு உற்சாகமாக புன்னகை பூக்க நடந்து வந்ததார் வீடு நோக்கி!



சூசை எட்வேட்

○○○



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதையும் கவிஞனும்

தமிழ்க் கவிதை பற்றி அறிய விரும்பு பவர்கள் முதலில் தமிழிலக்கிய வரலாற்றில் கவிதையின் தோற்றத்தையும் அதன் வடிவப் பரிணாமத்தையும் தெரிந்து கொள்வது மிக அவசியமாகும். சங்க காலத்திலே செய்யு ளானது ஆசிரியம், விருத்தம், கலி, பரி என வரையறுத்த பா வடிவங்களைக் கொண்டி ருந்ததுடன், அவை அகத்திணை, புறத்திணை ஒழுக்கங்களைப் பாடியிருந்தன. அதன் மூலம் அன்றைய சமூக மக்களின் வாழ்வினை படம் பிடித்துக் காட்டின. அதைத் தொடர்ந்து வந்த சங்கம் மருவிய காலத்தில் நீதி இலக்கியமாய், பல்லவர் காலத்தில் பக்தி இலக்கியமாய், சோழர் காலத்தில் காப்பிய இலக்கியமாய், நாயக்கர் காலத்தில் சிற்றிலக்கியமாய், இவ்வாறு ஒவ்வொரு காலகட்டத்திலும் செய்யுள் பல வடிவங்களில் வளர்ந்து பா வடிவங்களைப் பெற்றன என்பதை நாம் காண்கின்றோம்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ்க் கவிதைப் பரப்புக்கு பாரதி, பாரதிதாசன் ஆகியோரின் வரவு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது. இருவரும் முற்காலத்தில் செறிவாகவும், இறுக்கமாகவும் இருந்த செய்யுளை நெகிழ்ச்சியும் புதிய வடிவங்களும் கொண்ட நவீன கவிதையாக மாற்றினர். இதனால் தமிழ்க் கவிதை புதியதோர் மரபு மாற்றத்தைத் தோற்றுவித்தது எனலாம்.

இலக்கியப் படைப்புக்களில் காலத்தால் முந்தியது கவிதையே. கவிதையை மொழியின் இளவரசி என்பர். வேத காலத்திலே இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கும் வேத சுலோகங்களாக எழுதப்பட்ட போது அவை சுருங்கிய செறிவான சொற்களில் அமைந்திருந்தன. அதனால் மந்திரங்கள் என அவற்றை அழைத்தனர். அந்தணர்கள் இயற்கைத் தெய்வங்களை வழிபாடு செய்வ தற்காக சுலோகங்களை மந்திரங்களாக ஓதினர். இதனை நன்கு அறிந்து வைத்திருந்த மகாகவி பாரதி "மந்திரம் போல் வேண்டுமடா சொல்லின்பம்" என்று பாடினான் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

கவிதையின் கதையானது சொற்களின் கதையென்பர். எனவே "கவிதையின் மூலதனம்" சொற்கள் என்று கூறுவர். கவிதை மூலமாக நாம் எப்பொருளையும் பாடு பொருள் ஆக்கலாம். முற்காலத்தில் மருத்துவம், சோதிடம், வான சாஸ்த்திரம், தர்க்கம், காதல், வீரம் என்னும் பல பொருட்களில் புலவர்கள் செய்யுள் செய்தனர். நாம், முதலில் கவிதை வேறு வசனம் வேறு என்பதை புரிந்து கொள்ள வேண்டும். புதுக்கவிதை கூட முற்று முழுதான வசனம் அல்ல. எனவே கவிதை என்று கூறும்போது அதற்கு ஓரளவு இசை அல்லது ஒலி இருப்பது அவசியமாகும். இதனைச் சிலர் 'லயம்' என்றும் குறிப்பிடுவர். புதுக்கவிதையில் எதுகை இல்லாது போனாலும் அதற்கு மோனையாவது இருப்பது அதன் ஒலியாற்றலை சிறப்பிக்கும் என்று கவிஞர் சி.சு.செல்லப்பா கூறியுள்ளது கவனிக்கத்தக்கது. கவிதையானது படிப்போர்க்கும் அதனைக் கேட்போர்க்கும் இன்பத்தை உயர் இலட்சியத்தை ஏற்படுத்த வேண்டும்.

இன்றைய கவிதையின் செல்நெறிகளை அவதானிக்கும்போது அவற்றின் சிறப்பு எளிமையும் பொருளாழமும் கொண்டதாய் இருப்பதை அவதானிக்கலாம். இதனைப் பாரதி எளிய பதங்கள், எளியநடை எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவவற்றைக் கொண்டு எவனொருவன் காவியம் செய்து தருவானேல்



-ஆவூரான் சித்ரா சின்னராஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் தமிழுக்கு உயிர் தந்தவனாவான் என்று கூறியுள்ளார்.

கவிதை என்பது பல கூறுகளினாலாய கூட்டுப் பொருளாகும். இதில் சொல், பொருள், ஓசை, அலங்காரம், உணர்வு ஆகியன அடங்கி இருக்கும். இதனால் கவிதையானது பல உறுப்புக் களாலாகிய உடல் போன்றது என்று கூறுவர். உடலுக்கு கண், காது, மூக்கு, செவி, வாய், கை, கால், என்பன இருப்பது போன்று உயிரும் இருக்கின்றது. கவிதைக்கு உயிர் போன்றது, அதன் ஆழமான பொருளாகும். நல்ல கவிதையை அழகான வீட்டிற்கு உவமை கூறலாம். ஒரு நல்ல கவிதையில் கற்பனை, ஒலிச்சிறப்பு, யாப்பமைதி, அணிநலம், தொடை நலம், குறிப்புப் பொருள் என்பன இருக்க வேண்டும்.

சிறந்த சொற்கள் சிறப்பான ஒழுங்கில் அமைந்தது கவிதை என்பர். எனவே கவிதையின் சிறப்புக்கு சிறந்த சொற்கள் மிகவும் அவசிய மானது. சிறந்த, அழகான புதிய சொற்களை கவிஞர்கள் தேடிப் பெற்றுக் கொள்ள வேண்டும். ஒரு சொல்லுக்குப் பொருளாற்றலும் உண்டு. ஒலி ஆற்றலும் உண்டு. இதை அடைவதற்காக கவிஞன் பல உத்திகளைப் பயன்படுத்தி ஆற்றல் களைப் புலப்படுத்துகின்றான். அத்துடன் கவிதை யிலே சாதாரண சொற்கள் கூட அசாதாரண ஆற்றலைப் பெற்று விளங்குவதைக் காண்கிறோம். இதற்கான காரணம் என்ன? அதனைப் படைப்புமுறை அல்லது உத்திகள் என்போம். கவிதையிலே இவை சாத்தியமாகும் பட்சத்தில் அருமையான கவிதைகளை உங்களாலும் படைக்க முடியும்.

உவமை என்பது ஒரு பொருளை இன்னொரு பொருளுக்கு ஒப்பிட்டுக் கூறுதல் கவிஞன் உவமை அணிமூலம் தனது எண்ணங்களையும், வர்ணனைகளையும் ஆழமாகவும், அழுத்த மாகவும் கவிதையில் படைக்கின்றான் உதாரணமாக,

கவிதை வரிகள்

1. மதுரையில் பறந்த மீன் கொடியை உன் கண்களில் கண்டேனே!

2. பால் நிலாவைப் போல வந்த பாவையல்லவா!

3. முத்துப் போல் பல் அழகி

| உவமேயம் | உவமானம் |
|---|---|
| 1. மீன் | கண் |
| 2. பால்நிலா | பாவை |
| 3. முத்து | பல் |

அணிகளில் உவமை மிகவும் பிரதானமானது. அதனால் சுடுதலான உதாரணங்கள் தரப் பட்டுள்ளன.

கவிதையில் காணப்படுகின்ற அணிகளை சுருக்கமாக மூன்று பிரிவுக்குள் அடக்கலாம். 1. உவமை 2. உருவகம் 3. குறியீடு. அணிகளிலே மிகவும் சிறந்தது உருவகம் ஆகும் என்று தத்துவஞானி அரிஸ்ரோட்டில் கூறியுள்ளார். உவமையைக் கையாளும் கவிஞன், உவமேயம், உவமானம் ஆகிய இரு பொருட்களையும் வெவ்வேறாக காட்டுகின்றான். ஆனால் உருவகத்தில் இவையிரண்டையும் ஒன்றாகவே காட்டுவான். உதாரணமாக நெருப்புக் கண் என்று கூறும் பொழுது, நெருப்பு வேறு, கண் வேறாக உள்ளன. அதனையே "கண்நெருப்பு" என்னும் போது உணர்வின் அடிப்படையில் ஒரு புதிய மனப்பதிவு தோன்றுகிறது. இதே போலத்தான் கல் நெஞ்சன் என்றால் உவமை நெஞ்சகக்கல் என்றால் உருவகம்.

மேலும், நளவெண்பாவில் புகழேந்திப் புலவர் கையாண்ட ஒரு உருவகத்தை இங்கு குறிப் பிடலாம். "மன்னர் விழித்தாமரை பூத்த மண்டபத்தே" இதில் விழித்தாமரை என்னும் உருவ கத்தைப் புலவர் மிக அற்புதமாக பயன்படுத்தி யுள்ளார். தாமரை விழி என்ற உவமையைப் பயன்படுத்தாது. விழித்தாமரை என்ற உருவ கத்தைப் பயன்படுத்தி அழகுபடுத்திக் காட்டுகின்றார். கவிஞர் இக்காலத்தில் உருவகத் தைப் படிமம் (Image) என்று அழைக்கின்றனர்.

கற்பனை என்பது கவிஞரின் அறிவையும், அனுபவத்தையும், சிந்தனை ஆற்றலையும் காட்டுவது. இதனால் கற்பனையே கவிதையின் மூச்சு என்பர். அதை நாம் பாரதி பாடலொன்றிலே காண்போம்.

**"காணி நிலம் வேண்டும்! – பராசக்தி**
**காணிநிலம் வேண்டும்**
**பத்துப் பன்னிரண்டு**
**தென்னைமரம் வேண்டும்"**

அல்லூயூர்க் கவிஞர் மு.செல்லையாவின் கற்பனைவளம்

சிறுவர் பாடல் ஒன்றில் பின்வருமாறு அமைந்துள்ளது.

**"வட்டத் தோசை சுட்டது போல்**
**வானில் இருந்த சந்திரனை**
**துட்டச் சிறுவன் யாருடைத்தான்**
**சொல்வாய் உண்மை தோன்றிடவே."**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே, சில உயர்ந்த கற்பனையும் கவிஞனை மகாகவிகளாக உயர்த்திவிடும் சிறப்பினை நாம் காண்கின்றோம்.

கவிதைக்கும் உரைநடைக்கும் இடையே அவற்றின் உருவத்திலும் ஓசை ஒழுங்கிலும் வேறுபாடுகள் உண்டு. முக்கியமாக கவிதைக்கு ஓசைநயம் இருக்க வேண்டும். கவிதையை வாசிக்கும் போதோ அல்லது படிக்கும்போதோ ஏற்படும் ஒலியே ஓசைநயம் ஆகும். கவிதையின் ஒலி ஒழுங்குகளும் அமைதியுமே அதனது தனிப் பண்பாகும். கவிதையிலே வருகின்ற ஓசை நயமானது வித்தியாசமானது. அது பாட்டிலே வருகின்ற இசைத்தன்மை போன்றதல்ல.

கவிதையின் பொருளாற்றலை வெளிப் படுத்துவன உவமை, உருவகம், படிமம், குறியீடு என்பனவாகும். ஆனால் ஒலி ஆற்றலை வெளிப்படுத்துவன எதுவென்றால் எதுகை, மோனை, தளை என்பனவாகும். இங்கே பாரதியின் பாப்பாப் பாடலைப் பார்ப்போம்.

**"ஓடி விளையாடு பாப்பா – நீ**
**ஓய்ந்திருக்க லாகாது பாப்பா**
**கூடி விளையாடு பாப்பா – ஒரு**
**குழந்தையை வையாதே பாப்பா"**

இப்பாடலில் எதுகை: ஓடி, கூடி, என்பன மோனை, ஓ, ஓ, கூ, கு என்பனவாகும்.

தளையாக வருவது ஓய்ந்து இருத்தல ஆகாது இம்மூன்று சீர்களும் "ஓய்ந்திருக்கலாகாது" என்று ஓசை அடிப்படையில் இணைந் திருக்கின்றன. இவ்வாறு வருவதை தளை என்று அழைப்பர்.

ஒலி நயத்திற்கு நாம் பின்வரும் கவிதை வரிகளைப் பார்க்கலாம்.

**"விந்தையடா! விந்தையடா!**
**அமுதமடா! தேசமடா"**

இந்நிலையில் எதுகை, மோனை கவிதை வரிகளில் எவ்வாறு உருவாகின்றன என்பது பற்றி குறிப்பிடுவது அவசியமாகும். ஒரு செய்யுளில் முதலடியின் முதல் சொல்லின் இரண்டா வது எழுத்தும் அடுத்த அடியின் முதல் சொல்லில் இரண்டாவது எழுத்தும் ஒரே எழுத்தாகவும் அல்லது அதன் இன எழுத்தாகவோ இருக்கும் ஒலி இயைபு எதுகை எனப்படும். அடுத்தது மோனை என்றால் என்ன என்பது பற்றிப் பார்க்கலாம். செய்யுளின் அடியில் (வரி) முதல் சீரில் உள்ள முதல் எழுத்தின் ஒலி அல்லது முதல் ஒலிக்கு இசைவான மற்றோர் ஒலி அடுத்த அடியின் தொடக்கத்தில் வரும் முறை மோனை எனப்படும். இதோ பாரதி பாடல் ஒன்று

**"சின்னஞ் சிறு கிளியே – கண்ணம்மா**
**செல்வக் களஞ்சியமே!**
**என்னைக் கலிதீர்த்தே – உலகில்**
**ஏற்றம் புரிய வந்தாய்!"**

இதில் சின், என்ன என்பன எதுகையாகும். சின்ன, செல்வ என்பதில் வரும் சி, செ மோனை களாகும். இவை கவிதைக்கு ஒலி நயத்தை உண்டு பண்ணி அழகைக் கொடுக்கின்றன.

மொழி என்பது மண்ணைப் போன்றது. அதனைக் காலந்தோறும் உழுது பண்படுத்தி பசளையிட்டு வளம்மாக்க வேண்டும். அப்பதான் பயிர் செழிப்பாக வளர்ந்து நல்ல அறுவடையைத் தரும். இதே போலத்தான் மொழியையும் காலந்தோறும் செப்பனிட்டு புதிய வீரியம்மிக்க சொற்களால் அழகுபடுத்த வேண்டும். இதனை தெய்வப் புலவர் திருவள்ளுவரின் மொழியில் பின்வருமாறு கூறலாம்.

**"சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்**
**அச்சொல்லை வெல்லும் சொல் இன்மையறிந்து"**

மகாகவி பாரதி சொல்வளம் பற்றி மிக அழகாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார் என்பது இங்கு கவனிக்கத்தக்கது.

**"சொல் புதிது பொருள் புதிது**
**சோதிமிக்க நவகவிதையில்"**

ஒருநாணயமானது நீண்டகாலமாக புழக்கத்தில் இருக்குமாயின் அது தேயந்து அல்லது பழுதடைந்து போவது இயல்பான ஒன்றாகும். இதேபோலத்தான் சொற்களின் வலிமையும் குன்றுவது உண்டு. இதனால் கவிஞன் வீரியமான சொற்களைத் தேடி தனது சொல் வளத்தைப் பெருக்கிக்கொண்டு அற்புதமான கவிதையை படைப்பதில் வெற்றி காண்கின்றான். சொல் ஆட்சியானது ஒரு கவிஞனின ஆளுமை விகசிப்பையும் அகஉலகையும் வெளிப்படுத்தும் அடையாளமாக இருக்கின்றது.

சொல்லாட்சித் திறத்தால் உயர்ந்த சில கவிதை வரிகளைக் காண்போம்.

**"நல்லதோர் வீணைசெய்தே – அதை**
**நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?**
**சொல்லடி சிவசக்தி – என்னைச்**
**சுடர்மிகு அறிவுடன் படைத்துவிட்டாய்"** – பாரதி.

**"செம்புலப் பெயல் நீர்போல்**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"**
- குறுந்தொகை-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**“கடற்கரைச் சோலையிலே**
**கானல்வரி பாடி**
**கபடி விளையாடும்**
**காளையரைக் கூடக் காணவில்லை”**
-வல்லைவெளி-

எனவே புதிய சொற்கள், வீரியம்மிக்க சொற்கள் நீர்த்துப்போகாத சொற்கள் கவிதையின் சொல்லாட்சிக்குச் சிறப்புச் செய்கின்றன.

நல்ல கவிதையெனில் அதற்கு உணர்ச்சியைக் கிளறும் ஆற்றல் இருக்க வேண்டும். ஆனால் மிகை உணர்ச்சி தவறான வெறும் சன்னதம் போல் ஆகிவிடும்.

உதாரணம் வருமாறு:

**“கொலை வாளினை எடடா – மிகு**
**கொடியோர் செயலை அறவே”**
-பாரதிதாசன்-

**“வானாகி மண்ணாகி வளியாகி, ஒளியாகி**
**ஊனாகி, உயிராகி, உண்மையுமாய்**
**இன்மையுமாய்**
**கோனாகி, குருவாகி அவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயை என்சொல்லி**
**வாழ்த்துவனே”**

இப்பதிகத்தின் ஒவ்வொரு சொல்லிலும் மிகை உணர்ச்சி காணப்படுகின்றது.

இதுவரை அதிகமாக மரபுசார்ந்த கவிதைகள் பற்றிக் கூறினோம். இனி புதுக்கவிதை பற்றி கவனிப்போம். உலகளாவிய ரீதியில் புதுக் கவிதையின் பிதாமகர் அமெரிக்க கவிஞர் வால்ட் விட்மன் அவர்களே. அவரது புல்லின் இதழ்கள் Leaf of grass என்னும் கவிதை நூல் புதுக் கவிஞர்களுக்கு கைவிளக்குப் போன்றது அவர் கூறினார். “கவிதையை பொருளில் காட்வேண்டுமெயன்றி சொல்லடுக்கில் இல்லை என்று. கவிதைக்கு பொருள் உயிர்போன்றது. அதுவே உள்ளடக்கமாக வந்து புதுக்கவிதையை அழகூட்டுகின்றது.

உலகத் தொன்மொழிகளில் ஒன்றான தமிழில் புதுக்கவிதையின் தந்தையாக நாம் மகாகவி பாரதி என்றே கூறவேண்டும். பாரதியின் “காட்சிகள்” என்ற வசன கவிதைகள் புதுக்கவிதைக்கு ஓர் ஆரம்பமாக அமைந் துள்ளன. அக்கவிதைகள் இயற்கைக் காட்சிகளை படிமங்களாகக் காட்டும் அளவுக்கு அற்புதமானது. இவருக்குப் பின் புதுக் கவிதை முயற்சியில் ஆர்வத்துடனும், அர்த்த புஷ்டியுடனும் ஈடுபட்டவர் என்ற பெருமை கவிஞர் ந.பிச்சைமூர்த்திக்கே உரியது. மரபுக் கவிதைகளை எழுதி வந்த அவர் 1934களில் நல்ல புதுக்கவிதைகளை எழுதத்தொடங்கினார். இதே வேளை கு.ப.ரா.வும் புதுக்கவிதைத் துறையில் இறங்கி அருமையான கவிதை களைப் படைத்தார்.

காலவோட்டத்தில் கவிதைத் துறையில் இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாம வளர்ச்சியாக நாம் புதுக்கவிதையைப் பார்க்க வேண்டும். புதுக்கவிதை என்ற பெயர் தமிழில் 1960களில் தான் வந்தது. “நியூ பொயற்றி” (New Poetry) என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டதையே தமிழில் புதுக்கவிதை என்ற பெயரால் கூறப்படுகின்றது. கவிஞர் வைரமுத்து

**“புதுக் கவிதை என்பது**
**சொற்கள் கொண்டாடும்**
**சுதந்திரதின விழா**
**புதுக்கவிதை என்னும் போர்வாள்**
**இலக்கண உறையிலிருந்து**
**கவனமாக கழற்றப்பட்டு இருக்கிறது.”** என்று

மிகத் தெளிவாக பாடியுள்ளார். எனவே புதுக்கவிதை என்பது யாப்பிலக்கணம் இல்லாத கவிதை என்ற நிலை ஏற்பட்டுள்ளது.

**“காரிகை கற்றுக் கவிபாடுவதிலும்**
**பேரிகை தட்டிப் பிழைப்பது நன்று”**

என்று இருந்தவர்கட்கு புதுக்கவிதை ஒரு வாய்ப்பாகி விட்டது. இன்று புற்றீசல் போன்று எல்லோரும் புதுக்கவிதை எழுதத் தொடங்கியுள்ளார்கள். இதனால் கவிதையின் பொருள் விளங்காமல் இருண்மையாக சிலர் எழுதுகிறார்கள். ஆயினும் நல்ல தரமான கவிதை களைப் பலரும் எழுதிவருவது புதுக்கவிதையின் வளர்ச்சியில் ஆரோக்கியத்தைக் காட்டுக்கின்றது என்பேன்.

வசனத்திற்கும் கவிதைக்கும் நிறைய வித்தியாசம் உண்டு. எனவே புதுக்கவிதையானது உரைநடையில் இருந்து விலகி கவிதைத் தளத்திற்கு வரும்போது சில உருவங்களை ஏற்கவேண்டியுள்ளது.

**“உணர்ச்சி கூடினால் தரையில் நடக்கும் வசனம் சிறகு பெற்றுக் கவிதையாகிவிடும்”**

என்று கவிஞர் ந.பிச்சைமூர்த்தி கூறுகின்றார். நாம் நாதஸ்வரத்தை ரசிக்கும் போது வார்த்தை களை நீக்கிவிட்டு, மெட்டின் ஓசையைத் தானே கேட்டு மகிழ்கின்றோம். எனவேதான் புதுக்கவிதைக்கும் ஒலி நயம் அவசியமாகும். அதை அளவோடு பாவிக்கவேண்டும். “பார்த்தால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசனம், நெஞ்சில் பாய்ந்தால் புதுக்கவிதை" என்ற மாதிரி அமைய வேண்டும். எனவே புதுக்கவிதைக்கும் இலக்கணம் உண்டு எனலாம். ஆனால் அவை இயல்பாக இருப்பது அவசியம். இலக்கண வரம்பையோ அல்லது யாதாயினும் விதிகளையோ போட்டு கவிதையின் உண்மைப் பொருளை மாற்ற முயற்சிக்கக் கூடாது. ஆகவே புதுக்கவிதையில் எதுகை, மோனை, தளை, சீர், அசை, சந்தம், ஒலிநயம் என்பன வருவது வரவேற்கக்கூடியதே. ஆனால் கட்டாயம் அல்ல.

புதுக்கவிதையின் சிறப்பிற்கும் அழகிற்கும் அதன் படைப்பு முறை உத்திகள் மிகவும் பிரதான மானவை. உவமை, படிமம், குறியீடு, தொன்மம், அங்கதம், அறிவியல், நாட்டுப் புறவியல், கதைப் போக்கு என்பன இவற்றுள் அடங்கும். இங்கே சில புதுக்கவிதைகளைப் பார்ப்போம்.

**காட்சிகள்**

**"இவ்வுலகம் இனிது**
**இதிலுள்ள வான் இனிது**
**காற்றும் இனிது**
**தீ இனிது, நீர் இனிது, நிலம் இனிது**
**ஞாயிறு நன்று, திங்களும் நன்று**
**வானத்து சுடரெல்லாம் மிக்க இனியன**
**மழை இனிது, மின்னல் இனிது, இடி இனிது**
**கடல் இனிது, காடு நன்று."** - பாரதி

**கிளிக்கூண்டு**

**"இருள் மடல்கள் குவிந்தன**
**வானத்து விண்மீன்கள் மின்னின**
**காவிரி நாணல்கள் காற்றில் மயங்கின**
**மேற்கே சுடலையின் ஓயாத மூச்சு**
**காலன் செய் கோமத்தின்**
**உடல் நெய்யாகும் காட்சி**
**கிழக்கே பெண்களின் மட்டற்ற பேச்சு**
**கட்டற்ற சிரிப்பு**
**காவிரி மணலில் குழந்தைகள் கும்மாளம்**
-ந.பிச்சைமூர்த்தி-

இக் கவிதையில் ஓசை நயமும், செவி நுகர் செஞ்சொல் ஓட்டமும் காணப்படுகின்றன. ந.பிச்சைமூர்த்தி தமிழ் புதுகவிதை வரலாற்றில் மிக முக்கியமான ஒருவர். 1934இல் மணிக் கொடியில் இவர் எழுதி புதுக்கவிதைக்கு வனப்பும் வளமும் கொடுத்தார். இதேவேளை கு.ப.ரா. வும் நல்ல அர்த்தபுஷ்டியான கவிதை களை எழுதி புதுக்கவிதைக்கு மெருகூட்டினார். இங்கே கு.ப.ராவின் கவிதையொன்று :

**ஏர் புதிதா?**

**"முதல் மழை விழுந்ததும்**
**மேல்மண் பதமாகி விட்டது**
**வெள்ளி முளைத்திடுது**
**விரைந்து போ நண்பா!**
**காளைகளை ஓட்டிக்**
**கடுகிச் செல் முன்பு**
**பொன்னேர் தொழுது**
**புலன் வழிபட்டு**
**மாட்டைப் பூட்டி**
**காட்டைக் கீறுவோம்"**

கு.ப.ராவின் கவிதைகள் ந.பிச்சைமூர்த்தியின் கவிதைகளில் இருந்து தொனியும், சொல்லும், பொருளும் வேறுபட்டவை என்பதை நாம் காணலாம். இனி மேத்தாவின் கவிதை ஒன்றைப் பார்ப்போம்.

**வைகறை**

**"வைகறைப் பொழுதுக்கு**
**வார்த்தைத் தவமிருக்கும்**
**வானம்பாடிகளே!**
**இந்தப் பூமி உருண்டையைப்**
**புரட்டி விடக்கூடிய**
**நெம்புபோல் கவிதையை**
**உங்களில் யார் பாடப்போகிறீர்கள்?**
**ஓ! என் தோழர்களே!** (வானம்பாடி)

கவிஞர் மேத்தாவின் கவிதையில் பேச் சோசைப் பண்பு மிக அற்புதமாக மிளிர்கின்றது. அதேவேளை படிமம், குறியீடு, உவமை போன்ற உத்திகளை மிகவும் சிறப்பாகப் பயன் படுத்தி கவிதையை அருமையாகப் படைத்துள்ள அழகைக் காண்கின்றோம்.

நிறைவாக கவிதையானது பல உறுப்புக் களால் ஆன உடல் போன்றது. அந்த உடலுக்கு உயிரும் மிகவும் அவசியம். அது அர்த்தம் செறிந்த சொற்களால் உயிரூட்டப்பட வேண்டும். அப்போது தான் அழகான கவிதை பிறக்கும்.

**உசாத்துணை நூல்கள்**


1. புதுக்கவிதையின் தோற்றமும், வளர்ச்சியும் - வல்லிக்கண்ணன்
2. எது புதுக்கவிதை - பேராசிரியர் சுபாசு
3. கவிதை நயம் - பேராசிரியர் க.கைலாசபதி, கவிஞர்.இ.முருகையன்
4. பாரதியார் பாடல்கள்
5. கம்பராமாயணம்
6. வளர்பிறை - கவிஞர்.மு.செல்லையா.
7. வல்லைவெளி - கவிஞர்.க.சின்னராஜன்
8. அவர்கள் வருகிறார்கள் - கவிஞர்.மு.மேத்தா
9. திருத்தி எழுதிய தீர்ப்புகள் - கவிஞர். வைரமுத்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எடுத்துக்கொண்டேன் என் பொம்மையை

ஹமாஸா, இஸ்ரேலா
அமெரிக்காவா, ஈரானா
ரஷ்யாவா, பிரிட்டனா...
யார் கொடுத்ததென்றும் தெரியாது
யார் போட்டதென்றும் புரியவில்லை...
ஆனால் தெரியும்
என் வீட்டு வாசலில் தான்
அது விழுந்தது
வீதியில் விளையாடிக் கொண்டிருந்த
என்பொம்மையை
வீசியெறிந்த
அம்மாவைப் பார்த்து
“உன்னைக் கொன்றுவிடுவேன் பார்“
என்று சொல்லிவிட்டு
வீட்டுக்குள் ஓடினேன்...
மறுகணம் பாரிய சத்தம்
வீதியெங்கும்
ரத்தமும் சதையுமாகக்
கிடந்தது
எங்கே... எங்கே...
எங்கே என் அம்மா..?
பொம்மையை வீட்டுக்குள் வீசிவிட்டு
நான் துள்ளிஓடிய
அழகை ரசித்துக் கொண்டு
அங்கே தானே நின்றாய் அம்மா?
நீ இறந்துவிட்டதாக
பிழைத்தவர்கள் சொன்னார்கள்
நான்தான்
உன்னைக் கொன்றோனா அம்மா?
நான்தானா அந்தப் பாதகச்
செயலைச் செய்தேன்?
நான் விளையாடப்
போயிருக்காவிட்டால்
இன்னும் ஓரிரு நாளேனும்
என்னோடு இருந்திருப்பாய்
அல்லவா?
நான் எப்போதும் உன்
பேச்சைக் கேட்டதில்லை
ஆனால் அப்போதெல்லாம் நீ இருந்தாய்...
இப்போது நான் என்ன
செய்ய வேண்டும்?
குண்டு வீசப் பழக வேண்டுமா?
ஏவுகணை ஏந்தப் பழக வேண்டுமா?
கல்லெறியக் கற்க வேண்டுமா?
நான் என்ன செய்ய வேண்டும்?
பழிக்குப் பழி
இரத்தத்திற்கு இரத்தம்...
அதுதானே அம்மா மனிதனுக்கு
அழகு?
எடுத்துக்கொண்டேன்
என் பொம்மையை -போர்ப்
பயிற்சி கொடுப்பதற்கு...
அமெரிக்காவின் பீரங்கியும்
வடகொரியாவின் ஏவுகணைகளும்
ரஷ்யாவின் கொத்துக் குண்டுகளும்
சீனாவின் போர் விமானங்களும்
பயன்படுத்தவும்
எனக்கு எதிரானவர்களைக்
கொல்லவும்
அந்த பொம்மைக்கு நான்
கற்றுக் கொடுப்பேன்
பழிக்குப் பழி
இரத்தத்திற்கு இரத்தம்...
அதுதானே அம்மா
உன்னைக் கொன்றவர்களுக்கும்
என்னைக் கொல்லப்போகிறவர்களுக்கும்
நாம் கொடுக்கக்கூடிய தண்டனை?
நாம் என்ன
அன்னை தெரெசாவா
அன்பு காட்டுவதற்கு?
வேட்டையாடிக் கூட்டத்தின்
வழிவந்த
மனித மிருகங்கள் தானே நாம்?
வேட்டையாடுவோம்
நானும் என் தோழர்களும்
எங்கள்
பொம்மைகளின் துணையோடு...

**- சிகரம் பாரதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் சித்திரிப்பு


**ஆய்வுச் சுருக்கம்**

சமூகத்தின் பல்வேறு கூறுகளை, நிகழ்வுகளை, மாபெரும் மனிதர்களைக் காட்சிப் படுத்திய தமிழ்த் திரை, சமூகத்தின் விளிம்பு நிலை மனிதர்களாகப் பார்க்கப்படுகின்ற திருநங்கையரை எவ்வாறு காட்சிப்படுத்தியுள்ளது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும். தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் மீண்டும் மீண்டும் ஒரே வகையாக சித்திரிக்கப்படுவது ஏன்? அதில் உட்பொதிந்துள்ள பொருள் என்ன? என்னும் கருதுகோள்களைக் கொண்டு இவ்வாய்வு அமைகிறது. விவரிப்பு ஆய்வு முறைமையில் ஊடக உள்ளடக்கப் பகுப்பாய்வைப் (Media content analysis) பின்பற்றி இவ்வாய்வு அமைகிறது. திரைப்படத் தணிக்கைத் துறையால் சான்றளிக்கப்பட்டு, திருநங்கையர் குறித்துச் சித்திரிக்கப்பட்டு 1973 முதல் 2019 வரை வெளியிடப்பட்ட திரைப்படங்கள் முதன்மை ஆதாரங்களாகவும், திருநங்கையர் பற்றி எழுதப்பட்டுள்ள எழுத்திலக்கியங்கள் துணை ஆதாரங்களாகவும் அமைகின்றன. வசனம், பாடல், நடனம், தொழில் பாத்திரப்படைப்பு ஆகியவற்றில் இடம்பெறும் திருநங்கையர் திரைக்காட்சிகள் வழியே எவ்வாறு சமூகத்தின் உண்மைத் தன்மை கட்டமைக்கப்பட்டு உருவாக்கப்படுகிறது என்பது, வளர்த்தெடுத்தல் கோட்பாடு (Cultivation Theory) வழியே விளக்கப்படுகிறது. தமிழ்ச் சினிமா என்ற கலை சார்ந்த ஊடகத்தில், திருநங்கையர் உடலியல், உளவியல், வாழ்வியில் சிக்கல்கள் அதே வலிகளோடு எதார்த்தமாக வெளிப்படுத்தபடாமல் ஒரே வகையாக எதிர்மறையாக (Stereo Type negative Portrayal) பெரிதும் சித்திரிக்கப்படுகிறது என்பது இவ்வாய்வின் முடிவாகும்.




**திறவுச் சொற்கள்:**

திருநங்கையர், சித்திரிப்பு, கேலிக்குரியவர், பாலியல் தொழில், கரகரப்பான குரல், குத்தாட்டம், கோத்தி (ஆண் உடையில் இருக்கும் திருநங்கை).


**முன்னுரை**

திருநங்கையர் மீதான சீண்டல்களும் கிண்டல்களும் வெகுகாலத்துக்கு முன்பே தமிழ் சினிமாவில் இடம் பிடித்துவிட்டன. எழுத்திலக்கியத்தில் பேசப்பட்டதுபோல் சினிமா என்கிற கலை சார்ந்த ஊடகத்தில், திருநங்கையர் வாழ்க்கை, எண்ணம், உணர்வுகள், கொண்டாட்டம், துக்கம், தன்னுரிமை, எதுவும் அவ்வளவாகப் பேசப்படவில்லை. 'பம்பாய்' (1995), 'துள்ளாத மனமும் துள்ளும்' (1999), 'தெனாவட்டு' (2008), 'ராவணன்' (2010), 'வானம்' (2011), 'காஞ்சனா' (2011), 'அரவான்' (2013), 'ஓநாயும் ஆட்டுக்குட்டியும்' (2012), 'உன் சமையலறையில்' (2014), 'அப்பா' (2016), 'நெருப்புடா' (2017), 'திமிரு புடிச்சவன்' (2017), பேரன்பு' '(2019), ஆகிய சில திரைப்படங்களில், திருநங்கையர் சித்திரிப்பு நேர்மறையாக இடம்பெற்றிருக்கக் காணமுடிகிறது. அந்தவகையில் தமிழ்த் திரைப்படங்களில் காணத்தகும், திருநங்கையர் குறித்தான எதிர்மறைச் சித்திரிப்புகளைக் கண்டு விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.


**கு.சின்னப்பன்**
கல்வியியல் மற்றும்
மேலாண்மையியல்
துறை,
தமிழ்ப்
பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் - 613 010.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநங்கையர்

ஆண் உடம்பில் பெண்மனதைக் கொண்டு மாறிய பாலின பெண்ணாக வாழ்பவர் (Transgender Women) திருநங்கையர். உடலளவில் ஆணாகவும், மனதளவில் பெண்ணாகவும் இருமை நிலையில் இருக்கும். இவர்கள் நாகரிகச் சமூகத்தில் காலம் காலமாக கண்டுணரப்படாமல் மதிக்கப்படாமல் சக மனிதர்களால் 'அலி', 'அரவானி', 'திருங்கை', 'மூன்றாம் பாலினம்', 'மாறிய பாலினத்தினர்', 'மாறிய பாலினப் பெண்', 'மாறிய பாலின ஆண்', 'பாலினச் சிறுபான்மையினர்', என்று பலவாறாக அழைக்கப்படுகின்றனர்.

குழந்தைப்பருவத்தில், தம்மைப் பெண்ணாக உணர்ந்து பெண்ணுணர்வை வெளிப்படுத்தும் போது, தமது குடும்பத்தினரின் வெறுப்புக்கும், வன்தாக்குதலுக்கும் உள்ளாகி, இவர்கள் வீட்டை விட்டு வெளியேறித் தமக்கென்று ஆதர வைத் தேடும் ஓர் அமைப்பை உருவாக்கி (ஜமாத்) 'மாறிய பாலினப் பெண்களாக' கூட்டுவாழ்க்கை வாழ்கிறபோது, இந்தச் சமூகத்தின் கேலிக்கு உள்ளாகின்றனர். இவர்கள் மன்னராட்சிக் காலத்தில் அரண்மனையின் அந்தப்புரக் காவலர்களாகவும் படைத் தளபதிகளாகவும் வாழ்ந்த வரலாற்றுக் கதைகளும் உண்டு. ஆனால், மக்களாட்சிக் காலத்தில் பாலியல் தொழில் செய்தும், கடைகளிலும் இரயிலிலும் பேருந்திலும் பிச்சை எடுத்தும் வாழும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். கடவுச்சீட்டு, ஓட்டுநர் உரிமம், வங்கிக் கணக்குத் தொடங்குதல், இரயில், விமானம் முன்பதிவு, கழிவறை, திரையரங்கம், மருத்துவமனை, பேருந்து இருக்கை ஆகியவற்றில் சரிநிகர் சமநிலை பெற இயலாமல் பாலினச் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளனர். பொதுவெளியில், ஒடுக்கப்பட்ட சமூகங்கள் குறித்தான விவாதங்கள் எழாமல் இல்லை. ஆனால், இவைகூடப் பெண்ணியம், தலித்தியம், சார்ந்தே நின்றுவிடுகின்றன. திருநங்கையர் மீதான ஒடுக்குமுறைகள் குறித்து யாரும் பேசுவதில்லை.

## எதிர்மறைச் சித்திரிப்பு

திருநங்கையர் மீதான சீண்டல்களும் கிண்டல்களும் வெகுகாலத்துக்கு முன்பே தமிழ் சினிமாவில் இடம் பிடித்து விட்டன. திருநங்கையர் என்றால் கேலிக்குரியவர், விகாரத் தோற்றமுடைவர், கரகரப்பான ஆண்குரலில் பேசுபவர், அடாவடித்தனம் செய்பவர், பாலியல் தொழில் செய்பவர், பிச்சைக் கேட்பவர், குத்தாட்டம் ஆடுபவர், திருடுபவர், என்று எதிர்மறையாகப் பொருள் தரும்படி சித்திரிப்பதை எதிர்மறைச் சித்திரிப்பு எனலாம்.

## கேலிக்குரியவர்

தனிமனிதன், குடும்பம், சமூகம் என்ற முப்பரிமாணச் செயல்பாட்டில் திருநங்கையர் ஏளனத்துக்கு உள்ளாகின்றனர். குருடரை குருடன் (பார்வையற்றவர்) என்றும், செவிடரை செவிடர் (காதுகேளாதவர்) என்றும் முடவரை முடவன் (நடக்க இயலாதவர்) என்றும் சொல்லாது அவர்களை மாற்றுத் திறனாளிகள் என்றே பதிவு செய்யும் தமிழ்த் திரைப்படங்கள் திருநங்கையரை மட்டும் இழிவான பெயர்களிலேயே பதிவு செய்து வந்துள்ளன. சான்றாக 'பாலாபிஷேகம்' (1977), 'தனிக்காட்டு ராஜா' (1982), 'அமராவதி' (1993), ஆகிய படங்களில் **'ஒம்போது'** எனவும், 'தில்' (2002) படத்தில் **'ரெண்டுங் கெட்டான்'** எனவும் 'திருடா திருடி' (2003) படத்தில் **'கீரைவடை'** எனவும் 'சித்திரம் பேசுதடி' (2006) படத்தில் **'உஸ்சு'** எனவும், 'சேது' (2009) படத்தில் **'அஜக்'** எனவும், 'வானம்' (2011) படத்தில் **'புஜ்ஜி'** எனவும், பதிவு செய்துள்ளன. திருநங்கையரே இடம் பெறாத திரைப்படங்களில் கூட, வசனங்களில் **'போடா பொட்டை'** எனவும் பதிவு செய்துள்ள தமிழ்த் திரைப்படங்களே, பொது வெளியில் இப்பெயர்களைக் கூறித் திருநங்கையரைக் கேலிசெய்வதற்கு ஒருவிதத்தில் காரணமாக இருக்கின்றன.

## வசனம்

திரைப்படத்தின் கதை நகர்தலுக்கு வசனத்தின் பங்கு மிக முக்கியமானது. ஆனால், கதையின் வளர்ச்சிக்கும், கதையின் நகர்தலுக்கும் தொடர்பின்றியே திருநங்கையினர் பேசும் வசனங்கள் திரைப்படத்தில் இடம் பெறுகின்றன. தலைப்புச் செய்தி வாசிப்பது 'கிரிஜாக்கா'... என்றும் **கதாநாயகன் இல்லன்னா நகைச்சுவை நடிகன் இந்த இரண்டுபேரில் யாரோ ஒருத்தர் வந்து, 'மாமா மாமா' என்று வசனம் பேசுவதும் தமிழ்த் திரைப்படங்களில் எதார்த்தமாக இருந்துவரக் காணமுடிகிறது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'கட்டபொம்மன்'** (1993), படத்தில் மில் வேலைக்கு ஆள் எடுக்கும் பணி நடந்து கொண்டிருக்கும்போது, ஒரு திருநங்கை தனக்கும் மில் வேலை வேண்டும் என கோரிக்கை வைப்பார். அதற்கு நடிகர் கவுண்டமணி **"நீங்க செஞ்சிட்டாலும்"** என அவரை இழிவுபடுத்தும் காட்சி, திருநங்கையர் எந்த வேலைக்கும் தகுதியற்றவர்கள் எனச் சொல்லாமல் சொல்லிப் போனது, அத்துடன் இக்காட்சியில் அத்திருநங்கையை பொருத்தமற்ற உடையுடனும் காமம் ததும்பும் குரலுடனும் காட்சிப்படுத்தியிருப்பர். **'கம்பீரம்'** (2004) படத்தில் திருநங்கையின் (கோத்தி) காட்சிவெளி சொற்ப விநாடிகளே ஆனாலும் **"அவனா... நீயி.."?** என்கிற ஒரு வார்த்தையை நடிகர் வடிவேலு பேசுவது பொதுவெளியில் எதிர்மறைப் பொருளையே தருகிறது. **'தில்'** (2001) படத்தில் பூங்காவில் அமர்ந்திருக்கும் ஒரு திருநங்கையிடம், ஒரு ஆண் பெண்ணின் மனதைப் புரிந்துகொள்வது எப்படி என்று கேள்வி கேட்க, திருநங்கை கரகரப்பான ஆண்குரலில் **'நானே என்னையே புரிஞ்சுக்க முடியாம ரெண்டுங் கெட்டானா கிடக்கேன்'** என்று பேசுவது, நகைப்புக்குரியதாகவே பார்க்கப்படுகிறது. அங்கு அவர்கள் முன்வைக்கும் உரிமைசார்ந்த பேச்சுகள் முக்கியத்துவமற்றுச் சிரிப்பால் மறைக்கப்படுகின்றன.

**'சித்திரம் பேசுதடி'** (2006) படத்தில் வாடகை உரிய நேரத்தில் தராமல் இழுத்தடிக்கும் குடியிருப்போரிடம் **"கேக்கறது உஸ்சுதானே என எளக்காரமா இருக்கா"** என்று வீட்டு உரிமையாளரான திருநங்கை கேட்பது தாழ்வு மனப்பான்மையின் அடிப்படையிலான முறையீடாகவே உள்ளது. **'சிவகாசி'** (2005) படத்தில் நாயகன், பெண்கள் அழகா லட்சணமா சேலை கட்டியிருந்தால் அவர்களைக் கையெடுத்து கும்பிடத்தோணும் என்று நாயகியிடம் கூறுகிறார். உடனே அவள் சில திருநங்கையரை அழைத்து வந்து இப்ப கையெடுத்து கும்பிடு என்று கூறுவாள். நாயகனோ சேலை அணிந்திருப்பவர்கள் எல்லாம் பெண்கள் அல்ல என்று அலட்சிய மாகப் பதிலளித்து விரட்டியடிப்பார். மற்றொரு இடத்தில் **"பாருங்களேன் எங்க அக்கா வாராங்க"** என்று திருநங்கையரை கேலியாகக் குறிப்பிடுவார். **'கணிதன்'** திரைப்படத்தில் திருட் டுச் சான்றிதழ் தயாரித்து தருவதாகத் திருநங் கையர் காட்சிப்படுத்தப்பட்டு **'என்னம்மா இப்படி பண்றீங்களேம்மா...'** என்று வசனம் பேசப்படுகிறது.

## நடனம்/பாடல்

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் கேளிக்கை நடனத்தில் குத்துப் பாடல்களில் மட்டுமே அதிகமாகச் சித்திரிக்கப்படுகின்றனர். பெரும்பாலும் முதல் வரிசையில் நடனம் ஆடுதலுக்கு திருநங்கையர்களுக்கு வாய்ப்பு அளிப்பதில்லை. மீசை மழிக்கப்பட்டும், மீசை மழிக்கப்படாமலும் சேலைகட்டி, ஆடும் ஆண்களோடு சேர்ந்து நடனம் ஆடுபவராகவும் நடனத்தின் இடையே கரகரப்பான ஆண்குரலில் தனித் தொகையறா பாடி ஆடுபவராகவும் மிகை ஒப்பனையுடன் சித்திரிக்கபட்டிருப்பர். பழைய திரைப்படங்களில் குழு நடனத்தில் முதல் மூன்று வரிசைகளில் பெண்களும் கடைசி வரிசையில் திருநங்கையர்களும் ஆடுவார்கள். உதாரணமாக இதனைச் **சந்திரலேகா, கொஞ்சும் சலங்கை, சகுந்தலா** ஆகிய படங்களில் காணலாம். ஹிந்தி படத்திலும் இந்த முறை பின்பற்றப் பட்டுள்ளது. குதிரைச் சவாரி செய்தல், மரம் ஏறுதல் போன்றவற்றில் டூப் நடிகராகத் திருநங்கையர் பயன்படுத்தப்பட்டுள்ளனர் (அருண்மொழி, 06.03.2016).

**'வீரத்திருமகள்'** படத்தில் இடம்பெறும் **"வெத்தளப் போட்ட பத்தினி பொண்ணு சுத்துது முன்னால"** என்ற பாடலில் திருநங்கையர் சித்திரிக்கப்பட்டுள்ளனர். **'ஒருதலை ராகம்' (1980) படத்தில் "பொழுதோட கோழி கூவுரவேல ராசாதி ராசன் வாராண்டி முன்னே"** என்று வரும் பாடல் மோசமான நடன அசைவுகளுடனும் பொருத்தமற்ற ஒப்பனையுடனும் திருநங்கையரை பொதுச் சமூகத்திற்கு அடையாளம் காட்டியது. இதன் பிறகு, தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையரை கேலிக்குரியப் பாணியில் சித்திரிக்கும் போக்கு தொடர்ந்து வருகிறது. **'தனிக்காட்டு ராஜா'** (1982), **'அம்மன் கோயில் கிழக்காலே'** (1996) ஆகிய படங்களில் நாயகன் தனது மனவேதனையைப் போக்கச் சாராயக்கடையில் குடித்துவிட்டு ஆடும்போது, அவனோடு சேர்ந்து திருநங்கையர் குத்தாட்டம் போடுவதாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. **'படிக்காதவன்'** (2009) படத்தில் நாயகன் தன் நண்பர்களுடன் தெருவில் குத்தாட்டம் ஆடும்போது திருநங்கையர் இடையில் புகுந்து குத்தாட்டம் ஆடுவதாகவும் **'காதலன்'** (1994) படத்தில் திருநங்கையர் சுகாதாரமற்ற குடிசைப் பகுதியில் நடனமாடுபவராகவும் காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'உள்ளம் கொள்ளை போகுதே'** (2001) படத்தில் இளைஞர்கள் தெருவில் மகிழ்ச்சியாக நடனமாடிக் கொண்டிருக்கும்போது திடீரென ஒரு திருநங்கையின் இடுப்பில் தனது விரலால் **கில கில கில கிக்கிலிக்கா...** என விளையாடத் திருநங்கையும் விரச உணர்வோடு இசைந்து கொடுப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும். **'திருடா திருடி'** (2003) படத்தில் இடம் பெற்றிருக்கும்,

**"ஒரே ஒரு கிராமத்தில ஒரே ஒரு கள்ளுக்கட**
**ஒரே ஒரு கடையிலதான்**
**ஒரே ஒரு கீரவட**
**ஒரே ஒரு கீர வடைக்கு,**
**ஒம்பது பேர் போட்டி"**

என்ற வண்டார்குழலிப் பாடலுக்கு நடன மாடும் திருநங்கையரை அதீத ஒப்பனை, பொருத்த மற்ற உடை, கைத்தட்டல் எல்லாவற்றுடன் **'ஒம்போது'** என்று நேரடியாகக் காட்சிப் படுத்தப்பட்டிருக்கக் காணமுடிகிறது.

**'பருத்திவீரன்'** (2007) படத்தில் இயக்குநர் அமீர், ஆபாச நடன அசைவுகள், ஆபாசமான வார்த்தைகள் பேசும் கிராமிய கலைஞர்களாகத் திருநங்கையர்களைக் காட்சிப்படுத்தியுள்ளார். இதில் இடம்பெற்றுள்ள **'ஊரோரம் புளியமரம்'** என்ற பாடல் பொதுவெளியில் திருநங்கையரைப் பார்த்துச் கிண்டல் செய்வதற்குப் பயன்படுத்தப் படுகிறது (லிவிங்ஸ்மைல் வித்யா, 15.09.2012). இவ்வாறே,

**"பத்து பத்து பத்துல நீ ஒன்ன நீக்கு**
**எட்டு எட்டு எட்டுல நீ ஒன்ன கூட்டு"**

என்ற பாடல் கேலிக்குரியதாக உள்ளது.

**'அம்மன்கோயில் கிழக்காலே'** படத்தில் **'மூணு முடிச்சாலே முட்டாளா ஆனேன்'** பாடல், 'துள்ளாத மனமும் துள்ளும்' படத்தில் வரும் **'இன்னிசை பாடிவரும் இளங்காற்றுக்கு உருவமில்லை'** என்ற பாடல், **ஜெயம்** படத்தில் இடம்பெற்ற **'திருவிழான்னு வந்தா இவ கோயில் வரமாட்டா..'** உள்ளிட்ட பாடல்களின் இடையிடையே அதீத ஒப்பனை, காம ஏக்கம் நிறைந்த பார்வை, கிளுகிளுப்பான சிணுங்கல்கள் எனத் திருநங்கையரைக் காட்சிப்படுத்தி இழிவுபடுத்தியிருக்கக் காணமுடிகின்றது.

**'அவன் இவன்'** (2011) படத்தில் திருநங்கை வேடமேற்றுள்ள நடிகர் விஷால் நடனம் ஆடுகிறபோது. 'பட்டாபட்டி டிரவுசர்' தெரியுமளவுக்குப் பாவாடையை மேலே தூக்கி ஆடுவதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. திரு நங்கையர் நடனமாடுகிறபோது துணியைத் தூக்கி ஆடுவது நடைமுறையில் கிடையாது. திரைப் படத்தில் இவ்வாறு சித்திரிப்பது அவர்களைப் பற்றி ஒரு தவறான புரிதலை ஏற்படுத்தும் பாங்கு கொண்டதாகும். திரு நங்கையர் நடனம் ஆடுகிறபோது நக்கல் அடிப்பது, கரகரப்பான ஆண்குரலில் பேசுவது, உடை ஒப்பனையை வேறுபடுத்தி மிகையாகக் காட்டுவது, ஆட்டத்தின் இடையில் தனித் தொகையறா பாடவைப்பது எனச் சித்திரிப்புகள் தொடர்கின்றன.

## தொழில்

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் என்றால், பாலியல் தொழில் மட்டுமே செய்வதற் குரியவர்கள் என்பதாகவே சித்திரிக்கப் படுகின்றனர். **'உள்ளம் கொள்ளைப் போகுதே'** (2011) படத்தில் பேருந்தில் நாயகன் அருகே அமர்ந்து, ஒரு திருநங்கை பயணம் செய்கிறாள். அப்போது அவர் நாயகனின் தொடையில் கைவைத்துத் தேய்த்து காமத்தோடு பார்ப்ப தாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் பொது இடங்களில் கூடத் திருநங்கையர் இப்படித்தான் நடந்து கொள்வார்கள் என்பதாகச் சித்திரிக்கக் காண முடிகிறது. **'கம்பீரம்'** (2004) படத்தில் கஞ்சாவிற்கும் பெண்ணால் நிர்வாணப் படுத்தப்பட்ட தலைமைக் காவலரைப் படம் பிடிக்க ஊடகத் துறையினர் வருகிறபோது, அதில் ஒரு கோதி (திருநங்கை) தனித்து நின்று தலைமைக் காவலரை விரசத்தோடு பார்ப்பதாகவும் நடிகர் வடிவேலு அவரைப் பார்த்து, மிரட்சியோடு **'அவனா நீயி....'** என்று பேசுவதாகவும் காட்சி இடம் பெற்றுள்ளது.

**'சித்திரம் பேசுதடி'** (2006) படத்தில், பாலியல் தொழில் செய்யும் ஒரு திருநங்கை தன்னுடைய வாடிக்கையாளர்களிடம் 'காசு கொடு நான் கூவாகம் போகணும்' எனக் கேட்பதாக ஒரு காட்சி உள்ளது. **'அப்பு'** (2000) படத்தில் நடிகர் பிரகாஷ்ராஜை மகாராணி என்ற பெயரில் திருநங்கை என்று சொல்லி மிகமிக அபத்த மான ஒப்பனை, செய்கைகளுடன் காட்சிப் படுத்தியுள்ளதுடன் பாலியல் தொழிலில் பெண்களை ஈடுபடுத்துபவராகவும் அதற்கான விடுதி ஒன்றை நடத்துபவராகவும் காட்சிப் படுத்தப்பட்டிருக்க காணமுடிகின்றது. இது திருநங்கையரின் உடல்மொழி, எண்ணங்கள்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏக்கங்கள் ஆகியவற்றை உணராமல் வியாபார நோக்கிலான காட்சிப்படுத்தலாகும். இத்திரைப் படத்திற்கு முதல் முறையாகத் திருநங்கையர் சமூகத்தில் இருந்து எதிர்ப்புக் குரல் கிளம்பியது குறிப்பிடத்தக்கதாகும்.

**'சில்லுனு ஒரு காதல்' (2006)** படத்தில் **"எல்லோரையும் அட்டன்ட் பண்ணதுக்குப் பணம் கொடு"** என்று கேட்டு அடாவடித்தனம் செய்வோராக திருநங்கையர் சித்திரிக்கப்பட்டிருப்பர். **சிவகாசி, திருப்பாச்சி, நினைத்தாலே இனிக்கும், பானா காத்தாடி, ஆரோகணம்** ஆகியப் படங்களில் திருநங்கையருக்குப் பாலியல் தொழில்தான் பிரதான தொழில்போலக் காட்டப்படுவதுடன், அதுசார்ந்த அடாவடியான சித்திரிப்புகளும் வடிவமைக்கப்பட்டுள்ளன. **'அனேகன்'** படத்தில் பெரிய கணினித் தொழில் நிறுவனத்தின் மேலாளர், பணியாளர்களுக்குப் பணிகளைப் பகிர்ந்து அளித்துப் பேசிக்கொண்டிருப்பார். அப்போது ஒருவன் ஒரு கோதியைக் காண்பித்து (திருநங்கை), "எனக்கு நைட்டு டூட்டிப் போடுங்க ஆனா இவன மட்டும் எங்கூடப் போட்டுவிடாதீங்க" என்று கூறியதும் அங்கிருந்த அனைவரும் கிண்டலாகச் சிரிப்பர். திருநங்கையர் பாலியல் சிந்தனைத் தன்மையுடன்தான் எவ்விடத்திலும் நடந்துகொள்வர் என்பதை, இந்தச் சித்திரிப்பு வெளிப்படுத்துகிறது. **'ஐ'** *(2015)* திரைப்படத்திற்கு எதிராக, மதுரை உயர்நீதி மன்றத்தில் திருநங்கையரைத் தவறாகச் சித்திரிக்கும் காட்சிகள் உள்ளதாகப் படத் தயாரிப்பாளர், நடிகர், இயக்குநர் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. (தினமணி, *20.01.2015*). **பருத்திவீரன்** *(2006)* படத்திற்கும் எதிர்ப்புக்குரல் எழும்பியது.

## பாத்திரப்படைப்பு

நடிகர் சுருளிராஜன் சில படங்களில், திரு நங்கையராக நடித்திருப்பார். கலர் கலரான லுங்கியில் வளைந்து நெளிந்து அவர் ஆண் களைக் கண்டால் சிணுங்குவது, தேவை யில்லாமல் உடலை ஆட்டி ஆட்டி நடப்பது என, பொய்யான உடல்மொழியை வெளிப்படுத்தி யிருப்பார். இயக்குநர் துரை இயக்கத்தில் **பெண்ணுக்கு யார் காவல்** *(1980)*, படத்தில் நடிகர் சுருளிராஜன் குழுவினர்

**"சொல்ல வெக்கமா**
**இருக்கு சொக்கமா**
**நைசா நைசா**
**என்னை கிள்ளிட்டான்"...**

என்ற பாடல் வரிகளுக்கான நடன அசைவுகள், உடைகள், அபிநயங்கள் எல்லாம் திருநங்கைன்னா இப்படித்தான் இருப்பாங்க, அவர்களின் உடல் மொழியே இப்படித்தான் இருக்கும் என்பதாகக் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். அத்துடன் மிக கவர்ச்சியான உடைகள், விரகதாபம் கொண்ட அசைவுகள் என திருநங்கையர் எல்லாரும் இதற்காகவே படைக்கப்பட்டவர்கள் என்ற தோற்ற மாயை உருவாக்கிவிட்டிருந்தது (ப்ரியாபாபு, *2017*).

**'ஈரமான ரோஜாவே'** *(1991)* படத்தில் நகைச்சுவை என்ற பெயரில் திரையரங்கிற்குப் படம் பார்க்க வரும் ஆண்களுக்கு நடுவில் திருநங்கை களை அமரவைத்து அந்த திருநங்கையர் பக்கத்தில் அமர்ந்துள்ள ஆண்களைத் தங்கள் காமவேட்கைக்கு கட்டாயப்படுத்துவதாகக் காட்சி அமைக்கப்பட்டிருக்கும். கதாநாயகன் தன் நண்பர்களுடன் படம் பார்த்துக்கொண்டிருப்பார். அவர் பெண்கள் மத்தியில்தான் அமர்ந்தி ருப்பதாக நினைத்து மகிழ்ந்திருந்த வேளையில் தன் அருகே ஒரு திருநங்கை கரகரப்பான ஆண்குரலில் பேசுவதைப் பார்த்து அதிர்ந்து போக, நாயகியும் அவளுடைய தோழிகளும் நக்கலாகச் சிரிப்பதாகச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. **'உனக்காக எல்லாம் உனக்காக'** *(1999)* படத்தில் அலிபாபா என்னும் ஒரு திருநங்கை ஒரு திருமண வீட்டில் புகைப்படக் கலைஞராகப் பணியாற்றிக் கொண்டிருப்பார். திடீரென எல்லோரும் சேர்ந்து அவரை அடிப்பதாக வரும் காட்சியானது எந்தத் தொழிலிலும் திருநங்கையரால் கவனம் செலுத்த முடியாது என்னும் பொருளில் அமைக்கப்பட்டக் காட்சியாகும்.

**'தில்'** *(2001)* படத்தில் நடிகர் விவேக் பால்மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டு வரும் திருநங்கையராகச் சித்திரிக்கப்பட்டிருப்பார். சிணுங்கல், முக்கல், முனகல் எனக் காமத்தினை மிகையாக வெளிப்படுத்துகின்ற அவரின் உடல் மொழியைப் பார்த்து அவருக்குப் பால்மாற்று அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவரே அவரை ஆசைநாயகியாக வைத்துக்கொள்ள விழைவதாகக் காட்சி அமைக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'வேட்டையாடு விளையாடு'** (2006) படத்தில் காவல் நிலையத்தில் ஒரு கைதியிடம் உண்மையை வரவழைப்பதற்குத் திருநங்கையரை அழைத்து அருவருப்பாகத் தொடச் செய்வதின் மூலம் திருநங்கையர் என்றால் அருவருப்பானவர்கள் என்கிற பொருளில் சித்திரிக்கப்பட்டுள்ளது. **'அவன் இவன்'** (2011) படத்தில் பெண்காவலர் வீட்டில், திருநங்கையர் வேடமணிந்து நடிகர் விஷால் திருடுபவராகச் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காட்சி திருநங்கையர் என்றால் திருடக்கூடியவர்கள் என்பதான எதிர்மறை பொருளை வெளிப்படுத்துகிறது.

தமிழ்த் திரைப்படத்தில் **'நர்த்தகி'** (2011) படம்தான் திருநங்கையர் மட்டுமே இடம்பெற்ற முழுநீளத் திரைப்படமாகும். இப்படத்திற்கு 'A' சான்றிதழ் அளித்திருப்பது பொதுவெளியில் வேறொரு பொருளைத் தருகிறது. **'காஞ்சனா'** (2011) படத்தில் ஆண்மேல் பேய் இறங்குகிறது. ஆனாலும், அதுவும் தங்களைப் பெண்ணாகக் கருதும் திருநங்கை பேய்தான். தமிழ்த் திரைப்படத்தில் இதுவரை பேய் பாத்திரத்தில் மட்டும்தான் திருநங்கை மையப் பாத்திரமாக இடம்பெற்று இருக்கிறார் என்கிறார் (சிவகாமி, 2015). பெரும்பாலும் சூழல் பாத்திரமாகத்தான் திருநங்கையர் பாத்திரப் படைப்பு இடம்பெற்று வருகிறது. வலுவான பாத்திரப்படைப்பு இல்லை. கடைக்கோடி மனிதர்களாகத்தான் திருநங்கையர் காட்டப்படுகின்றனர். **'உள்ளம் உனக்காக'** (1982) படம், நடிகர் கார்த்திக் நடித்தது. அதில் மும்பையைச் சேர்ந்த சாயா என்கிற திருநங்கை கதாநாயகியாக நடித்திருக்கிறார். இப்படம் வெளிவந்தால் பெண் கதாநாயகிகளுக்கான வாய்ப்பினைப் பறித்துவிடும் எனக் கருதி நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து இப்படம் வெளிவராமலேயே தடுக்கப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கிறார் திருநங்கை பி.மோகனாம்பாள் (16.03.2012).

திரைப்படங்களில் ஆட்சேபகரமான காட்சி இடம் பெற்றால் தணிக்கை செய்து 'பீப்' ஒலியுடன் வெளிவருகிறது. இந்தத் திரைப் படத்தில் விலங்கினங்கள் எதுவும் துன்புறுத்தப் படவில்லை என்கிற அறிவிப்பு வெளியிடப் படுகிறது. ஆனால், பொதுவாகத் திரையிடலின் போது திருநங்கையர் பற்றிய சித்திரிப்பு மட்டும் அப்படியே வெளியிடப்படுகிறது. 1973 - 2019 காலகட்டத்தில் வெளிவந்த திரைப்படங்களில் 99 விழுக்காடு படங்கள் திருநங்கையரைக் கேலிக்குரியவராக எதிர்மறையாகவே புனைந்திருக்கின்றன.

**'முரட்டுக்காளை–2'** என்ற படத்தில் திருநங்கையர் துணியைத் தூக்கி காண்பிப்பதாகச் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பொதுவாக, திருநங்கையர் துணியைத் தூக்கிக்காட்டுதல், ஜாக்கெட்டைக் கழட்டிப்போடுதல், சேலையை உருவிப்போடுதல் என்பது போன்ற செயல்களைச் செய்வதில்லை. அந்த உடைக்கு ஒரு மரியாதை தருவார்கள். ஒரு முறை மீசையை மழித்த திருநங்கை மீண்டும் மீசை வைப்பது இல்லை. இது எதார்த்தம். திரைப் படங்களில் பெண் வேடமிட்ட முதன்மைப் பாத்திரங்களும் நடனக் கலைஞர்களும் மீசையோடு நடிப்பதாகவும் நடமாடுவதாகவும் அமைந்திருக்கும். இந்தப் பாத்திரம் எந்தப் பாலினத்தை அடையாளப்படுத்துகிறது என்று குழப்பம் உண்டாக்கிப் பார்வையாளர்களது நகைச்சுவைக்குக் காரணமாக்கப்படுகின்றனர். கேளிக்கை, பகடி, கேலிவதை இவர்கள் மனிதர்களாக எண்ணத் தகுதியற்றவர்கள் என்கிற மட்டமான இரசனையில் இழிவுபடுத்தி இன்புறுதல் என்னும் நோக்கில் திருநங்கை பாத்திரப்படைப்பு இடம்பெறுகிறது.

அழகான திருநங்கையரை நடிக்க வைத்து விட்டுப் பின்னணி குரலுக்கு ஓர் ஆணைப் பேச வைக்கும் போக்கு தமிழ்த் திரைப் படங்களில் காணப்படுகிறது. சான்றாக **'வந்தாமல'** திரைப்படத்தில் போன வாரந் தாண்டா பொம்பளையா மாறிட்டு வந்தேன் (பின்னணிக் குரல் - Male dubbing voice) என்பதைக் குறிப்பிடலாம். மலையாளப் படத்திலும் வங்காளப்படத்திலும் திருநங்கையரைக் கேலிக் குரியவராகச் சித்திரிக்கும் போக்கு இல்லை. "திருநங்கையர் என்றால் டோப்பா வச்சுக்கிறது, புடவைகட்டிக்கிறது, மீசை வச்சுக்கிறது இந்த மாதிரித்தான் காட்டுறாங்க, அதுலகூட, திருநங்கையரின் அடையாளத்தோட காட்டுறது கிடையாது" என்கிறார், லிவிங் ஸ்மைல் வித்யா (அருணாசலம், 2011).

"ஒரு குழந்தைக்குத் திருநங்கையர்ன்னா என்னான்னு தெரியாது. சினிமாவுல பாக்குற திருநங்கையரைத்தான் தெரியும். தமிழ்த் திரைப்படத்துறையைப் பற்றித் தமிழ்நாடு அரவானிகள் சங்கத் தலைவி ஆஷாபாரதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்குகளுக்குப் பிரச்சனை என்றால் இங்கு குரல்கொடுக்க ஆட்கள் இருக்கிறார்கள் ஆனால், சகமனிதர்களான திருநங்கைக்குப் பிரச்சனை என்றால் அதைத் தட்டிக்கேட்க ஆளில்லை" என்று ஆதங்கப்படுகிறார், (தினகரன் நாளிதழ், 20.03.2007).

திருநங்கையர் என்பவர்கள் குறைகளும் நிறைகளும் உள்ள மனிதர்கள்தான் என்று காட்டப்படாமல் அவர்கள் இதற்கு மட்டுமே உரியவர்கள் என்று அர்த்தப்படுத்திக்கொள்ளும் விதமாகத் தமிழ்த் திரைப்படங்களில் சித்திரிப்பு இருக்கிறது. ஒரு மூன்றாம் உலகக் கருப்பு நிறப் பெண்ணுக்கும், இந்தியாவில் தலித் பெண்ணுக்கும் பொதுச் சமூகத்தில் நிலவும் எல்லா அவமதிப்புகளும் ஒடுக்குமுறைகளும் திரைப்படத்தில் திருநங்கையருக்கும் உண்டு என இந்தச் சித்திரிப்புகள் உணர்த்துகின்றன. இவை தவிர்க்கப்பட வேண்டுமெனில் திருநங்கை யரை அரசியல்படுத்த வேண்டும்.

திருநங்கை பாத்திரத்தில் திருநங்கையை நடிக்கவைப்பது என்பது மிகக் குறைவு. மாறாக, கரடுமுரடான ஆண்களோ, கதாநாயகர்களோ நடிக்க வைக்கப்படுகின்றனர். இதனால் கதா பாத்திரத்தின் உண்மைத்தன்மை வெளிப் படாமல், நாயகர்களின் நடிப்புத்திறமை மட்டுமே பேசப்படுகிறது. கதாநாயகன் திருநங்கையர் வேடம் ஏற்பது, திறமையை வெளிப்படுத்த அல்லது பார்வையாளர்களைச் சிரிக்க வைக்க என்பதான போக்கு உள்ளது. சினிமா என்பது, பெரும்பாலும் பொழுதுபோக்குக்காக மட்டுமே பார்க்கப்படுவதால் திருநங்கையரை மனித உணர்வுகளோடு காட்டாமல் கேலிக் குரியவர்களாகவே சித்திரிக்கின்றனர். தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையரின் வாழ்வியல் சார்ந்த கருத்து, பின்னுக்குத் தள்ளப்படுவதுடன் திருநங்கையரின் பன்முக ஆளுமைத் திறன்களை வெளிப்படுத்தாமல் தாழ்வு மனப்பான்மை உடையவர்களாக, கேலிக்குரியவராக, பாலியல் தொழிலாளியாக, குத்தாட்டம் ஆடுபவராக திரைப்படங்களில் தொடர்ந்து சித்திரிக்கப் படுகின்றனர்.

## முடிவுரை

திருநங்கையரின் அறிவு, ஆற்றல், வீரம், அறச்சினம் ஆகியன தமிழ்த் திரைப் படங்களில் வெளிப்படுத்தப்படவில்லை. மனித உணர்வுகளோடு காட்டப்படுவதில்லை. திருநங்கையர் குழந்தைப் பருவத்தில் சந்திக்கும் மனச் சிக்கல்கள் தொடங்கி, இவர்களின் உடலியல், உளவியல், வாழ்வியல் சிக்கல்களை அதே வலிகளோடு எதார்த்தமாக தமிழ்ப் திரைப்படங்கள் இதுவரை வெளிப் படுத்தப்படவில்லை. எனவே கலை சார்ந்த படைப்பாளிகள் திருநங்கையர் சித்திரிப்புக்கு முன் களஆய்வு செய்வதும் சம்பவங்களைக் கவனிப்பதும், படிப்பதும் மிக முக்கியம். அப்போதுதான் திருநங்கையர் குறித்த உண்மைத் தன்மையையும் பார்வையாளனுக்கு எதார்த்தமான புரிதலையம் ஏற்படுத்தும் திரைப்படங்களை வெளிக்கொணர முடியும்.

## உசாத்துணை


அருணாசலம், மு., (2011) தமிழ் இலக்கண இலக்கியங்களில் அரவானிகள், அருண் வெளியீடு, திண்டுக்கல்.

அருண்மொழி, வயது: 58, நேர்காணல்: 15.09.2012, திரைப்படம், ஆவணப்படம் மற்றும் குறும்பட இயக்குநர், சென்னை.

ஆஷாபாரதி (திருநங்கை), நேர்காணல்: 20.03.2007, தினகரன் நாளிதழ், திருச்சி பதிப்பு, ப.17.

'ஐ' திரைப்படத்திற்கு எதிராக உயர்நீதி மன்றத்தில் திருநங்கை வழக்கு, தினமணி, திருச்சி பதிப்பு, 20.01.2015, ப.12.

சிவகாமி, ப., காஞ்சனா திரைப்பட விமர்சனம், (கட்), படச்சுருள் இதழ், அடையாறு, சென்னை, நவம்பர் 2015, ப.9.

ப்ரியா பாபு (திருநங்கை), திரைப்படங்களில் திருநங்கையர் சித்திரிப்பு, (கட்), மக்கள் வீதி இதழ், மாற்று ஊடக மையம், சென்னை, ஏப்ரல் 2017, ப.18.

மோகனாம்பாள் நாயக், பி., (திருநங்கை), வயது: 60, நேர்காணல்: 06.02.2016, இயக்குநர், அனைத்திந்திய அரவானிகள் உரிமை மற்றும் மறுவாழ்வு மையம், திருவெறும்பூர், திருச்சி.


லிவிங் ஸ்மைல் வித்யா (திருநங்கை), வயது: 30, நேர்காணல்: 15.09.2012, புனித செபாஸ்டின் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, பல்லாவரம், சென்னை.

ராசநாயகம், ச., வயது: 60, நேர்காணல்: 05.03.2011, மக்கள் கருத்துக்கணிப்பு மையம், லயோலா கல்லூரி, சென்னை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கலாபூஷணம் மானா மக்கீனின் "ஒரு முண்டாசு கவிஞரின் முஸ்லிம் நேசம்" நூல் பற்றிய சிறு கண்ணோட்டம்



வெலிகம
ரிம்ஸா முஹம்மத்

எழுத்துத் துறையில் பல தசாப்தங்களாக இலக்கியப் பணி புரிந்து வரும் மானா மக்கீன் அவர்கள் இலக்கிய உலகில் தவிர்க்க முடியாத ஒருவர். இத்துறையில் இவர் 40க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டு இலக்கியத் துறைக்கு பெரும் பணியாற்றியுள்ளார்.

மகாகவி பாரதியார் மீது அதிக ஈடுபாடுடைய மானா மக்கீன் அவர்கள் "ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்" என்ற பெயரில் மகாகவி பாரதியாரின் முஸ்லிம் நேசம் பற்றிய பல சுவாரசியமான தகவல்களைத் தொகுத்து வழங்கியுள்ளார். 132 பக்கங்களை உள்ளடக்கியதாக மணி மேகலை பிரசுரம் வெளியிட்டுள்ள இந்த நூலில் உள்ள அருமையான பல தகவல்களில் சிலவற்றை வாசகர்களுக்காக இங்கு முன் வைக்கிறேன்.

மானா மக்கீன் அவர்கள் தனது இந்த நூலுக் கான உள்ளடக்கங்களை - ஆரம்பிக்கிறேன், தொடர்கிறேன், தொட்டுத் தருகிறேன், ஆய்ந்து பார்க்கிறேன், இந்தியாவைத் தொடுகிறேன், இவர் பார்வையில் இஸ் லாம், பாடல்களில் இஸ்லாமியத் தாக் கம், விஜயாவைக் கண்டு பிடித்த வெங்கடா சலபதி, தமிழ் இதழியலில் புதுசு - புரட்சி, நிறுத்துகிறேன், நெருடல்களை நேர் செய்து, விடைபெறும் வேளை, உசாத்துணை நூல்கள் ஆகிய 12 தலைப்புகளில் மிகவும் அழகாக முன்வைக்கின்றார்.

முண்டாசுக் கவிஞர், இளசை சுப்பிரமணியன் என்று சொன்னால் புரியாத வர்களுக்குக்கூட மகாகவி பாரதியார் என்றால் சட்டென்று புரிந்து விடும் மகாகவி பாரதியார் அவர்களை பலரும் பல்வேறு வகையாக விமர்சித்தாலும் கூட அவருடைய மனிதப் பண்பாட்டுடன் கூடிய எழுத்துக்களை யாரும் மறுதலிக்க முடியாது என்று முனைவர் பா. இறையரசன் (தஞ்சாவூர்) தமது "இதழாளர் பாரதி" (1995 வெளியீடு) என்ற நூலில் 197 - 198 ஆகிய பக்கங்களில் குறிப்பிடுகின்றார்.

அத்துடன் ஓய்வுறக்கத்திலிருக்கும் பன்னூ லாசிரியர் எம்.ஆர்.எம். அப்துல் ரஹீம் (தொண்டி) மற்றும் பேராசிரியர், முனைவர் மு. சாயபு மரக்காயர் (காரைக்கால்) போன்ற விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் மட்டுமே இந்த முண்டாசுக் கவிஞருக்கு முட்டுக் கொடுத்துள்ளார்கள் என்ற தகவலையும் முன்வைக்கின்றார் நூலாசிரியர் மானா மக்கீன் அவர்கள்.

1983ஆம் ஆண்டுகளில் "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற பெயரில் ஒரு சிறு நூல் வெளிவந்ததாக அறிய முடிகின்றது. இந்த நூலுக்கு மர்ஹூம் அப்துர் ரஹீம் அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளார். நூலாசிரியர் மு. சாயபு மரக்காயர் பொதுவாக இஸ்லாமிய தத்துவங்கள் மீதும், திருநபியவர்கள் மீதும் பாரதியார் பெருமதிப்புக் கொண்டிருந்தார் என்ற தகவல்களை பல சான்றுகளுடன் அந்த நூலில் முன்வைத்துள்ளார்.

அத்துடன் "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற தலைப்பில் ஆய்வுக் கட்டுரை எழுதும் அளவுக்கு பாரதியார் இஸ்லாத்தைப் பற்றி எழுதி இருக்கின்றாரா? என்று தனது நண்பர்கள் மிகுந்த வியப்போடு கேட்டதாகக் குறிப்பிட்டு, கதை, கட்டுரை, கவிதை போன்ற எல்லாத் துறைகளிலும் பாரதியார் இஸ்லாத்தைப் பற்றி பேசியிருப்பதாக தான் சுட்டிக் காட்டியதாகக் கூறுகின்றார்.

பாரதியின் இஸ்லாமிய படைப்புகளைப் படித்த போதே உண்மையில் அவர் மீது எனக்கு மிகுந்த மதிப்புக் கூடியது என்று குறிப்பிட்டு, சாதி மதங்களுக்கு அப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதியின் மனித நேயமே இந்த "பாரதி கண்ட இஸ்லாம்" என்ற நூலை எழுதுமாறு தன்னைத் தூண்டியதாக மு.சாயபு மரக்காயர் அவர்கள் தனது நூலின் என்னுரையில் குறிப்பிடுகின்றார்.

மகாகவி பாரதியார் இந்து சமயத்தில் அழுத்தமான பிடிப்பும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர். ஆயினும் பிற சமய தெய்வங்களை வெறுத்தவர் அல்லர். ஏக இறைவனாகிய அல்லாஹ்வையும் இயேசு கிறிஸ்துவையும் போற்றிப் புகழ்ந்துள்ளார். பாரதியாரின் சமயப் பொதுமைக்கும், சமரச நோக்கிற்கும் அவருடைய பல பாடல்கள் இதற்குச் சான்றாக அமைந்துள்ளன. இவ்வாறான பின்னணியுடைய ஒரு மகாகவி பாரதியாரைத் தோன்றாத் துணையாக வைத்துக் கொண்டு அவர் மறைந்து கால் நூற்றாண்டைக் கடந்த நிலையிலும் முண்டாசுக் கவிஞருக்கு நானும் ஒரு முண்டாசு கட்ட விழைகின்றேன் என்று மானா மக்கீன் அவர்கள் குறிப்பிடுவது போற்றத்தக்கது. அந்தவகையிலேயே முஸ்லிம் அபிமானிகளுக்குத் தெரியாத மகாகவியின் முஸ்லிம் நேசம் பற்றிய பல தகவல்களைத் திரட்டி தனது பதிவை முன் வைக்கின்றார் நூலாசிரியர் மானா மக்கீன் அவர்கள். முண்டாசுக் கவிஞரின் முழு வாழ்க்கையையும் இங்கு நோக்காமல் தனது இதழியல் வாழ்க்கை மற்றும் மேடைகளில் முஸ்லிம் நேசத்தை எவ்வாறு வெளிப்படுத்தினார் என்பதே இங்கு எடுத்து நோக்கப்பட்டுள்ளது.

தனது இதழியல் வாழ்க்கையில் பின்வரும் இதழ்களின் மூலம் பாரதியார் அவர்கள் தனது இதழியல் ஆளுமையைப் பதிவு செய்துள்ளார்.

சுதேசமித்திரன் (சென்னை) - 1904, ஆசிரியர்
சக்கரவர்த்தினி (சென்னை) - 1905, ஆசிரியர்
இந்தியா (சென்னை) - 1906, ஆசிரியர்
பாலபாரதா (சென்னை) - 1906, ஆசிரியர்
இந்தியா (புதுவை) - 1908, ஆசிரியர்
விஜயா (புதுவை) - 1909, ஆசிரியர்
கர்மயோகி (புதுவை) - 1910, ஆசிரியர்
தர்மம் (புதுவை) - 1910, ஆசிரியர்
சூரியோதயம் (புதுவை) - 1910, ஆசிரியர்
பாலபாரதா (புதுவை) - 1910, ஆசிரியர்
சுதேசமித்திரன் (சென்னை) - 1916,
துணை ஆசிரியர்

சுதேசமித்திரனில் பாரதியார் செய்துள்ள பங்களிப்பை முதன்மையானதாகக் குறிப்பிடுகின்றார். அத்துடன் 1904இல் ஆரம்பித்த பாரதியாரின் இதழியல் பணி 1921இல் முற்றுப் பெற்றதாகவும் குறிப்பிடுகின்றார்.

ஆரம்பத்தில் ஆங்கிலேய ஏகாதிபத்திய இந்திய அரசியலில் இந்து - முஸ்லிம் நிலைமை பற்றியும், பின்னர் இஸ்லாம் பற்றியும், இறைவன் (அல்லாஹ்) பற்றியும், இறை தூதர் (நபிகள் நாயகம்) குறித்தும் அவர்கள் தம் அடியார்கள் (மக்கள்) சம்பந்தமாகவும் வழங்கியுள்ள விடயங்களுக்காக ஒரு பட்டியலைக் குறிப்பிட்டு தனது ஆய்வை முன்வைக்கிறார் நூலாசிரியர்.

இதில் "நமது மகமதிய சகோதரர்கள், வேலூர் மகமதிய கான்ஃபரன்ஸ், ஹிந்து - மகமதிய ஒற்றுமை, இந்து - மகமதியர், இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை, அல்லா.. அல்லா.." போன்ற தலைப்பில் அமைந்த பாரதியாரின் கட்டுரை, கதை, கவிதை, பாடல், சொற்பொழிவு ஆகியவற்றின் சாராம்சம் போன்றவை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

சுதேசமித்திரனில் (1906 ஆகஸ்ட் 11) இடம் பிடித்த, "நீரோ சக்கரவர்த்திக் கல்லறை மீது ஓர் புஷ்பம்" என்ற தலைப்பில் அமைந்த பின்வரும் வரிகள் இங்கு கவனிக்கத்தக்கது. "இந்தியா" ஹிந்துவுக்கு மட்டிலும் சொந்தமில்லை. மகமதியனுக்கும் சொந்தமே. அநாகரீக இடைக் காலங்களில் நமது மூதாதையர்கள் சண்டையிட்டுக் கொண்டதாக அன்னிய தேசத்துப் பொய் சரித்திரக்காரர் கூறும் கதைகளை நாம் கருத வேண்டியதில்லை. பொது மாதாவாகிய பாரத தேவியின் பொது நன்மையை கவனிக்க வேண்டுமேயல்லாமல் ஜாதி, மத, குல, பேதங்களைப் பாராட்டி தேசத்தை மறக்கும் மனிதனை பாரத தேவி சர்வ சண்டாளராகவே கருதுவாள்.

முண்டாசுக் கவிஞரின் "இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை" என்ற தலைப்பில் அமைந்த சொற்பொழிவின் சாராம்சம் இந்த நூலின் 20 ஆம் பக்கம் 30 ஆம் பக்கம் வரை இடம் பிடித்துள்ளது. அந்த சொற்பொழிவில் ஒப்புவிக்கப்பட்ட கருத்துக்களை அவதானிக்கும் போது முண்டாசுக் கவிஞருக்கு முகமது நபி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் மீது மிகுந்த பற்றிருந்ததை அறிய முடிகிறது. இதன் முழுமையான சொற்பொழிவு இன்னும் அற்புதமாக இருந்திருக்கும் என்று குறிப்பிடுக்கின்றார் நம் நூலாசிரியர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முண்டாசுக் கவிஞர் பாரதியார் தமது துணைவியாரின் ஊராகிய கடையத்தில் தங்கிய காலத்தில் நெல்லை மாவட்டத்து பொட்டல் புதூரிலே முஸ்லிம்களின் ஏக இறைவன் அல்லாஹ்வைப் பற்றிய அருமையான பாடல் ஒன்றைப் பாடிய பின்னர் நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம் அன்றைய சுதேசமித்திரனில் இடம்பெற்றிருந்தது.

பிற்காலத்தில் பலராலும் தொகுக்கப்பட்ட பாரதியாரின் கவிதை நூல்களில் மூன்று சரணங்களைக் கொண்ட இந்தப் பாடல் முழுமையாக இடம்பெறவில்லை. *1920.06.24* இல் வெளிவந்த சுதேசமித்திரன் இதழில் இப் பாடல் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் "கதா ரத்னாகரம்" *1920* ஜுலை இதழிலும் வெளி யிடப்பட்டுள்ளது.

மூன்று சரணங்களைக் கொண்ட பாரதி யாரின் "அல்லா" பாடலை வாசகர்களின் இரசனைக்காக இங்கு பதிவிடுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

**(பல்லவி)**

**அல்லா.. அல்லா.. அல்லா!**

**சரணம் 01**

**பல்லாயிரம் பல்லாயிரங் கோடி கோடி யண்டங்கள்**
**எல்லாத் திசையினுமோ ரெல்லையில்லா வெளிவானிலே**
**நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்**
**சொல்லாலு மனத்தாலுந் தொடவொணாத பெருஞ்சோதி**
**(அல்லா)**

**சரணம் 02**

**கல்லாதவ ராயினு முண்மை சொல்லாதவ ராயினும்**
**பொல்லாதவ ராயினுந் தவமில்லாதவ ராயினும்**
**நல்லாருரை நீதியின்படி நில்லாதவ ராயினும்**
**எல்லோரும் வந்தேத்து மளவில் யமபயங்கெடச் செய்பவன்**
**(அல்லா)**

**சரணம் 03**

**ஏழைகட்கும் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர்பிதா**
**கோழைகட்கும் வீரருக்குங் குறைதவிர்த்திடும் ஓர்குரு**
**ஊழி, யூழி, அமரராயிவ் வுலகின் மீதிலின்புற்றே**
**வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர் அவன் பெயர்**
**(அல்லா)**

- சுதேசமித்திரன் *1920.06.24*

மேலே குறிப்பிடப்பட்ட மூன்று சரணங் களிலும் முதலாவது சரணமானது முண்டாசுக் கவிஞருக்கு இருந்த அல்குர்ஆன் பற்றிய அறிவை வெளிக்காட்டுவதாக அமைகின்றது. அதாவது அல்குர்ஆனில் சூரா அல்அன்பியா வில் (நபிமார்கள்) உள்ள 33 ஆவது வசனம் பின்வரும் கருத்தைக் கூறி நிற்கின்றது.

"இன்னும் அவனே இரவையும், பகலையும் சூரியனையும், சந்திரனையும் படைத்தான் (வானில் தத்தமக்குரிய) வட்டவரைக்குள் ஒவ்வொன்றும் நீந்துகின்றன" (அல்குர்ஆன் - *21 : 33*)

மேலுள்ள அல்குர்ஆன் வசனக் கருத்தையே பாரதியாரின் அல்லா என்ற பாடலில் உள்ள முதலாவது சரணம் வெளிப் படுத்து வதாக அமைகின்றது. இந்தப்பாடல் மூலம் பாரதியார் அவர்கள் பல்லாண்டு களுக்கு முன் வாழ்ந்த தமிழக முஸ்லிம் நெஞ்சங்களில் நீங்காத இடத்தைப் பெற்று விட்டார்.

நூலின் *39* முதல் *51*ஆம் வரையான பக்கங்களை பாரதியார் அவர்களின் முஸ்லிம் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எழுதப்பட்ட "ரயில்வே ஸ்தானம்" என்ற சிறுகதை அலங் கரித்துள்ளது. இந்தச் சிறுகதையானது *1920.05.22* ஆம் திகதியில் பிரசுரமான சுதேச மித்திரன் இதழில் பிரசுரம் கண்டுள்ளது.

இந்தக் கதையில் கதாநாயகன் ஏக காலத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று சகோதரிகளைத் திருமணம் செய்வதனால் வரும் பிரச்சினைகள் பற்றி விவரிக்கப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய கொள்கைக்கு முற்றிலும் முரணான ஒரு விடயமாகும். அதாவது சட்டப்படியாக மணம் புரிந்த மனைவி உயிருடன் இருக்கையில் அவளது சகோதரி களை ஏக காலத்தில் திருமணம் செய்வது இஸ்லாத்தில் ஹராமான (கூடாத) விடய மாகும். இஸ்லாமிய நண்பர் ஒருவர் மூலம் பின்னர் அதுபற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்ட பாரதியார், தான் எழுதிய கதையில் கருத்துப் பிழையொன்று இருப்பதாக சுதேசமித்திரனில் குறிப்பொன்றை எழுதி, ஒரே குடும்பத்துப் பெண்கள் என்ற விபரத்தை மாற்றி தன் இனத்தைச் சேர்ந்த மூன்று பெண்களைத் திருமணம் செய்ததாகத் திருத்தி வாசிக்கும்படி வாசகர்களைக் கேட்டுக் கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதேபோல் பாரத நாட்டில் ஹிந்துக்களும் மகமதியர்களும் பகைமைகளற்று சினேக பூர்வமாக சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழ வேண்டும் என்பதையும் பாரதியார் தனது எழுத்துக்களின் மூலம் மிகவும் உறுதியாக முன்வைத்தார். அத்துடன் மகமதியர்களுக்கு இது அன்னிய தேசமன்று. அவர்கள் இங்கே இன்றைக்கு நேற்றைக்கு வந்து குடியிருக்கும் ஜனங்கள் இல்லை. இந்நாடு ஹிந்துக்களுக்கு எவ்வளவு சொந்தமோ, அவ்வளவுக்கு மகமதியர்களுக்கும் சொந்தம் என்று குறிப்பிட்டுள்ளார். “இந்தியா” இதழில் ஹிந்து - முஸ்லிம் ஒற்றுமை பற்றி மேலும் வலியுறுத்த விரும்பிய பாரதியார், தமிழ் ஆண்டு - மாதம் - நாள் ஆகிய வற்றுடன் முஸ்லிம் ஆண்டு - மாதம் - நாள் முதலியவற்றையும் முதன் முதலாக “இந்தியா” இதழில் பொறித்து இதழியல் துறையில் அதிசயம் புரிந்தார். எனவே இந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமை எனும் கயிற்றைப் பிடித்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் பெரும் விருப்புடையவராகவே முண்டாசுக் கவிஞர் திகழ்ந்துள்ளார்.

இன்றைய பரந்த பாரதத்திலும் இலங்கை யிலும் வாழுகின்ற இந்துக்களும் முஸ்லிம்களும் ஒரு தாய் மக்களாக இணைந்து வாழ கரம் கோர்த்து விடுவார்களேயானால் அதுவே நம் நூலாசிரியரின் பேனாவுக்கு கிடைத்த மாபெரும் வெற்றி என்று குறிப்பிட்டு இந்த நூலை நிறைவு செய்கின்றார் மானா மக்கீன் அவர்கள்.

இதுவரை நான் வாசித்த இலக்கிய நூல் கள் பலவற்றில் மானா மக்கீன் அவர்களின் “ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்” என்ற இந்த நூல் என்னை பிரமிக்கச் செய்த ஒரு நூல் என்றுதான் குறிப்பிட வேண்டும். இவ்வகையான நூல்கள் இக்காலத்தில் இன ஒற்றுமையை வலுப்படுத்தத் தேவையான ஒரு நூலாகவே அமைந்துள்ளது. மறுபதிப்புச் செய்ய வேண்டிய தேவையையும் இந்த நூலுக்கு இருக்கிறது. நூலாசிரியர் அதனையும் கருத்திற்கொள்வார் என்று நினைக்கின்றேன். நூலாசிரியர் நீடுழி வாழ்ந்து, இன்னும் பல காத்திரமான இலக்கிய நூல்களைத் தர வேண்டும் என்று பிரார்த்தனையுடன், எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்!!!

○○○

## அழகான ஓர் ஆரம்பம்!

கரிய இரவைக் கொன்று தின்று
உதிக்கின்றது
ஒரு வெம்மைச் சூரியன்

திரள் மேகத்தைக் கிழிக்கையிலே
கொட்டுகின்றது
ஒரு குளிர் மழை

வீரியத்துடன் விதையை அழித்து
துளிர்க்கின்றது
ஒரு பச்சைத் தளிர்

பிரசவ வலியின் முடிவிலே
ஜனிக்கின்றது
ஒரு சிறு ஜீவன்

நீண்டதொரு மௌனத்தை
உடைக்கையிலே
ஊற்றெடுக்கின்றது
ஓர் உன்னதக் காதல்

உயிர்க் காதலின் முறிவிலே
உணரப்படுகின்றது
ஓர் உண்மை நட்பு

பாறையின் தூக்கத்தைத் தட்டி
எழுப்புகையிலே
விழிக்கின்றது
ஒரு கவின்கலை சிற்பம்

பட்டுப் பூச்சிகளின் மரணத்திலே
பிறக்கின்றது
ஒரு காதல் மணப்பட்டு

பருவத்தின் அறியாமையை
இழக்கையிலே
பூக்கின்றன
நற்பண்புகளும் பொறுப்புகளும்

தோல்விப் படிகளின் கடைசியிலே
ஆரம்பித்திடும்
ஒரு வெற்றியின் ஏணிப்படி

எல்லாவற்றிலுமே முடிவென்பது
அழகான ஓர் ஆரம்பமே..!

**கவிவர்ணா** – ஓங்கிலாறு, முல்லைத்தீவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கலாபூஷணம் கே.பொன்னுத்துரை**

# சம கால கலை இலக்கிய நிகழ்வுகள்





## வித்தியாநிதி பேராசிரியர் சோ. சந்திரசேகரன் இரண்டாவது நினைவுப் பேருரை

கொழும்புத் தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 06.04.2024 அன்று பேராசிரியர் தை. தனராஜ் தலைமையில் பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்களின் இரண்டாவது நினைவுப் பேருரை இடம்பெற்றது. வரவேற்புரையை கலாநிதி ச.அதிரன் நிகழ்த்தினார். நினைவுப் பேருரையை "தொலைந்த இடத்தில் தேடுவோம்" என்ற தலைப்பில் பேராசிரியர் சி. மௌனகுரு நிகழ்த்தினார். "இலங்கையில் கல்வியின் வரலாறுச் செல்நெறிகள்", "சர்வதேசக் கல்வி முறைகளின் செல்நெறிகள்" ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன. நன்றியுரையை ச. இந்திரகுமார் நிகழ்த்தினார். இந்நிகழ்வை பேராசிரியர் சோ. சந்திரசேகரன் ஞாபகார்த்த மன்றம் ஏற்பாடு செய்திருந்தது.

●●●

## தெளிவத்தை ஜோசப் அவர்களின் "மாறுதல்கள்" நாவல் வெளியீடு



மலையக மூத்த எழுத்தாளர் "சாகித்ய ரத்னா" தெளிவத்தை ஜோசப் அவர்கள், கனடா "தாய் வீடு" இதழில் தொடராக எழுதிவந்த "மாறுதல்கள்" என்ற நாவலின் வெளியீட்டுவிழா பாக்யா பதிப்பகத்தின் ஏற்பாட்டில் கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 07.04.2024 அன்று "சாகித்ய ரத்னா" மருத்துவர் தி. ஞானசேகரன் தலைமையில் நடைபெற்றது.

முதற்பிரதியை இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில், ஜோசப் அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். மங்கல விளக்கேற்றலைக் தொடர்ந்து ஊடகவியலாளர் கே. போன்னுத்துரை வரவேற்புரை நிகழ்த்தினார். நூல் வெளியீட்டுரையை சுப்பையா கமலதாசன் வழங்கியபோது, ஜோசப் அவர்களின் ஏனைய படைப்புகளும் நூலுருப் பெறவேண்டும் என்ற ஆதங்கத்தையும் வெளியிட்டார்.

நூலின் நயவுரையை வசந்தி தயாபரன் வழங்க, எழுத்தாளர் அல் - அஸூமத் கருத்துரை வழங்கினார். தமிழகத்திலிருந்து வருகை தந்திருந்த எழுத்தாளர் எஸ். இஸட். ஜெய்சிங் கருத்துரை வழங்கியதோடு சங்க நூலகத்திற்கு தனது நூல்களையும் அன்பளிப்புச் செய்தார்.

நிகழ்வை ஏற்பாடு செய்த மல்லியப்புசந்தி திலகர் நிகழ்வைத் தொகுத்து வழங்கினார். நன்றியுரையை தெளிவத்தை ஜோசப் அவர்களின் பேரன் ஆதிப் வழங்கினார்.

●●●

## "ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு" நூலின் அறிமுகவிழா



கொழும்பு கலை இலக்கிய, ஊடக நண்பர்கள் வட்டம் நடத்திய, "சமூக சிற்பி" வி.எஸ். துரைராஜா அவர்களைப் பற்றி, என்.கே. துரைசிங்கம் தொகுத்து தென்மர் வெளியீடு செய்த "ஒரு சமூக சிற்பியின் பட்டறிவு பகிர்வு" நூலின் அறிமுகவிழா கொழும்புத் தமிழ்ச் சங்க விநோதன் மண்டபத்தில் சாகித்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரத்னா மருத்துவர் தி. ஞானசேகரன் அவர்களின் தலைமையில் இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் முன்னிலையில் 02.04.2024 அன்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக மலையக மக்கள் முன்னணி சிரேஷ்ட உப தலைவர் முனைவர் சிவலிங்கம் சதீஷ்குமார், தினகரன் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில் தமிழ்வாழ்த்தினை கொழும்பு சைவமங்கையர் வித்தியாலய மாணவிகள் இசைக்க, வரவேற்புரையை திருமதி லீலாவதி மோகனசுந்தரம் நிகழ்த்தினார்.

சிவஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபு சர்மா, கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் ரி.அரியரடனம், சிரேஷ்ட சட்டத்தரணி திருமதி சுகந்தி இராஜகுலேந்திரா ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். முனைவர் சிவலிங்கம் சதீஷ்குமார் சிறப்புரையாற்றினார்.

நூலாசிரியரை சமூகவியலாளர் ஆரோக்கியம் பிரான்சிஸ் அறிமுகம் செய்து வைத்தார். சிரேஷ்ட ஊடகவியலாளர் திருமதி உமாசந்திரா பிரகாஷ் நூல் அறிமுகம் செய்தார்.

நன்றி உரையை ஊடகவியலாளர் கே.பொன்னுத்துரை வழங்கினார். தொடர்ந்து சமூக சிற்பி வி.எஸ்.துரைராஜா ஏற்புரை வழங்கினார்.

●●●

## வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது 2023



கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவகமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவகமும் இணைந்து வழங்கிவரும் வவுனியூர் இரா. உதயணன் இலக்கிய விருது 2023. இம்முறை வவுனியா வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய கலாசார மண்டபத்தில் 28.04.2024 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் தலைமையில் தமிழ் இலக்கிய பெருவிழாவும் "வளர் தமிழ் கலைச்சொற்கள்" நூல் அறிமுகமும் இடம்பெற்றது.

வவுனியூர் இரா. உதயணன் முன்னிலையில், முதன்மை விருந்தினர்களாக பேராசிரியர் த. மங்களேஸ்வரன், பேராசிரியர் வ. மகேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். ஊடக விருந்தினர்களாக திருமிகு. இ. பாரதி, திருமிகு. எஸ் ஸ்ரீகஜன், திருமிகு. வி.பிரபாஹறன் ஆகியோர் கலந்து கொண்டனர். வரவேற்புரையை எழுத்தாளர் திருமதி மைதிலி தயாபரன் வழங்கினார், தொடக்கவுரையை கதிர் சுவர்ணராஜா நிகழ்த்தினார். கவிஞர் மைக்கல் கொலின் கவிவாழ்த்தினை இசைத்தார். வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.

தொடர்ந்து பேராசிரியர் சபா. ஜேயராசா அவர்களின் "வளர் தமிழ் கலைச்சொற்கள்" நூல் அறிமுகத்தை பேராசிரியர் வ. மகேஸ்வரன் வழங்கினார்.

இந்நிகழ்வில் திரு. சின்னத்தம்பி ஸ்ரீ இராமகிருஷ்ணா, திருமதி கமலநாயகி ஸ்ரீ இராமகிருஷ்ணா ஆகியோரின் ஞாபகார்த்தமாக விருதுகளும் வழங்கப்பெற்றன.

அதி உயர் இலக்கிய விருது, வாழ்நாள் சாதனையாளர் விருது, சிறந்த ஆவணவாக்கல் சேவை விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது, சிறந்த இளம் ஊடகவியலாளர் விருது. சிறந்த நாவல் இலக்கிய விருது, சிறந்த சிறுகதை இலக்கிய விருது, சிறந்த கவிதை இலக்கிய விருது, சிறந்த சிறுவர் இலக்கிய விருது, சிறந்த தமிழ் வளர்ச்சி இலக்கிய விருது, சிறந்த மொழிபெயர்ப்பு இலக்கிய விருது, சிறந்த இன நல்லிணக்க இலக்கிய விருது, சிறந்த அயலகப்படைப்பு விருது இலக்கிய விருது, என்பன வழங்கப்பெற்றன.


விருது பெற்றவர்கள் சார்பில் திருமதி. கோகிலா மகேந்திரன் அவர்களும், அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரும் ஏற்புரை வழங்கினர்.


நன்றியுரையை தமிழ்த்தென்றல் தம்பு சிவா அவர்கள் வழங்கினார். நீண்ட இடைவெளிக்குப்பின் வவுனியா ஒரு தமிழ் இலக்கிய பெருவிழாவைக் கண்டது குறிப்பிடத்தக்கது.

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## கொழும்புத் தமிழ்ச் சங்க நிறுவனர் தினம்

கொழும்புத் தமிழ்ச் சங்க நிறுவனர் தின நிகழ்வு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் 05.05.2024 அன்று சங்கத்தின் தலைவர் கலாநிதி க.இரகுபரன் தலைமையில் நடைபெற்றது.

"உலகத் தமிழ் இலக்கிய வரைப்படம்" என்ற தலைப்பில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. ராமசாமி உரையாற்றினார்.

பேராசிரியர் அ. ராமசாமி அவர்களுக்கு ஞானம் பிரதம ஆசிரியர் 'சாகித்திய ரத்னா' தி.ஞானசேகரன் அவர்கள், ஞானம் "ஈழத்துப் புலம்பெயர் இலக்கியம்" சிறப்பிதழைச் சங்கத்தின் சார்பாக பரிசாக வழங்குவதையும் படங்களில் காணலாம்.

OOO

# வாசகர் பேசுகிறார்

ஏப்ரல் மாத ஞானம் இதழ் கிடைக்கப் பெற்றேன். 23ஆம் பக்கத்தில் உள்ள சிறுவர் பாடல்கள் பற்றிய கட்டுரையில் பிரசுரமாகியுள்ள "முறுக்கு" என்ற பாடலை யாத்தவர் அமரர் வ.இராசையா என்பதையும், அப்பாடல், சாகித்திய விருது பெற்ற "சந்தனக் கிண்ணம்" என்ற அவரது நூலில் இடம்பெற்றுள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**– வசந்தி தயாபரன்**

●●●

ஞானம் (287) 25.04.2024 அன்று கிடைத்தது, நன்றி. அதில் இடம்பெற்று இருந்த "ஔவையார்" பற்றிய கட்டுரையைப் படித்தேன். நாட்டிய கலாநிதி கார்த்திகா கணேசர் அவர்கட்கு நன்றி. எனினும் அதில் வந்த பாடல் பற்றிய என் பழைய நினைவுகளை மீட்டுகிறேன். முடியுடை மூவேந்தர்களால் வஞ்சிக்கப்பட்ட பாரி, இறந்துபோக, அவரது பறம்புமலை நாடும், அவரது செல்வங்களான அங்கவையும் சங்கவையும் அநாதைகள் ஆயினர். வேதனையோடு ஔவைப்பாட்டி அவர்களுக்கு ஆறுதல் சொல்லப் போகிறார். ஆனால் அவர்களோ, அவரை ஏற்று, வள்ளலின் அடிச்சுவட்டில் அவருக்கு பரிசில் வழங்குகின்றனர். திகைத்துப்போன ஔவைப்பாட்டி அப்போது பாடிய பாடலே அது. சற்று தவறுகளுடன் வெளிவந்தது.

இதோ பாடல்:

**"பாரி கொடுத்த பறியும், பழைய நூர்க்**
**காரி அன்றீய்ந்த கலைக் கோலும், சேரமான்**
**வாராய்! என அழைத்த வாய்மொழியும், இம்மூன்றும்**
**நீலச் சிற்றாடைக்கு நேர்"**

**– மா.குலமணி, நயினாதீவு.**

●●●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

அதாவது அந்தச் சுயம்வரத்திலே இந்துமதி தனது மணவாளனாகத் தெரிவு செய்யாத மன்னர்களின் முகங்கள் யாழ்ப்பாணத்து ஆரியச் சக்கரவர்த்தியின் இடபக் கொடியைக் கண்டு புறங்கொடுத்த அரசர்களின் ஒளிகுன்றிய முகங்களை ஒத்திருந்தன என உவமை கூறுகின்றார்.



இலங்கையிலே நந்தி உருவம் பொறித்த நாணய வகைகளில் சில கிடைக்கப்பெற்றுள்ளன. இங்கு காட்டப்பெற்றுள்ள நாணயத்திலே இரு விளக்குகளுக்கு மத்தியிலே மூன்று கோடுகள் - தளங்கள் கொண்ட மேடையின்மீது வலப்புறம் நோக்கியவாறு நந்தியின் உருவம் அமைந்துள்ளது. இதிலே பிறையும் காணப்பெறுகின்றது. இந்த வகை நாணயங்கள் இலங்கையில் மாத்திரமே கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆய்வாளர்கள் பதிவுசெய்துள்ளனர். இவ்வகை நாணயங்கள் 'பாண்டிய நாணயங்கள்' என்று பொதுவாக அழைக்கப் பெறுகின்றன. இதற்குக் காரணம் நாணயத்தின் மறு புறத்திலே மீன்கள் காணப்பெறுவதாகும்.



இந்தவகை நாணயங்கள் பற்றிய விரிவான விபரங்களை தொடர்ந்துவரும் கட்டுரைகளில் விபரிபோம். இந்த நாணயங்களில் சிறப்பம்சம் என்னவெனில் கிடைக்கப்பெற்றுள்ள நாணயங்களில் சிலவற்றிலே இடதுபுறம் நோக்கியவண்ணம் உள்ள நந்தியின் உருவமுள்ளது. இவ்வாறு இடதுபுறம் நோக்கிய நந்தியுள்ள நாணயங்கள் சொற்பமாகவே கிடைக்கப்பெற்றுள்ளன. நந்தியின் நோக்கும் திசை பற்றி இங்கு குறிப்பிட ஒரு முக்கிய காரணமுண்டு. இந்த நாணயங்களில் நந்தி நோக்கும் திசையின் அடிப்படையிலே அதன் தூக்கப்பெற்றுள்ள முன்னங்கால்கள் வேறுபடுகின்றன. வலதுபுறம் நோக்கும் நந்திக்கு இடது முன்னங் காலும், இடதுபுறம் நோக்கும் நந்திக்கு வலது முன்னங்காலும் தூக்கப்பட்டிருக்கும். பொதுவாகச் சிவன் ஆலயங்களில் சிவனை நோக்கியுள்ள நந்தியின் வலது முன்னங் கால்தான் தூக்கப்பட்டிருக்கும். ஆனால், இந்தியாவிலுள்ள திருவண்ணாமலை ஆலயத்திலே ஒரு சந்தர்ப்பத்தின்போது நந்தி கால் மாற்றி அமர்ந்து முகாலய மன்னனொருவனை திகைப்படையச் செய்ததென்று புராணச் செய்திகள் உண்டு. இதன்படி அக்கோயிலிலுள்ள ஒரு நந்தியின் இடது முன்னங்கால் தூக்கப்பெற்றிருக்கும்.









Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/29/2024



பிற்காலத்தில் ஆரிய சக்கரவர்த்திகள் வெளியிட்ட சேது நாணயங்களில் நந்தியின் உருவம் பொலிவும் தெளிவும் பெற்றன எனலாம். நந்தியின் செவிகளின் அமைப்பு, கால்களில் அணிந்துள்ள பூண்கள், கழுத்தில் அணிந்துள்ள மணிகள் போன்றன மிகமிக நுட்பமாக நாணயங்களில் பொறிக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஆரிய சக்கரவர்த்திகள் பலவகையான சேது நாணயங்களை வெளியிட்டுள்ளார்கள். இவற்றிலே அறிந்தவரையில் ஒருவகை நாணயத்தைத் தவிர பிற வகைகள் அனைத்திலும் நந்தியின் உருவமானது இடதுபுறம் நோக்கியதாகவும் கோயில்களில் உள்ளது போன்று அதன் வலது முன்னங்கால் தூக்கிய வண்ணமும் காணப்பெறும். ஒருவகை சேது நாணயத்திலே நந்தியானது வலதுபுறம் நோக்கியவண்ணமும் அதன் இடது முன்னங்கால் தூக்கப்பட்டும் பொறிக்கப்பட்டிருக்கும். நிற்கும் மனித உருவத்துக்கு அருகிலே பொறிக்கப்பெற்ற மிகச்சிறிய நந்தியுருவம் கொண்ட இந்த வகைச் சேது நாணயங்கள் கிடைப்பதற்கு மிகமிக அரியனவாகும். கிடைக்கப்பெறினும் நந்தியின் உருவம் சிதைவடைந்த நிலையிலேதான் அனேகமாகக் கிடைக்கப்பெறும். இங்கு காட்டப்பட்ட நான்கு நாணயங்களிலேயும் நந்தியின் உருவம் சிதைந்த, தெளிவற்ற நிலையிலே உள்ளமையைக் கண்டுகொள்ளலாம்.





இக்கட்டுரையிலே நந்தியைப் பற்றி மாத்திரமே யாம் உரையாடினோம். இங்கு காட்டப்பட்ட நாணயங்களின் விபரங்கள் பின்னர் விபரிக்கப்படும்.

தொடரும்

9 772478 034009
ISSN 2478-0340
PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. TEL: 0112330195

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org